விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 03 திங்கட்கிழமை (17.06.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 180

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வேடிக்கை வேண்டாம்

# இந்தியாவே தலையிடு!

## புதுடில்லி மாநாட்டில் தீர்மானம்

**இந்திய -இலங்கை உடன்பாட்டை மீறும் இலங்கை அரசாங்கத்தை வேடிக்கை பார்க்காமல், அதனைக் காப்பாற்ற இந்திய மத்திய அரசு உடனடியாகத் தலையிட வேண்டும் என்று புதுடில்லியில் நடைபெற்ற மாநாட்டில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பனின் ஏற்பாட்டில், இலங்கை தமிழ் தலைவர்கள் மாநாடு-2013 என்ற பெயரில், புதுடில்லியில் இரண்டு நாள் மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது.

இந்த மாநாட்டில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான வீ.ஆனந்தசங்கரி, வடகிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் வரதராஜப்பெருமாள், ஈழ தேசிய ஜனநாயக முன்னணியின் தலைவர் ஞா.ஞானசேகரன் மற்றும் புலம்பெயர் தமிழர்கள் பலரும் பங்கேற்றனர்.

நேற்றுமுன்தினம் இந்த மாநாட்டின் (20ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தர் மீது துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கி சூட்டுக்காயத்துடன் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட புதுக்குடியிருப்பு பகுதியிலுள்ள காட்டுப்பகுதியில் மாடு மேய்த்துக்கொண்டிருக்கும் போது இவர்மீது துப்பாக்கி தோட்டா பாய்ந்துள்ளது. நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியைச் சேர்ந்த கே.சுபாஸ்கரன் (வயது -33) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் முல்லைத்தீவு மாவட்ட வைத் (20ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் மத மோதல்

### 12 பேர் காயம்



(மட்டக்களப்பு)

வாழைச்சேனைப் பிரதேசத்திலுள்ள சுக்கான்கேணி பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இரு மதப்பிரிவினருக்கு இடையிலான மோதல்களில் மதபோதகர் ஒருவர் உள்ளிட்ட 12 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறி சித்திவிநாயகர் ஆலய நிர்வாகிகளுக்கும், மெதடிஸ்த மிஷன் திருச்சபையினருக்கும் இடையிலேயே இம்மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

அப்பகுதியிலுள்ள சிறி சித்தி விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேக காலத்தின் காலை பூசை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை, அங்குள்ள மெதடிஸ்த திருச்சபை தேவாலயத்திலும் வழிபாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன.

அப்போது திருச்சபையில் வழிபாடுகள் ஒலிபெருக்கி மூலம் நடைபெறுவது தமது பூசைகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்துகிறது என்று சிறி சித்திவிநாயகர் ஆலய நிர்வாகிகள் கூறியதை அடுத்தே, இம்மோதல்கள் இடம்பெற்றதாக தெரியவருகின்றது.

இதையடுத்து அந்தத் திருச்சபை தேவாலயமும் அதன் அருகில் இருந்த வீடொன்றும் தாக்குதலுக்கு இலக் (20ஆம் பக்கம் பார்க்க)

## சிறப்பு தூதுவரை நியமிக்கிறது இந்தியா

இலங்கைக்கு சிறப்பு தூதுவர் ஒருவரை நியமிப்பது குறித்து இந்திய பிரதமர் மன்மோகன் சிங் ஆலோசித்து வருவதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்திய - இலங்கை உடன்பாட்டை மீறும் இலங்கையின் போக்கினால் கவலையடைந்துள்ள இந்திய பிரதமர், அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையிலும், ராஜபக்ஷ அரசாங்கத்துடன் தொடர்ந்து பேச்சுக்களை நடத்தும் வகையிலும், இந்த சிறப்புத் தூதரின் நியமனம் அமையும் என்று கருதப்படுகிறது.

காங்கிரஸ் அரசாங்கம் எதிர்க்கட்சிகளும் இலங்கை விவகாரத்தில், இணைந்து செயற்படுவதை விரும்புவதாகத் தெரிகிறது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுக்கு அமெரிக்க அதிபர்கள் இத்தகைய சிறப்பு தூதுவர்களை நியமிப்பது வழக்கம்.

அதுபோன்றதொரு சிறப்புத் தூது (20ஆம் பக்கம் பார்க்க)

## வாஸ் குணவர்த்தன இடைநிறுத்தம்

பம்பலப்பிட்டி வர்த்தகர் கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூவரும் அவர்களது பதவிகளிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இக் (20ஆம் பக்கம் பார்க்க)

## கலாசார உடை அணிய முஸ்லிம்களுக்கு தடை

### கோருகிறது பொது பல சேனா

முஸ்லிம்கள் கலாசார உடை அணிவதற்கு இடமளிக்கக் கூடாது என பொது பல சேனா அமைப்பு கோரியுள்ளது.

குறிப்பாக முஸ்லிம்களின் நிகாப் மற்றும் புர்கா ஆகிய கலாசார உடைகளை அணிய அனுமதியளிக்கக் கூடாது என பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் கோரியுள்ளார்.

இலங்கை அரேபிய நாடாக மாற்றமடைவதனை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முஸ்லிம் பெண்கள் இந்த ஆடைகளை அணிவதனால் சிரமம் ஏற்படுவதாக சில வங்கிகள் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பெண்கள் முகத்தை மூடிக் கொண்டு வருவதனால் அடையாளம் காண்பதில் சிக்கல் நிலைமை காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். (செ-11)

## ஈழ அகதிகள் மீது ஆஸியில் தாக்குதல்



அவுஸ்திரேலியா- மெல்பேர்ன் நகரில் உள்ள சன்சயின பகுதியில் ஈழ அகதிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் சனிக் கிழமை இரவு 7.30 மணியளவில் இரண்டு பேர் கடைக்கு சென்று விட்டு, வீடு திரும்பிக் கொண்டிருந்த போது கறுப்பினத்தைச் சேர்ந்த சுமார் பத்து பேர் இவர்களை வழி மறித்து தாக்கியுள்ளனர்.

இச்சம்பவத்தில் ஒருவர் கடுமையான தாக்குதலுக்கு இலக்காகி மயங்கிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்றைய நபர் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

தாக்குதலுக்கிலக்கான ஈழ அகதியிடமிருந்து ரூபா. 50, 000, ஐபாட் மற்றும் தொலைபேசி என்பவற்றையும் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு (20ஆம் பக்கம் பார்க்க)

UK, Australia, Canada, Malaysia, Singapore
விரும்பிய நாடு சென்று பணம் சம்பாதிப்பதற்கான
வருமானத்துடன் கூடிய
தொழிற்பயிற்சி & தொழில் வாய்ப்பு
(உணவு, தங்குமிட வசதி இலவசம்)
வெளிநாட்டு பல்கலைக்கழகப் பிரதிநிதியை
நேரில் சந்தித்து அனுமதி பெற
பிரவேசம் இலவசம்
இன்று திங்கள் »» கிளிநொச்சி சோலைவனம்
நாளை ஜூன் 18 செவ்வாய் »» யாழ்ப்பாணம் சிகரம் விரிவுரை மண்டபம்
முற்பதிவுகளுக்கு 0773 616 798
சிகரம்
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 00 11 நேரடி: 0773 616 798

அண்ணா உற்பத்திப் பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
சகலபொருட்களையும் குறைவான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
அண்ணா சுப்பர் இன்
கே.கே.எஸ்.வீதி,
இணுவில்.
தொ.பே: 021 321 8143
(க-3621)
ANNA COFFEE
Superbly blended & Roasted to a strict formula

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்





எழுத்துப் பணியில் 60 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம். கோபாலரத்தினம் அவர்களின் பாராட்டு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் சேர். பொன். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் வாழ்நாள் பேராசிரியரும் துணைவேந்தருமான பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

வண்ணைக் கலைவாணர் நாடக மன்றத்தின் ஏற்பாட்டில் நடந்த இக் கௌரவிப்பு நிகழ்வின் காட்சிகள்...

# மணிவண்ணனின் உடல் தீயுடன் சங்கமம்



(சென்னை)

மறைந்த இயக்குநர், நடிகர் மணிவண்ணனின் உடல் நேற்று மாலை தகனம் செய்யப்பட்டது.,

இவருக்கு மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், சினிமாத் துறையினர் மற்றும் இரசிகர்கள் உள்ளிட்ட பல் ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்தினர்.

அதேபோல மணிவண்ணனின் குருவான இயக்குநர் பாரதிராஜாவும் நேற்று நேரில் வந்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

நேற்று முன்தினம் மாரடைப்பால் உயிரிழந்த மணிவண்ணனின் உடல், அவரது வீட்டிலிருந்து ஊர்வலமாக போரூர் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தகனம் செய்யப்பட்டது.

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகவும் உதவியாகவும் செயற்பட்ட மணிவண்ணன், ஈழத்தமிழர்களின் உண்மை நண்பராக விளங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)


## 10-ம் ஆண்டு நினைவஞ்சலி



யாழ் கொய்யாத் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும்
யாழ் கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர்

**கந்தையா சிவராசா (சின்னக்கிளி)**

(யாழ் தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலை)
(அற்றன்டன்)

ஆழியிலே கண்டெடுத்த நல்முத்தே
பூமியிலே வந்துதித்த புருஷோத்தமரே
பாதியிலே பிரிந்துவிட்டீர் பரிதவிக்கிறோம்
நாதியற்றுப்போனீர் நல்லவரே
நம் இதயம் கனக்கிறது
என்றும் விழிநீர் சொரிந்து அஞ்சலிக்கிறோம்
ஓம் சாந்தி!

மலர்வு 28.02.1933
உதிர்வு 19.06.2003

கட்டுவன் மேற்கு.
தெல்லிப்பளை

என்றும் பாச நினைவுகளோடு
அன்பு மனைவி சி.அன்னரத்தினம்
பாசமிகு பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(3045)

## செல்லா சினிமா யாழ்ப்பாணம்




## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்





# இலங்கைக் கொடியுடன் மீன்பிடிக்க சீன கப்பல்களுக்கு அனுமதி !

சர்வதேச கடற்பரப்பில் இலங்கைக் கொடியுடன் மீன்பிடிக்க சீன மீன்பிடிக் கப்பல்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபையுடன் சீனாவின் நிறுவனமொன்று ஏற்படுத்திக் கொண்டுள்ள உடன்பாட்டை அடுத்தே, இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி சர்வதேச கடற்பரப்பில் இலங்கை கொடியுடன் மீன்பிடிக்க சீன நிறுவனத்தின் மீன்பிடிப் படகுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த உடன்பாட்டின் பிரகாரம் பிடிக்கப்படும் மீன்களில் 90 சதவீதமான மீன்கள் சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் எனவும், எஞ்சிய 10 சதவீதமான மீன்கள் கிலோவுக்கு ஒரு டொலர் வீதம் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக சுமார் 150 அடி நீளம் கொண்ட நான்கு மீன்பிடிக் கப்பல்களை முதலில் பயன்படுத்த திட்டமிட்டுள்ள குறிப்பிட்ட சீன நிறுவனம், மேலும் 16 மீன்பிடிக் கப்பல்களை பின்னர் பயன்படுத்தவும் முடிவு செய்துள்ளது.

இந்த மீன்பிடிக் கப்பல்களை தெகோவிற்ற மீன்பிடித் துறைமுகத்தில் தரித்து நின்று செயற்படும் எனவும், முதற்கட்டமாக வந்துள்ள நான்கு மீன்பிடிக் கப்பல்கள் இலங்கை படைத்துறை அமைச்சின் அனுமதிக்காக தெற்கு கடற்பகுதியில் தரித்து நிற்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# உண்மைக்குப் புறம்பான செய்தி சாவகச்சேரி கை.வணிகர் மன்றம் அறிக்கை

(சாவகச்சேரி)

கடந்த 07.06.2013-ம் திகதி சாவகச்சேரியில் நடைபெற்ற உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வரி விழிப்பூட்டல் கருத்தரங்கு தொடர்பாக, பத்திரிகையொன்றில் வெளிவந்த செய்தி முற்றிலும் தவறானது என்பதோடு உண்மைக்கு மாறானது என்பதைச் சுட்டிக்காட்டி சாவகச்சேரி கைத் தொழில் வணிகர் மன்றம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

மன்றத்தின் தலைவர் வி.சிறிபிரகாஸ், செயலாளர் கே.சுதாகரன் ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.பிராந்திய பிரதி ஆணையாளர் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் தென்மராட்சி உதவி பிரதேச செயலர், சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்ற தலைவர், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் ஆகியோர் பிரசன்னமாகி இருந்தார்கள். அத்துடன் பெருமளவு வர்த்தகர்களும், பாடசாலை மாணவர்களும் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

இக் கருத்தரங்கில் கலந்து கொண்ட பேச்சாளர்கள் அனைவரும் வரி செலுத்துவதன் முக்கியத்துவம் பற்றியும் அதன் மூலம் தங்கள் தங்கள் பகுதிகளுக்கான அபிவிருத்தி, வரி பரிமாற்றம், செலவு என்பன பற்றியும் மற்றும் தற்போதைய இறைவரித் திணைக்களமும் அதன் பிரதி ஆணையாளரும் வணிகர்களோடு கொண்டுள்ள உறவும் புரிந்துணர்வான செயற்பாடும் என்ற தொனிப் பொருளில் உரையாற்றினார்களே தவிர, குறித்த செய்தியில் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு விடயமும் அங்கு தெரிவிக்கப்படவில்லை.

அத்துடன் வணிகர்கள், பொதுமக்கள் தமது பிரச்சினை குறித்து வினா கேட்பதற்கு நேரம் ஒதுக்கப்பட்டபோதும் எந்த ஒரு வணிகர்களும் பொது மக்களும் வினா எழுப்பவில்லை. தமக்குப் போதிய விளக்கம் தந்தமையையிட்டு திருப்தியும், நிறைவும் அடைந்ததாகவே கூறினார்கள்.

எமது வணிகர்களின் நலனுக்காகவும் அவர்களை வழிநடத்துவதற்காகவும் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

உண்மைக்குப் புறம்பான செய்தியால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு ஏற்பட்ட இடையூறுக்காக தாம் மனம் வருந்துவதாகவும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# குழு மோதலில் கை துண்டானது

(யாழ்ப்பாணம்)

இரு இளைஞர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலின் போது இளைஞன் ஒருவரின் கை பறி போயுள்ளது.

யாழ்.கொண்டலடி பகுதியில் நேற்று ஆரம்பமான இசை நிகழ்ச்சியின் போது இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட வாய் தர்க்கம் கைகலப்பாக மாறி வாள் வெட்டில் முடிபடைந்தது.

அதிகாலை 2 மணியளவில் நடைபெற்ற இவ்வாள் வெட்டில் திருநெல்வேலி பாரதிபுரத்தை சேர்ந்த ச.பிரசன்னா (வயது-18) என்ற இளைஞனுக்கு உள்ளங்கையில் பாரிய வெட்டு விழுந்து உள்ளங்கை துண்டாடப்பட்டது. இதனை அடுத்து வெட்டுக்கு இலக்கான நபர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார். (செ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### சும்மா இருப்பது

ஒரு சொற்பொழிவு மண்டபம். அங்கே, "மௌனவிரதம்" என்ற தலைப்பில் ஒருவர் மணிக்கணக்காக உரையாற்றிக் கொண்டிருந்தார்.

நான்கு நண்பர்கள் அவரது உரையை கேட்டுக் கொண்டிருந்தனர்.

மறுநாட்காலையில் அவர்கள் நான்கு பேரும் ஓரிடத்தில் கூடி ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

அதாவது இப்போது முதற்கொண்டு இன்னும் ஒரு வாரத்துக்கு நாம் நால்வரும் மௌனவிரதம் இருக்க வேண்டும் என்று தீர்மானம் செய்தார்கள்.

அவ்வளவு தான்.

எல்லோரும் வாயை மூடிக் கொண்டார்கள். மௌன விரதம் ஆரம்பமானது.

சிறிது நேரம்தான் அதற்குள் ஒருவன் "இப்பத்தான் ஞாபகம் வருகுது நான் எங்க வீட்டு அடுப்பில் நெருப்பை அணைச்சேனா... இல்லையா என்று தெரியவில்லை" என்றான்.

உடனே அருகில் இருந்தவன்;

"அடப்பாவி... பேசிவிட்டாயே... நம்ம மௌன விரதம் என்ன ஆச்சு? என்றான்.

உடனே மூன்றாமவன்...

"இப்ப நீ மட்டும் என்ன? நீயும் தானே பேசி விட்டாய்..." என்றான்.

இச் சமயத்தில் நாலாமவன்;

"நல்ல வேளை... நான் ஒருத்தன் தான் பேசாமல் இருக்கிறேன்" என்றானாம். இப்போது என்ன ஆச்சு?

எல்லோரும் பேசியாகிவிட்டது. மௌனவிரதம் கலைந்து விட்டது. இப்படி ஒரு வேடிக்கைக் கதையைப் பெரியவர்கள் சொல்வதுண்டு.

சும்மா இருப்பதென்பது சிரமமான காரியம்தான். வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று நினைப்பவர்கள் சும்மா இருக்கக்கூடாது.

ஆனால், ஆன்மீகத்தைப் பொறுத்தவகையில் சும்மா இருப்பவனே சுகம் அடைகிறவன்.

மௌலங்கப்பட்டர் என்று ஒருத்தர் இருந்தாராம். அதிகம் படித்தவர், அனைத்தும் தெரிந்தவர். பெரிய மேதை அவர். ஒருநாள் புத்தரைத் தேடி வந்தாராம்.

அவரது சபையில் கேள்விகளின் பட்டியல் இருந்தது. புத்தரிடம் கேட்டு தெரிந்து கொள்வதற்காகப் பல கேள்விகளைத் தயார் செய்து கொண்டு வந்திருந்தார்.

புத்தர் அவரைப் பார்த்ததும் என்ன சொன்னார் தெரியுமா?

"நாம் பேச வேண்டியதையெல்லாம் பின்னர் பேசலாம் சிறிது நாட்கள் நீங்க இங்கு தங்கியிருக்க வேண்டும்" என்றார் புத்தர்.

'சரி' என்றார் மௌலங்கப்பட்டார்.

நீங்கள் இங்கு இருக்கும் காலம் முழுவதும் பேசக்கூடாது. மௌனமாக இருக்க வேண்டும். கேள்வி எதுவும் கேட்கக் கூடாது. ஒருவருடம் சென்றபின் கேள்விகளைக் கேட்கலாம் என்றார் புத்தர்.

அதற்கு சம்மதித்து இவர் அங்கேயே தங்கிவிட்டார். ஒருவருடம் உருண்டோடியது. அதன் பின் புத்தர் அவரை அழைத்தார்.

"இனிமேல் நீங்கள் கேட்க விரும்பிய கேள்விகளையெல்லாம் கேட்கலாம்" என்றார். "இனி மேல் கேட்பதற்கு எதுவுமில்லை" என்று சொல்லி விட்டு அவர் புறப்பட்டாராம்.

மௌனம் என்பது ஞானிகளின் மொழி புரிகிறவர்களுக்குத்தான் அது புரியும்.

ஒரு வகுப்பு நடந்து கொண்டிருந்தது. ஆசிரியர் பாடம் கற்பித்துக்கொண்டிருந்தார்.

"பிள்ளைகளே!... நீங்கள் எல்லோரும் உங்கள் பெற்றோருக்கு உதவியாக இருக்க வேண்டும். அவர்கள் என்ன வேலை செய்தாலும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும்" என்றார்.

ஒரு பையன் எழுந்து "சேர்! நான் எங்கள் வீட்டில் எப்பொழுதும் அப்பாவுக்கு ஒத்தாசையாக இருக்கிறேன்." என்றான்.

"அப்படித்தான் இருக்க வேண்டும்... சரி... உன் அப்பா என்ன வேலை செய்து கொண்டிருக்கிறார்?"

"சும்மாதான் இருக்கிறார்" என்றான்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# சட்டவிரோதமாக கணவாய் பிடிக்கும் தொழிலை உடன் நிறுத்தங்கள்

## அமைச்சர் டக்ளஸ் பணிப்பு

வடமராட்சி கிழக்கு தாளையடி கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் கணவாய் பிடிக்கும் தொழிலை மேற்கொள்வதை உடனடியாக நிறுத்துமாறு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்துள்ளார்.

வடமராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற அப்பகுதி கடற்றொழிலாளர் கள் மற்றும் துறைசார்ந்த உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

இதன் போது அவர் கூறுகையில், பருத்தித்துறை முனைப்பகுதியிலிருந்து சக்கோட்டை வரையான கடற்கரைப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் வான் அகழ்வுப் பணிகள் தொடர்பாகவும் அதன் நிலவரங்கள் தொடர்பாகவும் அமைச்சர் இதன் போது கவ னம் செலுத்தினார்

அதன்பிரகாரம் வடமராட்சி வான் அகழ்வுப் பணிகளுக்காக ஏற்கனவே 31 இடங்கள் இனம் காணப்பட்டுள்ள நிலையில் குறித்த செயற்றிட்டங்கள் குறித்தொதுக்கப்பட்ட நிதியின் ஊடாக முன்னெடுக்கப்படு மெனவும் கடலோர பாதுகாப்பு திணைக்களம் மற்றும் பொருளாதார அபி விருத்தி அமைச்சு என்பனவற்றின் ஊடாக நிதியைப் பெற்றுவேலைத்திட்டங்களை முழுமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படு மென்றும் தெரிவித்தார்.

இதனிடையே தாளையடி கடற்பரப்பில் கறுப்பு கள்ளல் என்றபெயரிலானசட்டவிரோதமாக கணவாய் பிடிக்கும் தொழிற்துறை நடவடிக்கைகளால்கடல்வளங்களும்வலைகளும் சேதமுறுவதாக கடற்தொழிலாளர்களால் சுட்டிக் காட்டப்பட்டது.

இதன்போது அமைச்சர் உடனடியாக குறித்த சட்ட விரோத தொழில் நடவடிக்கையை நிறுத்துவதற்கு நடவடிக்கையை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுத்திருந்தார்

இதனிடையே சமரபாகு மற்றும் பொலிகண்டி தெற்கு மக்கள் விடுத்த தனியார் பேருந்து சேவையை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் அதேவேளை குறித்த விடயம் தொடர்பாக மாவட்ட அரசா ங்க அதிபர்களுடன் கலந்துரையாடி தற் காலிக அனுமதியை பெற்றுக் கொள் ளுமாறும் கேட்டுக் கொண்டார். (அ-2)

# தொலைபேசியில் அதிர்ஷ்டம் வந்தால் பொலிஸாரை நாடுக

அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பில் பணம் கிடைக்கப் பெற்றுள்ளது என பொதுமக்களுக்கு கிடைக்கப் பெறும் அநாமதேய அழைப்புக்கள் தொடர்பில் அருகில் இருக்கும் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்குமாறு பொலிஸ் தலைமையகம் மக்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. இவ்விடயம் தொடர்பில் பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள் ளது.

பொதுமக்களுக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தும் சில நபர்கள் அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பில் பெருந்தொகை பணம் கிடைக்கப்பெற்றுள்ளது என தெரிவித்து மோசடிகளில் ஈடுபடுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மோசடியில் ஈடுபடுபவர்கள் ஒரு குறிப்பிட்ட வங்கி கணக்கு இலக்கத்தை வழங்கி அதில் பணத்தை வைப்பிலிடுமாறு தெரிவிப்பதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறான பணமோசடி மூலம் பாதிக்கப்பட்ட பலர் தற்போதும் முறைப்பாடு செய்வதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறான தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் தகவல்கள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் உடனடியாக பொலிஸில் தெரிவிக்குமாறு மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 60 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 100 |
| தக்காளி | 140 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 |
| கோவா | 120 | 120 | 120 |
| கரட் | 160 | 120 | 160 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 140-180 | 160-200 |
| பெரிய வெங்காயம் | 75 | 100 | 80 |
| பாகற்காய் | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | -- | 100 |
| பயற்றங்காய் | 100 | 80 | 80 |
| லீக்ஸ் | 160 | 160 | 160 |
| பீற்றூட் | 100 | 100 | 20 |
| கறிமிளகாய் | 160 | 120 | 400 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 |
| போஞ்சி | 160 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 20 | 40 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 120 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 35 | 35-40 |
| இராசவள்ளி | -- | 120 | 100 |

## இராசி பலன்

**17.06.2013**
**(ஆனி 03, திங்கட்கிழமை)**
**சூரியஉதயம் காலை 5.55 மணிக்கு**
**அட்டமி காலை 6.23 மணிவரை**
**நவமி பின்னிரவு 5.33 மணிவரை**
**உத்தரம் முற்பகல் 10.15 மணிவரை**
**இராகுகாலம் 7.23-8.53 மணிவரை**
**சுபநேரம் 11.53-1.23 மணிவரை**

**மேடம்** கலகப்பான செய்தி காலை நேரத்திலேயே வந்து சேரும் நாள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து அதற்கேற்ப செயற்படுவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**இடபம்** பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், சுப காரிய பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், தொழில் முன்னேற்றத்திற்கு மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**மிதுனம்** நண்பர்கள் மத்தியில் நற்பெயர் கிடைக்கும், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும்.

**கடகம்** குடும்பத்தினரின் தேவைகளை நிறைவு செய்ய முற்படுவீர்கள், புதிய நண்பர்கள் அறிமுகம் கிடைக்கும், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், காரிய சித்தியுண்டு.

**சிங்கம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், புண்ணிய காயங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், நாவன்மையால் நற்பெயர் கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**கன்னி** ஆன்மீக சிந்தனை மேலோங்கும், விரும்பிய உணவுகளை சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்** நடப்பதெல்லாம் நன்மைக்கென நினைக்க வேண்டிய நாள், புகழ் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தொழில் நன்மை கருதி பயணமொன்றை மேற் கொள்ளும் சூழ்நிலை உருவாகும்.

**விருச்சிகம்** குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, அந்நிய தேச தொடர்புகள் அனுகூலம் தரும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், புகழ் கூடும்.

**தனுசு** மனங்குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உற்றார் உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரும் நாள்.

**மகரம்** வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள், உங்களின் நிர்வாகத் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், அரைகுறையாக இருந்த வேலைகளை செய்து முடிப்பீர்கள்.

**கும்பம்** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், விரயங்கள் கூடும், குடும்ப பொறுப்புக்கள் கூடும், நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாக செயற்படலாம்.

**மீனம்** மாமன் மைத்துனர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

**வளவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொத்த வரி வருமானத்தில் 56%
# அரச ஊழியர்களுக்கு சம்பளம்

2012ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த வரி வருமானத்தில், 56 வீதத்தை அரச துறையை சேர்ந்த ஊழியர்களின் சம்பளமாகவும் ஓய்வூதியமாகவும் வழங்குவதற்காக அரசு செலவிட்டுள்ளதாக உத்தியோகபூர்வ அறிக்கைகளின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் வெளியிடப்பட்டிருந்த ஆய்வறிக்கையில், கடந்த ஆண்டு 1.79 மில்லியன் அரச துறை சார்ந்த ஊழியர்களுக்கென மொத்தமாக 348 பில்லியன ரூபா சம்பளக் கொடுப்பனவுகளாக மேற்கொள்ளப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இதர அனுகூலங்களான எரிபொருள் கொடுப்பனவு, சொத்து கடன், சேமலாப நிதியம் மற்றும் மருத்துவ காப்புறுதி கொடுப்பனவு போன்ற செலவினங்கள் மொத்த செலவினத்தை 415 பில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்தது. இதில் மேலும் 111 பில்லியன் ரூபா ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்கான தொகையாக பதிவாகியிருந்ததுடன் மொத்த தொகை 516 பில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்தது.

கடந்த ஆண்டு மொத்த வரி வருமானம் 7.4 வீதத்தால் அதிகரித்து 908 பில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்ததாக நிதி அமைச்சின் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வட்டுக்கோட்டையில் இலங்கை வங்கி கிளை

இலங்கை வங்கியின் 608ஆவது கிளை யாழ். வட்டுக்கோட்டையில் கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புதிய வங்கிக்கிளை முகாமையாளர் புவனேந்திராஜா தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில், பிரதம அதிதியாக இலங்கை வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளர் திலக் தென்னக்கோன் கலந்துகொண்டு வங்கிக் கிளையைத் திறந்து வைத்தார்.

திறப்பு விழாவில் இலங்கை வங்கியின் வட பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.மாணிக்கசிங், இலங்கை வங்கி உத்தியோகஸ்தர்கள் வாடிக்கையாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# சில்லறை வியாபாரத்தில் வெளி. முதலீட்டுக்கு தடை

இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் மூலம் உருக்கு இரும்பு, சீமெந்து, சில்லறை வியாபாரம், சிறியளவிலான விவசாய மற்றும் அழகியற்கலை பொருட்கள் போன்றவற்றுக்காக மேற்கொள்ளப்படும் முதலீடுகளை தடைசெய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

உள்நாட்டு முதலீட்டாளர்களை பாதுகாக்கும் வகையில் இந்த தீர்மானத்தை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

உள்நாட்டு முதலீட்டாளர்களின் மூலம் இந்த துறைகளில் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் முதலீடுகள் எதுவும் மேற்கொள்ளப்படாவிடின், இந்த தீர்மானம் பின்னர் மாற்றியமைக்கப்படுமெனவும், இது குறித்த மேலதிக முழுமையான தரவுகள் விரைவில் வெளியிடப்படும என வும் அவர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களை இலங்கையில் வாகன உதிரிப்பாகங்களை பொருத்துதல், பெற்றோலிய உற்பத்திகளை வடிகட்டல், ஏற்றுமதிக்காக படகுகளை நிர்மாணித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.




# மத்திய வங்கி கோரிக்கை

கடன் அட்டைகள் மீது அறவிடப்படும் வட்டி வீதங்களை 4 வீதத்தினால் குறைக்குமாறு இலங்கை மத்திய வங்கி சகல வங்கிகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளது. இதர கடன் வழங்கல் வீதங்களை சீராக பேணும் வகையில் இந்த வட்டி வீதத்தை குறைக்குமாறு தாம் கோரியுள்ளதாக மத்திய வங்கியின் பிரத ஆளுநர் நந்தலால் வீரசிங்க அறிவித்துள்ளார்.

தற்போது கடன் அட்டைகள் மீதான ஆண்டு வீதம் 28 ஆக அமைந்துள்ளது. இந்த கடன் பெறுமதி 24 வீதத்தை விட அதிகரிக்கக்கூடாது. அதுபோலவே தற்போது வங்கிகள் அறவிடும் கடன் மீதான வட்டி வீதங்களும் மிகவும் அதிகமாக காணப்படுகின்றன. அவற்றையும் குறைப்பதற்கான நடவடிக்கைகளை வங்கிகள் மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

## நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வு

# முதலீட்டாளர்களுக்கான 2-ம் நிலை பயிற்சிப்பட்டறை

நிறுவனங்கள் தமது செயற்பாடுகளின் பெறுபேறுகளை நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்துகின்றன. நாம் நிறுவனங்கள் பற்றி முழுமையாக அறிந்துகொள்ள நிதிக்கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்யப் பழகிக் கொள்ளுதல் மிகமுக்கியமானதாக அமைகின்றது.

இலங்கையில் இதுவரை காலமும் நிதிக்கூற்றுக்கள் இலங்கைக் கணக்கியல் நியமங்களுக்கு (SLAS), அமைவாகத் தயாரிக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். ஆனால், தற்போது நிதிக்கூற்றுக்களின் பகுதிகளான ஒன்றுபடுத்தப்பட்ட வருமானக் கூற்று (SOCI), நிதிநிலைக் கூற்று (SOFP), காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் உரிமை மாற்றல் கூற்று போன்றன சர்வதேச நியமங்களைப் பின்பற்றி உருவாக்கப்பட்டுள்ள லங்கா நியமங்களுக்கு (LKS) அமைவாக தயாரிக்கப்படுகின்றன.

கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் யாழ்.கிளையானது முதலீட்டாளர் வலுவூட்டல் நிகழ்வாக நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வு எனும் தலைப்பில் முழுமையான நடைமுறை மாற்றங்களை உள்ளடக்கிய 2-ம் நிலைப் பயிற்சிப் பட்டறை ஒன்றினை எதிர்வரும் 22-ம் திகதி தொடக்கம் வாரஇறுதி நாட்களில் மாலை 3 மணி தொட க்கம் 6 மணிவரை பங்குப்பரி வர்த்தனையின் கேட்போர் கூடத்தில் ஒழுங்கு செய்துள்ளது.

இதில் வளவாளர்களாக யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்களான ஆ.சுப்பிரமணியம் மற்றும் கலாநிதி நிமலதாசன் ஆகியோருடன் ACCA விரிவுரையாளரான வே.குமணனும் இணைந்து கருத்துரை வழங்குவர்.

மேலதிக தகவல்களை பங்குப் பரிவர்த்தனையின் யாழ்.கிளையில் அல்லது www.CSE.lk அல்லது 0777822014 எனும் தொலைபேசி ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

# இல. கிரிக்கெட் அணிக்கு அனுசரணை வழங்கியது இலங்கை தேயிலை சபை



இலங்கை கிரிக்கெட் அணிக்கான அனுசரணையை வழங்க இலங்கை தேயிலை சபை முன்வந்துள்ளது. இதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வும், காசோலை கையளிப்பு நிகழ்வும் கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்றது.

615 மில்லியன் ரூபா பெறுமதியான மூன்று ஆண்டு காலப் பகுதிக்கான அனுசரணையை வழங்க இலங்கை தேயிலை சபை முன்வந்துள்ளதுடன், முதற்கட்டமாக 205 மில்லியன் ரூபா காசோலை இலங்கை தேயிலை சபையின் தலைமை அதிகாரி ஜானகி குருப்பு மூலம் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் ஜயந்த தர்மதாசவிடம் கையளிக்கப்பட்டது. எஞ்சிய தொகை 2 கொடுப்பனவு முறைகளில் வழங்கப்படவுள்ளன.

டயலொக் ஆக்சியாடா நிறுவனம் இலங்கை கிரிக்கெட் அணிக்கான உத்தியோகபூர்வ அனுசரணையை ஏற்கெனவே வழங்கியுள்ள நிலையில், இலங்கை தேயிலை சபை இந்த அனுசரணையை வழங்க முன்வந்துள்ளமையானது, முதல் தடவையாக இலங்கை கிரிக்கெட் சபைக்கு இரண்டு அனுசரணையாளர்கள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை தேயிலைக்கு சர்வதேச ரீதியில் பிரபல்யப்படுத்தும் நோக்கில் இந்த தீர்மானத்தை தாம் மேற்கொண்டிருந்ததாக விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இந்த உடன்படிக்கையின் மூலம் இலங்கை தேயிலைக்கு சர்வதேச ரீதியில் சிறந்த பிரபல்யத்தை பெற்றுக்கொள்ள முடியும் என இலங்கை தேயிலை சபை வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

இதேவேளை, டயலொக் ஆக்சியாடா நிறுவனம் 753.90 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் ஒன்றை அண்மையில் மேற்கொண்டு அணிக்கு அனுசரணையை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஏற்றுமதி அ/தி சபை தலைவராக பந்துல

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழ் இயங்கும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் புதிய தலைவராக பந்துல எகோடகே நியமிக்கப்பட்டுள்ளார்.

உலகின் மிக பெரிய உணவு மற்றும் குளிர்பான பன்னாட்டு நிறுவனங்களின் ஒன்றான நெஸ்லே லங்கா நிறுவனத்தின் கூட்டுறவு விவகாரங்கள் மற்றும் தொடர்பாடல் பிரிவின் உப தலைவராக கடந்த 28 வருடங்களாக பந்துல எகோடகே பணிபுரிந்துள்ளார்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் வளாகத்தில் வைத்து அமைச்சர் ரிஷாத் பதியுதீன் முன்னிலையில் இவருக்கு பதவி நியமனம் வழங்கப்பட்டது.

# இந்திய உள்நாட்டு உ/தி உயரும் - உலக வங்கி

2015-ல் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 6.7 சதவீதத்தை எட்டும் என உலக வங்கி கணித்துள்ளது. உலக பொருளாதார தகவலின்படி உலக வங்கி கூறியுள்ளதாவது, தெற்கு ஆசியாவை பொறுத்தமட்டில் இந்தியாவின் வளர்ச்சி உயர்ந்து வருகிறது. நடப்பு 2013-14ம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 5.7 சதவீதமாக இருக்கும். தொடர்ந்து படிப்படியாக 2013-14ம் ஆண்டில் 6.5 சதவீதமும், 2014-15-ம் ஆண்டில் 6.7 சதவீதமும் உயர்வு பெறும். இந்தியாவின் ஏற்றுமதி மற்றும் தனியார் துறை முதலீடுகள் சிறப்பாக இருப்பதாக நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு இது வழிவகுக்கும் என்றும் கூறியுள்ளது.

# கடந்த வாரம் பங்குச் சந்தை

கொழும்பு பங்குச்சந்தை தொடர்ச்சியாக சந்தை சீராக்கத்தை எதிர்நோக்கி வருகின்றமையால் பிரதான சுட்டிகள் மறை பெறுமதிகளை பதிவு செய்திருந்ததாக பங்கு முகவர்கள் தெரிவித்திருந்தனர்.

இலங்கையின் வட்டி வீதங்கள் தொடர்ந்தும் குறைவான நிலையில் பேணப்படும் என இலங்கை மத்திய வங்கி அறிவித்திருந்ததை தொடர்ந்து, தொடர்ந்தும் பங்குச் சந்தை கவர்ச்சிகரமானதாக அமைந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஆர்வம் கடந்த வாரம் சற்று குறைவடைந்திருந்தமையையும் அவதானிக்க முடிந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை பங்குச் சந்தை நடவடிக்கைகள் நிறைவடையும் பொழுது, அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 6,219.39 ஆகவும் எஸ் அன்ட் பி சிறிலங்கா 20 சுட்டி 3504.35 ஆகவும் அமைந்திருந்தன.

யூன் 10ஆம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்கு புரள்வு பெறுமதியாக ரூ. 3,199,970,584 அமைந்திருந்தது.

கடந்த வார கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் கெல்சி, ஜி.எஸ்.பினான்ஸ், எம்ரிடி வோல்க்கர்ஸ், சம்சன் இன்டர்நட் மற்றும் யூனியன் கெமிக்கல்ஸ் போன்றன முதல் ஐந்து சிறந்த இலாபமீட்டிய பட்டியலிடப்பட்ட கம்பனிகளாக பதிவாகியிருந்தன.

நேஷன் லங்கா (வங்கு[illegible]), குருவிட்ட டெக்ஸ்டைல்ஸ், லாஃவ்ஸ கேஸ், கெல் பினான்ஸ் மற்றும் டீஸ்மோல்ஹோல்டர் போன்ற நிறுவனங்களின் பங்குகள் அதிகளவு நஷ்டமீட்டியதாகப் பதிவாகியிருந்தன.

## ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

இதேவேளை, கடந்த வாரம் டொலருக்கு நிகரான ரூபாவின் சராசரி விற்பனை பெறுமதி 129.51 ஆக பதிவாகியிருந்தது. ஆறு மாத காலப்பகுதியின் பின்னர் கடந்த வாரம் ரூபாவின் பெறுமதி அதிகளவு வீழ்ச்சியடைந்து காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 126.45 | 129.51 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 198.07 | 203.80 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 168.02 | 173.59 |
| சுவிஸ் பிராங் | 136.00 | 141.23 |
| கனேடிய டொலர் | 123.57 | 128.02 |
| அவுஸ்திரேலிய டொலர் | 120.41 | 125.04 |
| சிங்கப்பூர் டொலர் | 100.53 | 104.04 |
| ஜப்பான் யென் | 1.32 | 1.37 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.20 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 34.73 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளின் நூற்றாண்டு விழா போட்டி முடிபுகள்

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் யாழ்.மறை மாவட்டமும் இணைந்து வடக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பதக்கங்கள், பரிசில்கள், சான்றுப்பத்திரங்கள் என்பன எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெறவுள்ள தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழா ஆய்வரங்க தொடக்க நிகழ்வில் வழங்கப்படவுள்ளன.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் விபரம் வருமாறு,

**யாழ்ப்பாண மாவட்டம்**

**பேச்சு**

**கீழ்ப்பிரிவு**

வி.அஜின்டெஸ்னோ (யாழ்/புனித பத்திரிசியார் கல்லூரி),இ.ராருஜன் (அச்சுவேலி/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), கு. வினோஜன் (நெடுந்தீவு மாவலித்துறை றோ.க.த.க. வித்தியாலயம்), ப.வைஸ்ணவி (வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்)

**மத்தியபிரிவு**

க.ஜெறி (யாழ்/புனித பத்திரிசியார் கல்லூரி),பா.சஞ்சிகாயினி (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி),ஆ.தர்சினி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)

**மேற்பிரிவு**

ரா.தனரோஜினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), வே.ஜந்துஜா (அச்சுவேலி/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி),ர.கோபிகா (யாழ். கனகரத்தினம் ம.ம.வி)

**அதிமேற்பிரிவு**

ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ (யாழ்.இந்துக் கல்லூரி), சு.றொபின்ஸ்கமில்ரன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி),சா.நிரோஷா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

**கட்டுரை**

**மத்திய பிரிவு**

செ.கு.தேனுஜா (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), க.எப்சிகா (யாழ். கனகரத்தினம் ம.ம.வி), அ.சஹீதா (புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி)

**மேற்பிரிவு**

க.சுபர்ணா (அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்), ம.எஸ்ரர் கிஸ்டா (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி). சா.தனுசா (யாழ். இந்து மகளிர் கல்லூரி)

**அதிமேற்பிரிவு**

ஸ்ரீ.பதுசனன் (யாழ்.இந்துக் கல்லூரி), பூ.லக்சியா (அச்சுவேலி/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), அ.புஸ்ப அன்ரனிற்றா (நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி)

**கவிதை**

**மேற்பிரிவு**

சி.சதிஸ்கா ( தெல்லிப்பழை யூனியன் கல்லூரி),க.தர்சிகா (யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம்), ந.அபிராமி (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

**அதிமேற்பிரிவு**

ஜீ.சஜீவன் (யாழ்.இந்துக் கல்லூரி), கோ. சங்கீதா ( தெல்லிப்பழை யூனியன் கல்லூரி),அ.வேனிஸ்ராலினி (நெடுந்தீவு றோ. க.மகளிர் கல்லூரி), ட.சுகன்யா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி). சூ.கீர்த்தனா (புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி)

**கிளிநொச்சி மாவட்டம்**

**பேச்சு**

**கீழ்ப்பிரிவு**

ப.தமிழ்வாணி (தர்மபுரம் ம.வி), ஆ.விழியழகி (உருத்திரபுரம் ம.வி), ச.டிலக்சி (முழங்காவில் ஆரம்பப் பாடசாலை)

**மத்தியபிரிவு**

வே.அபிராமி (புனித திரேசா பெண்கள் கல்லூரி),கு.தர்மிகா (உருத்திரபுரம் ம.வி), செ.டிலக்சா (தர்மபுரம் ம.வி)

**மேற்பிரிவு**

ச.ரசனா (அக்கராயன் ம.வி), நா.சுதர்சினி (தர்மபுரம் ம.வி)

**அதிமேற்பிரிவு**

மோ.அனுஷாஜினி (அக்கராயன் ம.வி), நி.குகாயினி (உருத்திரபுரம் ம.வி)

**கவிதை**

**மேற்பிரிவு**

கி.கிரிசாந்தி (உருத்திரபுரம் ம.வி), ர. லியாந்தினி (புனித திரேசா பெண்கள் கல்லூரி), த.பேபி சாலினி (தர்மபுரம் ம.வி)

**அதிமேற்பிரிவு**

செ.றெஜிஷா (அக்கராயன் ம.வி), சி.நிரோஜினி (உருத்திரபுரம் ம.வி), நா.ஜெனோபா (தர்மபுரம் ம.வி)

**கட்டுரை**

**மத்தியபிரிவு**

ச.கீர்த்தனா (தர்மபுரம் ம.வி), தெ.சரிதா (புனித திரேசா பெண்கள் கல்லூரி)

**மேற்பிரிவு**

ஜே.சர்மிளா (அக்கராயன் ம.வி), க. கிருசாஜினி (தர்மபுரம் ம.வி), சி.அனித்தா (புனித திரேசா பெண்கள் கல்லூரி)

**அதிமேற்பிரிவு**

யோ.கஜாயினி (தர்மபுரம் ம.வி),சி.அஜிதா (புனித திரேசா பெண்கள் கல்லூரி), க. மதுசனா (உருத்திரபுரம் ம.வி)

(தொடரும்)

## ஐ.நா.தலைவராக ஆஷ் தெரிவானார்



ஐ.நா. பொதுச் சபையின் தலைவராக ஜான் டபிள்யூ ஆஷ் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் ஆண்டிகுவா மற்றும் பார்படா நாட்டின் ஐ.நாவுக்கான தூதராக பணியாற்றி வருகிறார்.

விரைவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடு கள் பொதுச் சபையின் 68 ஆவது கூட்டத் துக்கு ஜான் ஆஷ் தலைமை வகிப்பார் என்று ஐ.நா. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-2)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815,
021 567 1540



திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் மாதிரி முன்பள்ளி அரங்கின் ஊடான மாலை நேர மகிழ்வூட்டல் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்ற போது...

**வளவாளர் தேவை- ஆறுதல் நிறுவனம்**

எமது நிறுவனம் நடாத்தும் முன்பள்ளிக் கல்வி டிப்ளோமா கற்கை நெறியின் புதிய தொகுதி ஜூலை மாதம் முதல் வாரத்தில் இருந்து தொடங்க இருக்கின்றது.இக்கற்கைநெறி பின்வரும் பாடங்களை உள்ளடக்கியதாகும்,

குழந்தை உளவியல், சிறுவர் உரிமை,ஆங்கிலம், கல்வித்தத்துவம், மொழிவிருத்தி, சித்திரம், சுகாதாரமும் போசாக்கும், முன்கணிதம், செயல்நிலை ஆய்வு, விஞ்ஞானமும் சுற்றாடலும், சமூக உளவியல், மதிப்பீட்டு முறைகள், முன்பள்ளி முகாமைத்துவமும் வகுப்பறை முகாமைத்துவமும், கல்வித்தொழில்நுட்பமும் கற்பித்தல் முறையியலும்,

இப்பாடங்களை கற்பிக்க விரும்பும் வளவாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.விருப்பம் உடையவர்கள் தாங்கள் கற்பிக்க விரும்பும் பாடத்தினை குறிப்பிட்டு சுயவிபரத்தினை 25.06.2013க்கு முன்னர் கீழே குறிப்பிடும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். யாழ்ப்பாணம், தீவகம், கிளிநொச்சி, துணுக்காய், முல்லைத்தீவு, வவுனியா, மடு, மன்னார் ஆகிய கல்வி வலயங்களில் கற்கைநெறி நடைபெறும்.

குறிப்பு: இக்கற்கைநெறி செயன்முறை கற்பித்தலை அடிப்படையாகக் கொண்டதாகும்.

Mr. Sundram Divakalala
Aaruthal
No. 172, Sir Pon Ramanathan Road,
Thirunelvely, Jaffna.
Tel No. 021 2219254

(சி-3661)

கவலையா? யோசனையா?



வெளிநாடு செல்ல, VISA பெற Sponcer ஓர் பிரச்சினையா?

எங்களைத் தொடருங்கள்!
077 1464525

(3037)

சகல நாடுகளுக்குமான, வேண்டிய தொகையில் Sponcer மிகக்குறுகிய காலத்தில் மிகக் குறைந்த கட்டணத்தில் செய்து தரப்படும்.

## 102 வயதிலும் சாதனை

அமெரிக்காவில் 102 ஆவது பிறந்த நாளைக் கொண் டாடிய பெண் 586 அடி உயரத்திலிருந்து குதித்து சாதனை படைத்துள்ளார். நியூயோர்க்கைச் சேர்ந்தவர் டோரோதி கஸ்டர் என்பவரே சாதனை படைத்தவராவார்.

சமீபத்தில் தன் 102 ஆவது பிறந்த நாளை கொண்டாடிய இவர் இதையொட்டி வித்தியாசமாக எதையாவது செய்ய திட்டமிட்டார். நியூயோர்க் கின்ஸ்னேக் ரிவர் மீது கட்டப்பட்டுள்ள பெரின் பிரிட்ஜ் சென்றடைந்தார். பின் உயரமான இடத்திலிருந்து கீழே குதிக்கும் விளையாட்டான பேஸ் ஜம்ப்பில் ஈடுபட்டார்.

இதன் மூலம் 102 வயதில் 586 அடி உயரத்தில் இருந்து குதித்து சாதனை படைத்துள்ளார். (அ-2)

## ஜனாதிபதி மீதான நம்பிக்கை கேள்விக்குறியாகியுள்ளது

### பிரபா எம்.பி.தெரிவிப்பு

ஜனாதிபதியின் மீது கொண்டிருந்த எனது நம்பிக்கை இன்று கேள்விக்குறியாகியுள்ளது. அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கின்றேன் என்பதனால் தமிழ் இனத்திற்கு எதிரான விடயங்களுக்கு அவர்களுக்கு ஜால்ரா போடுவதற்கு நான் தயாராக இல்லை என ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

13 ஆவது திருத்தச் சட்டத்தில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தக் கூடாது என்பதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்த விடயத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முஸ்லிம் காங்கிரஸ் தலைமைகளுடன் இணைந்து முன்னின்று செயற்பட்டேன்.

இனவாதம் கொண்ட பௌத்த பிக்குகளின் கூக்குரலுக்கும் இனவாத சிங்கள அரசியல் கட்சிகளின் எதிர்ப்பிற்கும் அடிபணிந்து ஜனாதிபதி இன்று 13 ஆவது திருத்த சட்டத்தில் மாற்றங்களை கொண்டுவர முயற்சிக்கின்றார். அப்படியாயின் இன்று நடைபெறுவது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியா என்று கேள்வி எழுந்துள்ளது.

ஜனாதிபதியின் மீது கொண்டிருந்த எனது நம்பிக்கை இன்று கேள்விக்குறியாகியுள்ளது. அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கின்றேன் என்பதனால் தமிழ் இனத்திற்கு எதிரான விடயங்களுக்கு அவர்களுக்கு ஜால்ரா போடுவதற்கு நான் தயாராக இல்லை. 13 ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள மாகாணங்கள் ஒன்றிணையும் அதிகாரத்தை மட்டும் கூட நீக்க அரசாங்கம் முற்பட்டால் அதற்கு ஒருபோதும் ஆதரவு தெரிவிக்கப்போவதில்லை என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூட்டுநோய் சிகிச்சையை இரு நாட்கள் நடத்துக

## நோயாளர்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அண்மையில் நடைபெற்ற மூட்டுவாத நோய்க்கான கிளினிக்கிற்கு வருகை தந்த நோயாளர்களில் குறிப்பிட்ட அளவானோர். சிகிச்சை பெறமுடியாமல் திரும்பி சென்றதாக நோயாளர்க்ள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதையிட்டு சாவச்சேரி ஆதார வைத்திய சாலை வட்டாரத்துடன் தொடர்பு கொண்ட போது, மாதத்தில் இரு நாட்கள் கிளினிக்கை நடத்துவதற்கு அனுமதி கோரப்பட்ட போதும் ஒருநாள் மட்டும் நடத்துவதற்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், இது முதலாவது கிளினிக் என்பதனாலும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அடுத்ததாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலேயே முதல்முறையாக இக்கிளினிக் ஆரம்பிக்கப்பட்டுள்ளதனாலும் தூர இடங்களில் இருந்தும் நோயாளர்கள் எதிர்பாராத அளவிற்கு வருகை தந்திருந்தனர்.

முதல்முறை என்பதனால் நோயாளர்களை நுணுக்கமான பரிசோதனைகளுக்கு உட்படுத்த வேண்டியிருந்தது.

வைத்திய நிபுணருடன் இரு உதவி வைத்தியர்களும் நோயாளர்களைப் பார்வையிட்ட போதும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிக மானதால் 11 மணிக்கு பின்பு வந்த நோயாளர்களை எதிர்வரும் ஜூலை மாதம் 10 ஆம் திகதி நடைபெறும் கிளினிக்கிற்கு நேரத்துடன் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, வைத்திய அதிகாரியின் முயற்சியினால், இக்கிளினிக் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் முதல்முறையாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இம் முயற்சிக்கு நன்றி தெரிவித்துள்ள நோயாளர்கள் மாதத்தில் இரண்டு தடவைகள் இக்கிளினிக்கை நடத்தி வருகை தரும் நோயாளர்கள் அனைவரும் சிகிச்சை பெற வசதி ஏற்படுத்தி தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (அ-3-29)




### வடமராட்சி கிழக்கில்

# மின்னொளி பெற்றன தொண்ணூறு வீடுகள்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இலங்கை மின்சார சபையினரால் முதன் முதலாக மின் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப்பகுதியிலுள்ள மருதங்கேணி தெற்கு, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை ஆகிய 4 கிராமங்களுக்கே நேற்றுமுன்ம் மின் விநியோகம் வழங்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் சுமார் 90 வீடுகளுக்கு உடனடியாக மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

ஏனையவர்களுக்கு படிப்படியாக வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தொடர்ந்து மின்னிணைப்புக்கள் இலவசமாக இணைக்கப்படவுள்ளன. பயன்படுத்தப்படுகின்ற மின் அலகுகளுக்கு மக்களே கட்டணம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வு மருதங்கேணி பிரதேச செயலர் திருலிங்க நாதன் தலைமையில் இடம் பெற்றது. பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்களான றங்கன், மணிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் வடக்கின் வசந்தம் திட்டத்தின் முகாமையாளர், வடக்கின் வசந்தம் திட்டத்தின் மின் பொறியியலாளர், யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறை மின் அத்தியட்சகர்கள், கிராம அலுவலர்கள், பிரதேச இராணுவ பொறுப்பதிகாரிகள், பொலிஸார் மற்றும் கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-64)

# ஆட்டோவில் ஆடு திருட்டு

(யாழ்ப்பாணம்)

ஆட்டோவில் வந்த நபர்களினால் ஆடு திருடப்பட்டதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். சுன்னாகம் கிழக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நண்பகல் இடம் பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் ஆட்டின் உரிமையாளர் முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கையில்,

சுன்னாகம் புகையிரத நிலையத்திற்கு அருகில் மேய்வதற்காக கட்டப்பட்டிருந்த தனது ஆட்டை ஆட்டோவில் வந்த இனம் தெரியாத நபர்கள் இருவர் திருடிச் சென்றுள்ளனர் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# பிரசவத்திற்கு இலவசம்

## நீதவானின் கோரிக்கைக்கு ஆட்டோகாரர்கள் இணக்கம்

(கரணவாய்)

முச்சக்கர வண்டிச் சாரதிகள் சீருடை அணியாது முச்சக்கரவண்டிகளை செலுத்த வேண்டாம் என பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் தெரிவித்துள்ளார்.

நெல்லியடி முச்சக்கரவண்டி சங்க உரிமையாளர்களுக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி முருகமூர்த்தி மண்டபத்தில் சீருடை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீருடை அணியாது முச்சக்கரவண்டிகளை செலுத்த கூடாதெனவும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் பொது மக்களை ஏற்றிச் செல்ல வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தார்.

முச்சக்கரவண்டிகளில் பக்திப்பாடல்களே ஒலிபரப்பப்படுதல் வேண்டும். சினிமாப்பாடல்களை ஒலிபரப்பக் கூடாது.

ஏனைய மக்களை விட முச்சக்கரவண்டி உரிமையாளர்களுக்கே ஒவ்வொரு கிராமத்திலும் இடம் பெறுகின்ற குற்றச் செயல்கள் பற்றி அதிகமாக தெரியவரும். அவ்வாறு இடம் பெறுகின்ற குற்றச் செயல்களை உடனடியாக பொலிஸாருக்கு தெரியப்படுத்த வேண்டும்.

கர்ப்பிணித்தாய்மார்களை பிரசவத்திற்காக வைத்தியசாலைக்கு முச்சக்கரவண்டியில் கொண்டு செல்லும் போது இலவசமாக ஏற்றிச்செல்ல வேண்டும் எனத் தெரிவித்த பொழுது அதற்கு உரிமையாளர்கள் சம்மதித்தனர். கூடுதலான கட்டணங்களை பொது மக்களிடம் அறவிடக்கூடாது எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்நிகழ்வில் வர்த்தக சங்கத்தலைவர் அகிலன், உபதலைவர், கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-3-60)




# கிணற்றுக்குள்ளிருந்து கைக்குண்டு மீட்பு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கின் வெற்றிலைக் கேணி உணவத்தை கண்ணகை அம்மன் ஆலயத்தின் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு, ஆலய பரிபாலன சபையினரின் வேண்டுகோளுக்கு அமைவாக ஆலய உற்சவ சூழலையும் அங்கு காணப்படும் கிணறுகளையும் சுத்தம் செய்யும் பணியில் வெற்றிலைக் கேணி, நம்போ விளையாட்டு கழகத்தினர் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது ஆலயத்தின் வெளிக்கிணற்றில் இருந்து கை எறிகுண்டுகள் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக அருகில் உள்ள இராணுவத்தினருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த இராணுவத்தினர் குண்டுகளை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (அ-3-64)



இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் நல்லிணக்கத்தில் உயர் கல்வியின் பங்கு என்ற தொனிப் பொருளிலான இரு நாட்கள் செயலமர்வு அண்மையில் யாழ். கிறீன் கிராஸ் உணவக விடுதியில் இடம் பெற்றபோது ... (படங்கள்:- எஸ்.ஆர். கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண தேர்தலில் மு.காங்கிரஸ் தனித்து போட்டி

(கொழும்பு)

வடக்குமாகாண சபைத்தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் 7 ஆம் திகதி நடத்தப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கை தேர்தல் ஆணையகத்தின் அதிகாரிகளை கோடிட்டு இலங்கையின் ஆங்கில செய்தித்தாள் ஒன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய வடக்கு மாகாண மற்றும் மத்திய மாகாணசபை என்பன இம்மாதம் 20 ஆம் திகதி கலைக்கப்பட்டு பின்னர் குறித்த இரண்டு சபைகளதும் தேர்தல் திகதிகள் அறிவிக்கப்படும் என்று ஆங்கில செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை வடமேல் மாகாண சபைத் தேர்தலும் அதே தினத்தில் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த வாரம் இரண்டு மாகாண சபைகள் கலைக்கப்படவுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடமாகாணசபை, மத்திய மாகாணசபை மற்றும் வடமத்திய மாகாணசபை ஆகியவற்றுக்கு தேர்தல் நடத்தப்படவுள்ளது. பெரும்பாலும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் தேர்தல் நடத்தப்படக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, சுசில் பிரேமஜயந்த மற்றும் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் குறித்த மாகாணங்களின் பிரசார பணிகளை வழிநடத்தவுள்ளனர்.

வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து கூட்டணி கட்சிகளுடனான பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஆளும் கூட்டணியுடன் இணைந்து போட்டியிடக் கூடாது என கட்சியின் வுடக்கு-கிழக்கு தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இதனால் மரச் சின்னத்தில் வேட்பாளர்களை நிறுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

கிழக்கைப் போன்றே வடக்கிலும் தங்களது பலத்தை நிரூபிக்க வேண்டுமென கோரியுள்ளனர். தனித்து போட்டியிடுவதன் மூலம் பேரம் பேச முடியும் என சில தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

எவ்வாறெனினும் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டதன் பின்னர் கட்சியின் அதி உயர் பீடம் இறுதித் தீர்மானம் எடுக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

(அ-2)



## ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம்

**இன்று ஆறாம் திருவிழா**

**சித்தமிரங்காயோ வீரகத்தி விநாயகனே!**

தத்துவ கணபதியே நீ தண்ணருள் புரிய வேண்டும்
நித்தமுன் விழாக்காண நீராவியடி வந்தோம்
வித்தகனே வேழமுகத்தவனே வினை தீர்க்கவாராய்
சித்த மிரங்காயோ எங்கள் வீரகத்தி விநாயகனே
சத்தமிட்டுக் கதறுகின்றோம் சங்கரனின் திருமகனே!
சித்தி விநாயகனே சீரான வாழ்வருள்வாய்!
பக்தர்கள் போற்றிடும் பரம தயாளனே வா! வா!!
பணிந்தோம் உன் பாதம் கஜமுகனே சரணம்! சரணம்!!

கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்

# குற்றச்செயல்கள் குறித்து 1200 பொலிஸார் மீது விசாரணை

இலஞ்சம் பெறல், ஊழல் மோசடி உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஆயிரத்து 200 பொலிஸாருக்கு எதிராக தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளதாகவும் அவர்களில் உயர் பொலிஸ் அதிகாரிகள் சிலரும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ள பொலிஸாருக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பயங்கரவாத தடுப்பு விசாரணை பிரிவு என பல்வேறு மட்டங்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.

அதேவேளை பொலிஸ் உயர் அதிகாரிகளின் அலுவலக மற்றும் தனிப்பட்ட தரவுகளையும் சொத்து விபரங்கள் தொடர்பான தகவல்களையும் திரட்டுவதற்கான துரித நடவடிக்கைகளை பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பம்பலப்பிட்டி பாதணி வர்த்தகர் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மேல் மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன கைது செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்தே இந்த விசேட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# கோத்தபாய கொலை முயற்சியுடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை படுகொலை செய்ய முயற்சித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்பு டைய ஆறு சந்தேக நபர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் கிஹான் பிலபிட்டிய உத்தரவிட்டுள்ளார்.

குண்டு ஒன்றை வெடிக்கச் செய்து பாதுகாப்புச் செயலாளரை கொலை செய்ய முயற்சிக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கொள்ளுப்பிட்டியில் வைத்து கடந்த 2006 ஆம் ஆண்டு இந்தத் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ-2)

# பொதுநலவாய வர்த்தக மாநாடு மூலம் பெறுமதியான முதலீடுகள் வரலாம்

## பொ.ந.வர்த்தக பேரவை பணிப்பாளர்

பொதுநலவாய வர்த்தக மாநாட்டின் மூலம் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வெளிநாட்டு முதலீடுகளை இலங்கைக்கு கொண்டுவர எதிர்பார்த்திருப்பதாக பொதுநலவாய வர்த்தக பேரவை பணிப்பாளர் நாயகம் பீட்டர் கலஹறன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 12 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை கொழும்பு சினமட் கிராண்ட் விடுதியில் நடை பெறவிருக்கும் வர்த்தக மாநாடானது இலங்கைக்கு கிடைத்திருக்கும் அரியதொரு சந்தர்ப்பம் என அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் பொதுநலவாய வர்த்தக பேரவை பணிப்பாளர் நாயகம் பீட்டர் பலஹறன், வெளிவிவகார பிரதியமைச்சர் நியோமல் பெரேராவைச் சந்தித்த பின்னர் வெளிவிவகார அமைச்சில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார்.

பொதுநலவாய வர்த்தக மாநாட்டில் 100 இற்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்ப்பதாக இங்கு கருத்துத் தெரிவித்த பிரதி வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார். இதுவரை 75 நாடுகள் தமது பங்கெடுப்பை உறுதிப்படுத்தியிருப்பதுடன் ஆயிரத்துக்கும் அதிகமான வர்த்தகப் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என்றும் கூறினார்.

சுற்றுலாத்துறை, கல்வித்துறை, தகவல்தொழில்நுட்பம், சுகாதாரம், விளையாட்டு உட்கட்டமைப்பு உள்ளிட்ட முக்கிய துறைகளில் இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்திருப்பதாக பீட்டர் கலஹறன் குறிப்பிட்டார்.

பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் மாத்திரமின்றி மேலும் பல நாடுகள் இந்த வர்த்தக மாநாட்டில் பங்கெடுப்பதால் நாடுகளுக்கிடையிலான முதலீடுகள் மற்றும் வர்த்தக ஊக்குவிப்புக்களை மேம்படுத்துவதற்கு இந்த மாநாடு பெரும் உதவியாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டுடன் இணைந்ததாக நடைபெறவிருக்கும் வர்த்தக மாநாட்டின் மூலம் இலங்கையின் முக்கிய துறைகளுக்கான ஒத்துழைப்பு கிடைக்கும் என்றும் இங்கு கருத்துத் தெரிவித்த பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா குறிப்பிட்டார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் பொதுநலவாய வர்த்தகக் குழுவின் இணைத் தலைவர் மஹேந்திர அமரசூரியவும் கலந்து கொண்டிருந்தார். (அ-2)

# இன, மதவாதத்தைத் தூண்ட முயற்சிக்கக் கூடாது-அனுரகுமார எம்.பி

அரசாங்கம் இனவாதத்தை தூண்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு இவ்வாறு அரசாங்கம் இன, மதவாதத்தை தூண்ட முயற்சிக்கின்றது என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்கள இனவாத கட்சிகளுக்குத் தேவையான வகையில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியாது. தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட வேண்டும். மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்காவிட்டால் இனப்பிரச்சினை மேலும் மோசமடையும்.

அரசாங்கம் இன முறுகல்களைத் தூண்டும் வகையில் செயற்படக் கூடாது என அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (2)

# யாழ். இந்துவின் புகழ்பாடும் இசை தொகுப்பு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

We Thunderknight Music வழங்கும் சு.சுகன்யனின் **ALMA MATER** ARhythm of Jaffna Hindu Coll ege எனும் யாழ். இந்துக் கல்லூரி அன்னையின் புகழ்பாடும் ஓர் இசைத் தொகுப்பு வெளியீட்டு நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 12.45 மணிக்கு பாடசாலையின் குமாரசுவாமி மண்டத்தில் நடீட பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மூத்த ஊடகவியலாளர் என். வித்தியாதரன், கௌரவ விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரியின் அதிபர் வி.கணேசராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மும்மொழிகளிலும் உருவாக்கப்பட்டுள்ள இவ் இசைத் தொகுப்பு யாழ்ப்பாணம், இந்தியா, பிரான்ஸ் ஆகிய இடங்களில் வைத்து ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இவ் இசைத் தொகுப்பு காணொளி வடிவிலும் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# மாற்றுத் திறனாளிகளின் விபரங்களை திரட்டுக

## மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு துணுக்காய், வெலிஓயா போன்ற பிரதேச செயலகங்களில் உள்ள சமூக சேவைத் திணைக்களத்தின் கிளைகளினூடாக மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற மாதாந்த பணத்தொகையை யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் பெற்றுக் கொடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மகிந்த சிந்தனைக் திட்டத்தி னூடாக மாற்றுத் திறனாளிகளுக்கு சமூக சேவைத் திணைக்கள கிளைகளினூடாக மாதாந்தம் மூவாயிரம் ரூபா பணம் வழங்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளின் அடிப்படையில் 30 மாற்றுத் திறனாளிகள் இனங்காணப்பட்டு மேற்படி தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

ஆனால், மாற்றுத் திறனாளிகள் ஒவ்வொரு பிரதேசத்திலும் யுத்தத்திற்கு பின்னர் அதிகரித்து காணப்படுவதால் அவர்களையும் இனங்கண்டு இத் தொகையை நூறாக அதிகரிக்கும் படி பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத இராசி பலன்கள்

# 15.06.2013-16.07.2013



## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதங்கள்

**குரு பார்க்கக் கோடி நன்மை!**

**விருந்தினர்களை வியக்கும் விதம் உபசரிக்கும் தனுசு இராசி நேயர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் மாதத் தொடக்கத்திலேயே மகிழ்ச்சி தரும் விதத்திலேயே கிரகங்களின் சஞ்சாரம் இருக்கிறது. குருபார்க்க கோடி நன்மை அல்லவா? இராசிநாதன் குரு உங்கள் இராசியை பார்க்கும்பொழுது தொட்ட காரியங்கள் வெற்றி பெறும். தொல்லை கொடுத்தவுர்கள் விலகுவர். வெற்றிக்குரிய செய்திகள் வீடு வந்து சேரும்.

உற்றார் உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படப் போகிறார்கள். கவலை என்ற மூன்றெழுத்து சனியின் வக்ர நிவர்த்திக்குப் பின்னால் அகலப் போகிறது. பணப் புழக்கம் அதிகரிக்கும் இந்த நேரத்தில் இதைச் செய்யலாமா? அதைச் செய்யலாமா?என்று சிந்திப்பீர்கள். கொடுக்கல்- வாங்கல்கள் சீர்செய்து கொள்ளுங்கள். வருமானம் சேமிப்பாக மாறும்.

தேங்கிய காரியங்கள் இனி துரிதமாக நடைபெறும். தெய்வ திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். கடந்த ஓராண்டாக உத்தியோகத்தில் முன்னேற்றம் வரவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு இப்பொழுது உத்தியோக உயர்வும் ஊதிய உயர்வும் கிடைத்து சந்தோஷப்படப் போகிறீர்கள். குரு சுக்ர சேர்க்கையோடு மாதம் தொடங்குவதால் கொடி கட்டிப் பறந்த பிரச்சினைகள் படிப்படியாக அகலும். அடிப்படை வசதிகளை பெருக்கிக் கொள்வீர்கள்.

ஆதாயம் அதிகரிக்கும். அந்நிய தேசப் பயணம் கூட ஒரு சிலருக்கு எண்ணியபடியே வந்து சேரலாம். மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெற்று மகிழ்ச்சி காண்பீர்கள். சேமிப்புகள் உயரும். தேசப்பற்று மிக்கவர்களுக்கு அரசியலில் புதிய பொறுப்புகள் வந்து சேரலாம்.

**கடகச் சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜுன் 23 ஆம் திகதி கடக இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். ஆறுக்கு அதிபதி சுக்ரன் எட்டில் சஞ்சரிப்பது யோகம்தான். கெட்டவன் கெட்டில் கிட்டும் இராஜயோகம். என்பதற்கு இணங்க நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். நம்பிக்கைக்கு உரியவர்கள் உங்களுக்கு துணையாக இருப்பர். மற்றவர்களுக்கு மத்தியில் உங்கள் புகழ் பேசப்படும். கொட்டமடித்து உங்கள் குதூகலத்தைக் கெடுத்தவர்கள் இனி விலகுவர்.

**மிதுனச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜுலை 4 ஆம் திகதி மிதுன இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார்கள். இதன் விளைவாக விரயங்கள் கொஞ்சம் கூடுதலாக இருக்கும். இடம், பூமி விற்பனையால் லாபம் கிடைத்தாலும் அதைக் கைப்பற்றிக்கொள்ள இயலுமா? என்பது சந்தேகம்தான். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். உடன்பிறப்புகள் வழியே ஒரு தொகையை செலவிடும் சூழ்நிலை உருவாகும். பிள்ளைகளை அவர்கள் போக்கில் விடாமல் கண்காணித்துக்கொள்வது நல்லது.

**சனியின் வக்ர நிவர்த்திக்காலம்!**

ஜுலை 4 ஆம் திகதி வக்ர நிவர்த்தியாகிறார். இது நன்மை தான். தனாதிபதி வக்ர நிவர்த்தி ஆவதால் தன வரவு அதிகரிக்கும். கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். வளர்ச்சி அதிகரிக்கும். தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி அல்லது வாங்கும் முயற்சி அனுகூலமாக இருக்கும்.

இம்மாதம் சனீஸ்வரர் வழிபாட்டையும் குரு வழிபாட்டையும் முறையாக மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கு சிறப்பு பலன்கள்**

இம்மாதம் உங்களுக்கு இனிய மாதமாகும். குருவின் பார்வையால் இதுவரை இருந்த தடைகள் அகலும். தன வரவு தாராளமாக வந்து கொண்டேயிருக்கும். உடல் நலம் சீராகும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். கணவன்- மனைவிக்குள் அன்னியோன்யம் அதிகரிக்கும். கடந்த சில மாதங்களாக இழுபறியாக இருந்த காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். எதிர்கால நலன்கருதி உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்க முன்வருவர். விலகிச் சென்ற வர்கள் விரும்பி வந்து சேரும். இம்மாதத்தில் வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குருவை வழிபட்டு வருவது நல்லது. முல்லைப்பூ மாலை சூட்டி வழிபட்டால் எல்லையில்லாத நற்பலன்கள் கிடைக்கும். இல்லம் தேடி நல்ல தகவல்களும் வந்து சேரும்.

## இராசிநாதன் உங்கள் இராசியைப் பார்க்கும் பொழுது, தொட்ட காரியங்கள் வெற்றிபெறும்

# சிவல்புரி சிங்காரம்



## மகரம்

உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

**சனியின் வக்ர நிவர்த்திக்குப் பின் சஞ்சலங்கள் தீரும்!**

**ஏதேனும் ஒரு சாதனை புரிய வேண்டும் என்ற எண்ணத்தில் செற்படும் மகர இராசி நேயர்களே!**

ஆனி மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஆறாமிடத்தில் குருவின் சஞ்சாரம் ஒருபுறம், ராசிநாதன் சனி வக்ர இயக்கம் ஒரு புறம் இருப்பதால் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து செயற்படுவது நல்லது. மேலும் அஷ்டமத்தில் சந்திரன் அமர்ந்து இந்த மாதம் தொடங்குகிறது. எனவே, மாதத் தொடக்கத்தில் விரயங்களும் மன நிம்மதிக் குறைவும் ஏற்படலாம்.

வீட்டில் உள்ளவர்களையும் வெளியில் பணிபுரியும் இடத்தில் உள்ளவர்களையும் அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதியையும் ஆதாயத்தையும் அடைய முடியும். குடும்ப சுமை கூடும். கொடுக்கல்- வாங்கல்களில் திருப்தி ஏற்படுமா? என்பது சந்தேகம்தான். பஞ்ச ஸ்தானத்தில் செவ்வாய் பலம் பெற்றிருப்பதால்பிள்ளைகள் வழியில் நல்ல தகவல்கள் வந்து சேரலாம்.

குழந்தைகளில் கல்வி வாய்ப்பு கடல் தாண்டும் வாய்ப்பு கல்யாண வாய்ப்பு போன்றவற்றிற்காக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் விலகுவர். புத ஆதித்ய யோகம் இருப்பதால் புத சுக்ர யோகம் இருப்பதாலும் பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பொருளாதார வளர்ச்சி சீராக இருக்கும்.

நான்கில் கேது, பத்தில் இராகு சஞ்சரிக்கிறார்கள். எனவே, உடல் ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். மருத்துவச் செலவுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கும். ஒரு சிலருக்கு இடமாற்றங்கள் ஏற்படலாம். தந்தை வழி உறவில் அனுசரிப்பு தேவை. வாங்கிய இடத்தை விற்கிறோமே என்று கவலைப்படுவீர்கள். ராகு, கேது பரிகாரம் செய்வது நன்மையைத் தரும்.

**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜுன் 23 ஆம் திகதி கடக இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். இதன்விளைவாக கல்யாணக் கனவுகள் நனவாகும். பிள்ளைகள் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தங்கம், வெள்ளி போன்ற ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பெண்வழிப் பிரச்சினைகள் அகலும். நாதனப் பொருட்களின் சேர்க்கை உண்டு. சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது நடைபெறத் தொடங்கும். வாகனம் வாங்கி மகிழும் வாய்ப்பும் ஒரு சிலருக்குக் கிடைக்கும்.

**மிதுனச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜுலை 4 ஆம் திகதி மிதுன இராசியில் செவ்வர் சஞ்சரிக்கப்போகிறார். 4,11 க்கு அதிபதி ஆறில் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. எதிர்பார்த்த காரியங்கள் கொஞ்சம் தமதப்படலாம். உடன் இருப்பவர்கள் உங்களை விட்டுவிலக நேரிடும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்குமா எனபது சந்தேகம்தான். திடீர் பயணங்கள் திகைக்க வைக்கும். உடல் ஆரோக்கித்திற்கென்று ஒரு தொகை செலவாகலாம். கடன் சுமை கூடும் நேரமிது.

**சனியின் வக்ர நிர்த்திக் காலம்!**

ஜுலை 4 ஆம் திகதி சனி வக்ர நிவர்த்தியாகிறார். இராசிநாதன் வக்ர நிவர்த்தியாகும் பொழுது அனைத்துக் காரியங்களும் ஜெயமாகும். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்த உதவி செய்வார்கள். பத்தில் சனி உச்சம் பெறுவதால் செல்வாக்கு மேலோங்கும். செல்வநிலை உயரும். கொள்கைப் பிடிப்போடு செற்படுவீர்கள்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் ராமபிரான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கு சிறப்பு பலன்கள்**

இம்மாதம் வரவும் செலவும் அதிகரிக்கும் மாதமாகவே கருதலாம். வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்திலேயே பூர்த்தியாகும். குருவின் பார்வை பலத்தால் பணவரவு திருப்திகரமாகவே இருந்தாலும் மனநிம்மதி குறைவாகவே இருக்கும். மாற்று மருத்துவத்தால் உடல் நலத்தை குணமாக்கிக் கொள்ளுங்கள். மாதத் தொடக்கத்தில் விரயங்களும் நடுப்பகுதியில் வரவும் கடைசிப் பகுதியில் அற்புதமான பலன்களும் கிடைக்கும். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குடும்ப இரகசியங்களை வெளியில் சொல்லாதிருப்பது நல்லது. குழந்தைகள் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஆறுபடை வீட்டு அழகன் முருகனை ஏதாவது ஒரு படை வீட்டிற்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது. (தொடரும்)

## ஆற்றல்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து வெற்றிகள் அனைத்தையும்பெற்றுத்தருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “எனது கேள்விகளுக்கு சித்தர் அளித்த பதில்கள்”



ஆன்மீகம் 35

**அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி**

சித்தர்:- உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் தையல் போட்டால் தான் இரத்தம் வழிவது நிற்கும் என்றார் படபடப்பாக. இதைக்கேட்டதும் சித்தர் சிரித்தவாறே இரத்தம் நிக்கணும். அவ்வளவு தானே என்றதும் அந்த நண்பர் ஆமாம் என்பது போல தலையாட்ட, சித்தர் தன் தோளிலிருந்த பையை எடுத்து உள்ளே ஒரு சிறிய டப்பியிலிருந்து மருந்து உருண்டையை அருகிலிருந்த வைத்தியர் கையில் கொடுத்து இதை காயத்துல வெச்சி அமுங்குங்க என்றதும் வைத்தியரும் பயபக்தியுடன் அதை நிறைவேற்ற அடுத்த கணமே இரத்தம் தன் பயணத்தை நிறுத்திக்கொண்டது. இது கண்ட நாங்கள் அனைவரும் ஆச்சரியத்தால் ஆணி அடித்தாற்போல் நின்றோம்! வாங்க போகலாம் பையனுக்கு ஒன்னும் ஆகாது. மூன்று தடவை குளிச்சா எல்லாம் சரியாயிடும்! என்று கூறிவிட்டு நடக்கத் துவங்கினார். நாங்கள் பின்தொடர்ந்தோம். பச்சை மலையை விட்டு இறங்கினோம். அச்சிரமத்தை அடைந்தோம். சித்தர் சொன்னதுபோல் சிறுவன் மூன்றுமுறை தலை குளித்ததும் அவன் தலையில் அவ்வளவு பெரிய காயம் ஏற்பட்டதற்கான அறிகுறியே இல்லை. இதைக் கண்டதும் என் மனக்கண்ணில் சென்னை நகரில் ஐந்து நட்சத்திர வசதிகளோடு கூடிய தனியார் மருத்துவமனைகளில் வானுயர்ந்த கட்டடங்கள் தெரிந்தன. திரும்பிப் பார்த்தேன் சித்தர் ஆச்சிரமத்தை. அந்தச் சிறு ஓலைக் குடில் வானளவு உயர்ந்து கொண்டே போனது! அந்த ஆடம்பர மருத்துவமனைகள் இதற்கு எதிரே கடற்கரையில் சிறுவர்கள் கட்டு விளையாடும் மணல் வீடுகளாகத் தோன்றின. என் மனம் சித்தரின் பெருமையை எண்ணிச் சிலிர்த்தது.



குழந்தைகளுக்கு அன்னதானம்

**சித்தரின் குடிசையில் தஞ்சம்**

மலையேறிய களைப்புத் தீரந்த பின் சித்தர்பெருமானிடம், விடைபெற்று சென்னை திரும்பினேன். வந்தவுடன் என்னைத் தேடி கங்கைஅமரன் தயாரிப்பு நிர்வாகியான அம்சராஜ் என்பவர் போன் செய்ததாக என் தாயார் கூறினார். தொலைபேசியில் அம்சராஜை தொடர்பு கொண்டேன். ஒரு படப்பிடிப்பு துவங்குவதாகக் கூறி சென்னை வருமாறு கூறி இருந்தார். படப்பிடிப்பு நடந்து முடிந்துவிட்டது! இதற்கிடையே எனக்கு தெரிந்தவர்களிடம் அன்னதானத்திற்கு அரிசி மூட்டை வாங்கி, கொடுக்குமாறு கேட்டேன். சிலர் அளித்தார்கள் பலர் இல்லை என்று இளித்தார்கள்! அதோடு விட்டார்களா! ராஜ்குமார் புதுவழியில் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டான்! சித்தர் என்கிறான். புத்தர் என்கிறான் புரிந்துகொள்ளமுடியாதவாறு ஏதேதோ கூறுகிறான். சாமியார் பொழைப்பில் உடலுழைப்பில்லாமல் உல்லாசமாக வாழ, ஏதேதோ கதைகள் கூறுகிறான், என்றெல்லாம் புறம்பேசத்துவங்கினார்கள். அவன் ஒருவழியில் புத்திசாலிப்பா! ஆனானப்பட்டவர்கள் எல்லாம் தானானப்போடும்போது வேஸ்ட் லக்கேஜான இவன் டைரக்டராக முடியுமா? வெறும் பேச்சு சாதுர்யத்தில் காலம் தள்ளும் இவன் சினிமாவில் கஷ்டம் என்று புரிந்துகொண்டு காலத்திற் கேற்ற கோலத்தில் புகுந்து விட்டான் என்றெல்லாம் ஏளனம் செய்தனர்.

தொடரும்

# அடிமைக் கூண்டில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்ப் பறவைகள்



பாப்ரே என்கிற கனடா நாட்டின் எதிர்க்கட்சித்தலைவர், வடகிழக்கில் என்னதான் நடக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக கொழும்புக்கு வந்தார். விமான நிலையத்திலிருந்து வெளியே வரக்கூட அனுமதிக்காமல், அடுத்த விமானத்திலேயே கனடாவுக்கு திருப்பி அனுப்பியது பாதுகாப்புச் செயலரின் கூலிப் படை. அதே கூலிப்படை, டி.ஆர். பாலு, சுஷ்மா ஸ்வராஜ், ரவி சங்கர் கோஷ்டிகள் சென்றால் மட்டும் பல்லை இளித்துக் கொண்டு ரத்தினக் கம்பளம் விரிக்கிறதே, ஏன்? அந்த சுசியத்துக்குள்தான் இருக்கிறது வசியம்.

பாப்ரே போன்றவர்களை உள்ளே விட்டால், நடந்தது இனப்படுகொலை தான் என்பது சர்வதேச அரங்கில் ஆதாரங்களுடன் அம்பலமாகிவிடும். நம் ஊர் பிரகஸ்பதிகளோ, நடந்த இனப்படுகொலையை மூடிமறைக்க இலங்கை கொடுக்கும் கூலிக்கு ஏற்ற மாதிரி ஏற்றம் இரைப்பார்கள். அதற்காக இல்லாமல் வேறு எதற்காக அழைக்கிறார்கள் இவர்களை? இந்த நயவஞ்சகர்களன் தாய்மண்ணான இந்தியாவில் பிறந்ததைவிட, பாப்ரே பிறந்த கனடாவில் பிறந்திருக்க கூடாதா நாம்! காந்திதேசம் என்கிற ஊசிப்போன ஒரு மோசடிப் பெருமிதத்தோடு இன்னும் எத்தனை நாளைக்குத்தான் நடமாடப் போகிறோம்!

இங்கேயிருந்து ஆயுதங்கள் அனுப்பப்பட்டன - ஒன்றரை லட்சம் பேரைக் கொன்று குவிக்க! இப்போது, அரசியல் தலைவர்கள் அனுப்பப்படுகிறார்கள் - அதை மூடி மறைக்க! கொன்றது காங்கிரஸ். அதை மூடி மறைக்க, பாரதிய ஜனதா போகிறது, சிவசேனை போகிறது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் போகிறது, தி.மு.க. போகிறது, வி.சி போகிறது. ராஜீவ் காந்திகூட, தனது ஆட்சி அதிகாரத்தால்தான், இந்தியப் படையைக் கூலிப்படையாக அனுப்பினார். காங்கிரஸின் கூலிப்படையாக பாரதீய ஜனதா தலைவர்களையே அனுப்பும் சோனியாவின் சாமர்த்தியத்தோடு ராஜீவை ஒப்பிட்டால், சோனியாதான் சமர்த்து! சேவ் சோனியா சேவையில் சுஷ்மாராஜ் ஈடுபடுத்தப்படுவார் என்று பாரதீயஜனதா தொண்டர்கள் நினைத்தாவது பார்த்திருப்பார்களா?

இலங்கைக்குப்போய் வந்த இவர்களில் எவராவது- அங்கே நடந்தது இனப்படுகொலைதன் என்கிற உண்மையை சோனியாவை மீறி இங்கே வந்து பேசியதுண்டா? ஒன்றரை லட்சம் பேரும் தற்கொலை செய்துகொண்டதாக நினைக்கிறார்களா இவர்கள்? அப்படித்தான் என்றால் அதையாவது சொல்லித் தொலைக்க வேண்டியதுதானே?

கொழும்புக்குப் போய்விட்டுத் திரும்புகிற மகானுபாவர்களெல்லாம் மௌனம் சாதிக்கிற நிலையில் சைலன்சர் இல்லாத மோட்டார் பைக் மாதிரி கொழும்பிலிருந்து சவுண்டு கொடுக்கிறார் மஹிந்த ராஜபக்ச. ரவிசங்கர் கோஷ்டி அங்கிருந்து புறப்படுவதற்கு முன்பே- இனப்பிரச்சினைக்கான தீர்வினை வெள்யிலிருந்து இறக்குமதி செய்ய முடியாது என்று அறிவித்துவிட்டது அது. இந்த விடயத்தில் இந்திய ஓநாயைவிட இலங்கை நரியே பரவாயில்லை. நாமும் அதைத்தானே சொல்கிறோம்- ஈழம் என்பது தமிழரின் தாயகம். அந்த மக்களுக்கு எது தேவை என்பதை இந்தியாவிலிருந்து மட்டுமல்ல, கொழும்பிலிருந்துகூட இறக்குமதி செய்யக் கூடாது என்கிறோம் நாம்.

ஈழம்- ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அவர்கள் வாழ்ந்த மண் மட்டுமில்லை, அவர்கள் ஆண்ட மண். சிங்களவர்கள் அவர்களை ஆண்டிருப்பது சுமார் 65 ஆண்டுகள்தான். அதற்குமுன் பல நூற்றாண்டுகளாக தங்களைத் தாங்களே ஆண்டவர்கள் அவர்கள். பல நூற்றாண்டுக்கால சுதந்திர வரலாற்றை 65 ஆண்டுகால அடிமை வரலாறு அடித்துத் திருத்தி எழுதிவிட முடியுமா?

தங்களுக்கு எது தீர்வு என்று முடிவு செய்யும் உரிமை, அந்த மண்ணின் மைந்தர்களுக்கே உரியது. அதனால்தன் உலகெங்கிலும் இருக்கிற தமிழ்ச் சமூகம் ஈழ மக்களிடம் பொதுவாக்கெடுப்பு நடத்துங்கள்- என்று சர்வதேசத்திடம் மன்றாடுகிறது. ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் எப்படிப் பேசுவார்களோ, அப்படித்தான் பேசுகிறோம் நாம். அவர்கள் தலைவிதியை அவர்களே தீர்மானிக்க அனுமதியுங்கள்- என்று கேட்கிறோம். பறப்பதா? வேண்டாமா? என்பதைப் பறவைகளே தீர்மானிக்கட்டும் என்கிறோம்.

நாம் என்ன சொல்கிறோம் என்பதைப் புரிந்துகொண்டே புரியாதமாதிரி நடிக்கிறது காங்கிரஸ். தமிழீழம்தான் தீர்வென்று இங்கேயிருந்து சொல்ல நீங்கள் யார்? அந்த மக்கள் அதைச் சொல்லட்டும் என்கிறார்கள் இந்த யோக்கியர்கள். நாமும் அதைத்தானே சொல்கிறோம்... என்ன வேண்டும் என்று அந்த மக்களே முடிவெடுக்கட்டும் என்பதுதானே நமது நிலையும்! தெளிவான தமிழில் தானே அதைச் சொல்கிறோம்! இந்தத் தெளிவான தமிழ் பச்சைக் குழந்தைகளின் படுகொலையைக்கூட பார்த்துப் பார்த்து ரசிக்கிற இளங்கோவன்களுக்குப் புரியாமல் இருக்கலாம்...வாசம் போன்றவர்களுக்குமா புரியவில்லை?

தனித் தமிழ் ஈழமா? 13-வது சட்டத் திருத்தம் குறிப்பிடும் அதிகாரப் பரவலா? இந்த இரண்டுமே இல்லாமல், சிங்கள அதிகாரத்தின் கீழ் அடிமைகளாகவே இருப்பதா? இவற்றில் எது தீர்வு என்பதை அந்த மக்களே தீர்மானித்துக்கொள்ளட்டும். காங்கிரஸ் எதற்காக குறுக்கே வரவேண்டும்?

நம்மைப் பொறுத்தவரை, நாம் வெளிப்படையான தமிழ் ஈழ ஆதரவாளர்கள். தனித் தமிழ்ஈழம் அமைய வேண்டியதன் அவசியம் என்ன என்பதை வரலாற்றை வாசித்து உணர்ந்தவர்கள். தமிழ் ஈழம்தான்தீர்வு- என்று 1977லேயே ஈழத் தமிழ் உறவுகள் தேர்தல் மூலம் தீர்மானித்ததை அறிந்தவர்கள். என்றாலும் தமிழ்ஈழம் வாங்கிக் கொடுங்கள் என்று எவரிடமும் போய்க் கையேந்தவில்லை நாம். தமிழ் ஈழம் தேவையா- என்று அந்த மக்களிடமே பொதுவாக்கெடுப்பு நடத்துங்கள் என்று ஜனநாயகம் தான் பேசுகிறோம். ராஜீவ்காந்தி என்கிற இவர்களது கனவு நாயகன் இப்படி ஜனநாயகம் பேசியவரா?

-புகழேந்தி தங்கராஜ்- (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

488

## பொற்கைப் பாண்டியன்



கொற்கையைத் தலை நகராகக் கொண்டு ஆண்டு வந்த பாண்டியர்களுள் பொற்கைப் பாண்டியனும் ஒருவன். கொற்கை என்பது மதுரை கயம்பதியைச் சார்ந்த ஓர் ஊர். எனவே, இதனோடும் மதுரையையும் பாண்டிய மன்னர்களது தலைநகராகக் கூறுவது உண்டு. பொற்கைப் பாண்டியன் என்ற பெயர் எப்படிப் பாண்டிய மன்னனுக்கு ஏற்பட்டது தெரியுமா?

இந்தப் பாண்டியன் ஆண்ட காலத்தில் மக்கள் எவ்விதக் குறையும் இன்றி இருந்தனர். திருட்டுபயம் என்ற பேச்சே அந்த நாட்டில் இல்லாமல் இருந்தது. மன்னனும் மாறுவேடம் பூண்டு நகரில் இரவுவேளைகளில் சுற்றி வருவான்.

**அம்புலிமாமா கதைகள்**

அப்போது யாராவது ஏதாவது குறை இருப்பதாக இரகசியமாகப் பேசிக் கொண்டால் கூட, அதைத் தெரிந்து கொண்டு அக்குறையைத் தீர்த்து விடுவான். ஒரு நாளிரவு வழக்கப்படியே பாண்டிய மன்னன் நகரைச் சுற்றி வந்தான். அப்போது ஓர் அந்தணர் வீட்டிலிருந்து பேச்சுக்குரல் வரவே அங்கு சற்று நேரம் நின்றான். அந்த வீட்டில் இருப்பது இருவரே, அந்தண தம்பதி. அவர்களுக்குக் குழ்ந்தை குட்டி கிடையாது.

அந்தணன் தன் மனைவியிடம் "நீ சற்றும் கவலைப் படாதே. நம் பாண்டிய மன்னன் இருக்கும் வரை உனக்கு எவ்விதக் குறைவும் ஏற்படாது. நானோ ஆறு மாதக் காலந்தான் இங்கே இல்லாமல் காசியாத்திரையில் இருப்பேன். வீட்டிலோ ஒரு வருடத்திற்கு வேண்டிய சாமான்கள் இருக்கின்றன" என்றான்.



அதற்கு அவனுடைய மனைவி "நான் சாப்பாட்டைப் பற்றிக் கவலைப்படவில்லை. இந்த வீட்டில் இரவு வேளையில் தன்னந்தனியாக எப்படி இருப்பது?" என்று தான் கவலையை வெளியிட்டாள். அதற்கு அந்தணன் நான் தான் சொன்னேனே, மன்னன் இருக்க நீ ஏன் பயப்பட வேண்டும்? அவனது நேர்மை யான ஆட்சியில் உனக்கு எவ்விதத் தீங்கும் நேராது. நானும் இன்றைக்குச் சரியாக ஆறாவது மாதம் அமாவாசை அன்று இங்கு வந்துவிடுவேன். கவலைப் படாதே" எனத் தேற்றினான். அரசனும் அத்தம்பதி பேசிக் கொண்டதைக் கேட்டுவிட்டுச் சென்றான்.



மறுநாள் அந்தணன் காசிக்கு கிளம்பி போய்விட்டான். பாண்டிய மன்னன் மாறுவேடம் பூண்டு தினமும் இரவு வேளைகளில் அவனது வீட்டு வாசலில் காவல் காத்துவிட்டு விடியும் வேளைக்கு அரண்மனை திரும்பி விடுவான். இது யாருக்கும் தெரியாது. ஆறு மாதங்களும் கழிந்தன.

அந்தணன் தான் குறிப்பிட்ட அமாவாசை அன்று காசியின்று திரும்பி வீடு வந்து சேர்ந்தான். அது பாண்டிய மன்னனுக்குத் தெரியாது. வழக்கம்போல அன்று இரவும் அந்தணன் வீட்டுவாசலில் காவல்புரிய அவன் செல்கையில் ஓர் ஆடவனின் குரல் அந்த வீட்டில் கேட்டு திடுக்கிட்டான். தன்மீது எத்தனை நம்பிக்கை இருந்தால், அந்தணன் ஆறுமாத காலம் மனைவியைத் தனியே விட்டுச் சென்றிருப்பான்! என்ன தைரியம் இருந்தால் இரவு வேளையில் தனித்து இருக்கும் பெண்ணின் வீட் டுக்குள் ஒரு கயவன் புகுவான்? அவனைச் சும்மா விடக்கூடாது என்றும் இவ்வாறு எண்ணிய மன்னன் வீட்டு வாயிற்கதவை நெருங்கினான். தான் கேட்டது அதே அந்தணரின் குரல்தான் என்று மன்னனுக்குத் தெரியவில்லை. காரணம், அவருடைய குரல் அன்று சற்றே மாறி இருந்தது.

வாயில் கதவை பலமாகத் தட்டியதுடன், சாவி துரம் வழியே உள்ளே இருப்பது யார் என்று எட்டிப் பார்த்தான். அப்போது "யாரது?" எனக் கேட்டுக்கொண்டே அந்த வீட்டின் சொந்தக்காரரான அந்தணன் . எழுந்து வருவது கண்டு மன்னன் திடுக்கிட்டான். தான் கதவைத் தட்டி மாபெரும் தவறை செய்து விட்டதாக நினைத்தான். ஏனெனில் , தான் ஊரில் இல்லாத போது தினமும் யாரோ ஒருவன் தன் வீட்டி ற்கு வந்து போய் கொண்டிருந்தான் என்று அந்தணன் சந்தேகிப்பதற்கு அது இடம் கொடுக்குமல்லவா?

மறு விநாடியே அரசன் அக்கம் பக்கத்திலுள்ள ஐந்தாறு வீட்டுக்கதவுகளைத் தட்டி விட்டு அந்தத் தெருவினின்றும் ஓடி வேறு பல தெருக்களில் புகுந்து தன்னுடைய அரன்மனையை அடைந்து விட்டான். கதவு தட்டப் பட்ட வீடுகளில் இருந்த பல அந்தணர்கள் வெளியே வந்து பார்த்தனர். யார் கதவைத் தட்டியது என்று அவர்களுக்கு தெரிய வில்லை. யாரோ திருடனாக இருக்க வேண்டும் என நினைத்து மறுநாள் மன்னனிடம் முறையிட அவர்கள் தீர்மானித்தனர்.

மறுநாள் அந்தணர்கள் அரசனிடம் சென்று முன்னிரவு நடந்த அதிசய சம்பவத்தைக் கூறி "இது மாதிரி தங்களது ஆட்சியில் என்றுமே நிகழ்ந்தது இல்லை" என முறையிட்டனர். அதைக் கேட்ட பாண்டியன் தன்னுடைய மந்திரிகளிடம் "இந்தக் குற்றத்தைச் செய்தவன் அகப்பட்டால் அவனுக்கு என்ன தணடனை விதிக்க வேண்டும்" என்று கேட்டான்.

அதற்கு மந்திரிமார் "கதவைத்தட்டிய அவனது வலதுகையை வெட்டி எறிய வேண்டும்" என்றனர். உடனே பாண்டிய மன்னன் தனது இடைவாளை உருவி இடது கையால் தனது வலது கையை வெட்டிக் கொண்டு விட்டான். பின்னர், அத்தகைய செயலைச்செய்தது தானே என்பதை கூறி அதற்கான காரணத்தையும் கூறினான்.

அதைக்கேட்டதும் அனைவருக்கும் வியப்பும் வருத்தமும் உண்டாயிற்று. உடனே பொன்னாலான ஒரு கையைச் செய்து அவனது வெட்டுண்ட கையோடு பொருத்தி அரசனையும் அழைத்துக் கொண்டு மதுரையில் கோயில் கொண்டு உள்ள சுந்தரேஸ்வரின் ஆலயத்திற்குச் சென்றனர். இறைவனை யாவரும் வழிபட அப்பாண்டியனின் கை முன் போலவும் எப்போதும் தங்கமயமாகவும் இருக்க அருள் புரிந்தார். அன்று முதல் அவனுக்கு பொற்கைப் பாண்டியன் என பெயர் ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தச் சட்டம் மாற்றுவதை விரும்பவில்லை

## ஐரோப்பிய ஒன்றியம்

(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்கள் செய்வதை விரும்பவில்லை என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தற்போதைய அரசியல் சாசனத்தில் காணப்படும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அவ்வாறே முன்னெடுக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

உத்தேச திருத்தங்களை இன்னமும் பார்வையிடவில்லை என இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி பேர்னாட் சவேஜ் தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு பதிலீடாக 19 ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக அறிந்து கொண்டதாகவும் அதன் உள்ளடக்கங்கள் பற்றி போதிய தெளிவு கிடையாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும் வடமாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (2)

# பாரா. தெரிவுக் குழுவில் இணைய ஐக்கிய தேசிய கட்சி நிபந்தனைகள்

(கொழும்பு)

13 ஆவது அரசியலமைப்பில் மாற்றங்களை கொண்டு வருவதற்காக அரசாங்கத்தால் பிரேரிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக் குழுவில் இடம்பெறுவதில்லை என்று தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி சில நிபந்தனைகளின் அடிப்படையில் இந்தக் குழுவில் இணைவது என தீர்மானித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதம அமைப்பாளர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்நிபந்தனைகளில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதும் உள்ளடங்குகின்றது.

அத்துடன் 17 ஆவது அரசியலமைப்பை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஊடக சுதந்திர அமுலாக்கல் என்பதையும் தமது நிபந்தனைகளில் அடங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# திருநெல்வேலியில் தீ விபத்து

திருநெல்வேலியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற தீ விபத்தில் சுமார் 5 இலட்சம் பெறுமதியான பொருட்கள் முற்றாக சேதமடைந்தன.

இராமலிங்கம் வீதி, திருநெல்வேலியில் மு.ரவிச்சந்திரன் என்பவரின் வீட்டில் அமைந்திருந்த களஞ்சியசாலையிலேயே இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

மின் ஒழுக்கு காரணமாக இத் தீ விபத்து இடம்பெற்றிருக்கலாம் என கூறப்பட்டது. உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த யாழ். மாநகர சபையின் தீ அணைப்பு பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். (எ)

# 8 மீனவர்கள் சிறைபிடிப்பு

(கொழும்பு)

கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 8 மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு இலங்கை கடற்படையினரால் சிறைபிடித்து செல்லப்பட்டதாக இந்திய ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கச்சத்தீவு அருகே தங்கள் பாரம்பரிய இடத்தில் மீன் பிடிக்கும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்து செல்வது வழக்கமான நிகழ்வாகி விட்டது.

எனவே கச்சதீவை மீட்டு இதற்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று தமிழக மீனவர்கள் வலியுறுத்தி கொண்டிருந்தனர்.

இந்நிலையில் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 8மீனவர்கள் நேற்று முன்தினம் கச்சதீவு அருகே மீன் பிடித்துக் கொண் டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் தங்கள் எல்லைக்குள் மீன்பிடித்ததாகக் கூறி 8 மீனவர்களையும் சிறைபிடித்து அவர்களைத் தலைமன்னாருக்கு கொண்டு சென்றதாக கூறப்படுகிறது. மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்டது பற்றி தகவல் அறிந்ததும் அவர்களின் உறவினர்கள் கவலையடைந்துள்ளனர். (எ-1)

# நாட்டை பிளவுபடுத்த முடியாது; 13 ஆவது திருத்தச் சட்டம் மாற்றம்

## *ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு*

(கொழும்பு)

நாடு பிளவடைவதைத் தடுக்கவே 13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்படுவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி இந்த விளக்கத்தை அளித்துள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்காலத்தில் நாடு பிளவடையாது ஐக்கியத்தை கட்டிக்காக்கவே 13 ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்கள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாகாணங்கள் என்ன சொன்னாலும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்கள் எதனை பரிந்துரை செய்தாலும் நான் ஜனாதிபதியாக இருக்கும் வரையில் நாட்டை பிளவுபடுத்த அனுமதிக்கமாட்டேன்.

எதிர்காலத்தில் பதவியேற்கும் எந்தவொரு ஜனாதிபதியினாலும் நாட்டை பிளவுபடுத்த முடியாத வகையில் சட்டத் திருத்தங்களைச் செய்யவே விரும்புகின்றேன். (2)




- 1579-சேர் பிரான்சிஸ் டிறேக் "நோவா அல்பியன்" (கலிபோர்னியா) என்ற நாட்டை இங்கிலாந்துக்காக உரிமை கோரினார்.
- 1631-முகலாய மன்னன் ஷாஜகானின் மனைவி மும்தாஜ் தனது 14 ஆவது மகப்பேறின் போது காலமானாள்.
- 1839 -ஹவாய் பேரரசில் கத்தோலிக்கர் தமது சமயத்தை வழிபடுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.
- 1885-சுதந்திரச்சிலை நியூயோர்க் துறைமுகத்தை வந்தடைந்தது.
- 1940-இரண்டாம் உலகப் போர்: பாரிசை ஜேர்மனி கைப்பற்றியதை அடுத்து நட்பு நாடுகளின் படைகள் பிரான்சை விட்டு விலகத் தொடங்கின.
- 1940-இரண்டாம் உலகப் போர்:லங்காஸ்ட்ரியா என்ற ஐக்கிய இராச்சியக் கப்பல் பிரான்சில் மூழ்கடிக்கப்பட்டதில் 4 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்தனர்.
- 1940-இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியப் படைகள் லிபியாவில் கப்பூசோ துறைமுகத்தை இத்தாலியர்களிடம் இருந்து கைப்பற்றினர்.
- 1940-எஸ்தோனியா, லாத்வியா மற்றும் லித்துவேனியா ஆகிய பால்ட்டிக் நாடுகளை சோவியத் ஒன்றியம் கைப்பற்றியது.
- 1944-ஐஸ்லாந்து டென்மார்க்கிடம் இருந்து விடுதலை அடைந்து குடியரசாகியது.
- 1944-பிரெஞ்சுப் படைகள் எல்பா தீவை ஜேர்மனியிடம் இருந்து விடுவித்தன.
- 1954-குவாத்தமாலாவில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.
- 1953-பெர்லினில் கிழக்கு ஜேர்மனி அரசுக்கெதிராக இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் சோவியத் படைகளினால் நசுக்கப்பட்டதில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர்.
- 1987-மாலைநேர கடல் குருவியினத்தின் கடைசிக் குருவி இறந்ததில் அவ்வினம் முற்றாக அழிந்தது.

பிறப்புகள்

- 1703-ஜோன் வெஸ்லி, மெதடிஸ்தத்தை ஆரம்பித்தவர் (இ. 1791)
- 1942-மொகம்மது எல்பரதேய், பன்னாட்டு அணுசக்தி அமைப்பின் தலைமை இயக்குநர். நோபல் பரிசு பெற்றவர்
- 1973-லியாண்டர் பயஸ், இந்திய டெனிஸ் வீரர்
- 1980-வீனஸ் வில்லியம்ஸ், அமெரிக்க டெனிஸ் வீராங்கனை

*இறப்புகள்*

- *1858 - ராணி லட்சுமிபாய் (ஜான்சிராணி), இந்திய விடுதலைப் போராட்ட வீராங்கனை (பி. 1835)*
- 1911 - வாஞ்சிநாதன், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி. 1886)
- 2001 -டொனால்ட் கிராம், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1919)

### ஜான்சிராணி



ஜான்சி ராணி என அழைக்கப்படும் ராணி இலட்சுமிபாய் 1835ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி வாரணாசியில் மௌரியபந்தர்-பகீரதிபாய் தம்பதியினருக்கு மகளாகப் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் மணிகர்ணிகா.

இவருக்கு நான்கு வயதாகும்போது பகீரதிபாய் இறந்து போனார். இவர் சிறு வயதிலேயே குதிரையேற்றமும் வாள் வீச்சும் கற்றுக் கொண்டார்.

தொடர்ந்து ஜான்சியை ஆண்ட ராஜா கங்காதர ராவ் நெவல்கர் என்பவருக்கு 1842 ஆம் ஆண்டில் மணிகர்ணிகாவைத் திருமணம் செய்து வைத்தார் அவரது தந்தை. அதிலிருந்து மணிகர்ணிகா ராணி இலட்சுமிபாய் என அழைக்கப்பட்டதுடன் ஜான்சியின் ராணியாகவும் பதவியேற்றார். இவர்களுக்கு பிறந்த குழந்தை இறந்துபோகவே கங்காதர ராவ் அரசரும் 1853 ஆம் ஆண்டு உடல் நலமிழந்து உயிரிழந்தார்.

இதையடுத்து ஜான்சி ராணி தமது வளர்ப்பு மகனை ஆட்சியில் அமர்த்த விரும்பினார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த ஆங்கிலேய ஆளுநர்கள் ஜான்சி நாட்டைவிட்டு வெளியேறுமாறு ராணியை பணித்தனர். ஜான்சியை விட்டு ராணி வெளியேறாதமையால் ஜான்சி மீது படையெடுத்தனர்.

துணிவுடன்போரை எதிர்கொண்ட ராணி இறுதியில் போரில் தோல்விகண்டு தனது வளர்ப்பு மகனுடன் மதிலிலிருந்து பாய்ந்து பெண்களைக்கொண்ட படையணியுடன் ஜான்சி நாட்டை விட்டு வெளியேறினார். தொடர்ந்து குவாலியர் நாட்டிற்கு சென்ற ஜான்சிராணி குவாலியரின் மகாராஜா ஜயாஜிராவைத் தோற்கடித்து குவாலியரின் கோட்டைஒன்றை கைப்பற்றினாள். இந்நிலையில் குவாலியரைகைப்பற்றும் நோக்கில் 1858 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17ஆமட திகதி வெள்ளையர் படைகள் குவாலியரை முற்றுகையிட்டது.

வெள்ளையரை எதிர்த்துப் போராடிய ஜான்சிராணி.ப்போரின்போது படுகாயமடைந்து அத்தினத்திலேயே வீரமரணத்தை தழுவிக்கொண்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் பொறிக்குள்... சிக்கியுள்ள இலங்கை




**16.06.2013 க்குரிய தொடர்ச்சி...**

இதைவிட கடலின் ஆழம் குறித்து பிரச்சினை ஒன்று பெரிதாகப் பேசப்படுகிறது. அதாவது, 17 மீட்டர் ஆழம் கொண்ட ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்திற்கு கப்பல்கள் வருவது சிக்கலான விடயம் என்கிற விவாதம் எழுப்படுகிறது. ஆனால், கொழும்புத் துறைமுகம் 15 மீட்டர் கொண்டதெனக் கூறும் துறைமுகம் பிரதான பொறியியலாளர் 35 மீட்டர் ஆழமுடைய துறைமுகம் உலகில் எங்கே உள்ளதென்று வாதிடுகின்றார். இத் துறைமுகத்தை நிராகரிப்பதற்கான பொருத்தமான காரணி இதுவல்ல என்பதுதான் அவருடைய வாதம்.

இத்தகை பிரச்சினைகளை எதிர்கொள்ளும் அரசு, சிட்னிக்கு அடுத்ததாக இயற்கை வளமிக்க ஆழ்கடல் துறைமுகமாக விளங்கும் 24 மீட்டர் ஆழம்கொண்ட திருகோணமலைத் துறைமுகத்தை ஏன் அபிவிருத்தி செய்ய முன்வரவில்லை? என்கிற கேள்வி எழுகின்றது. கொழும்புத் துறைமுகத்தைவிட நீர் மற்றும் நிலப்பரப்பளவை பத்து மடங்காகக் கொண்ட திருமலைத்துறைமுகத்தை அண்டிய பிரதேசத்தில் பிரித்தானியர் நிர்மாணித்த 100 இற்கும் மேற்பட்ட எண்ணெய் சேமிப்புக் குதங்கள் இருக்கின்றன. சீரற்ற காலநிலையிலும் எல்லா வகையான கப்பல்களும் வந்து செல்லக்கூடிய வசதிகள் அங்கு உண்டு.

மிகக்குறைவான வெளிநாட்டுக் கடனில் துரிதமாக அபிவிருத்தி செய்யக்கூடிய இடமே, இந்த கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலைத் துறைமுகம்.

அங்கு சீனாவை நேரடியாக இறக்கினால் தம்மீதான, இந்தியா மற்றும் அமெரிக்காவின் அழுத்தங்கள் முழு வீச்சுடன். பிரயோகிக்கப்படலாம் என்பதை உணர்ந்து அதனைத் தவிர்க்கும் வகையில் ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் தனது கவனத்தை அரசு செலுத்துகிறது என்கிற பார்வையும் உண்டு. வாக்கு வங்கியைப் பலப்படுத்தவும் இது பயன்படும்.

அடுத்ததாக 1.35 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் எக்ஸ்சிம் வங்கியின் உதவியோடு நிறுவப்பட்ட நுரைச்சோலை அனல் மின்நிலையத்தின் நிலைமை குறித்து பார்க்க வேண்டும். 19 தடவையாக ஆரம்பிப்பதும் இடைநிறுத்தவதுமாக இருக்கிறது அனுமின் நிலையத்தின் பரிதாபநிலை. இதற்காக வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் அதனை நிர்மாணித்த சீனாவிடமே திருப்பிக் கொடுக்கலாமா என்கிற சிந்தனையும் அரசிடம் உள்ளதாக சொல்லப்படுகிறது.

இதேபோன்று, சீனாவால் நிர்மாணிக்கப்பட்ட குவடோர் துறைமுகத்தின் நிர்வாகத்தை சிங்கப்பூர் கம்பனியிடமிருந்து பறித்தெடுத்து சீனாவிடமே அந்த நிர்வாகத்தை கையளிக்க பாகிஸ்தான் அரசு முயற்சிப்பதாக அண்மையில் ஒரு செய்தி வெளிவந்தது. அங்கும் வாங்கிய கடனிற்கான தவணைப் பணத்தைச் செலுத்த முடியாமல் பாகிஸ்தான் திண்டாடுவதாகக் கூறப்படுகிறது. அதனால் இந்த கைமாற்றங்கள் நடைபெறுவதாக நம்பப்படுகிறது.

இவைதவிர ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் வந்திறங்கிய சீனாவின் முதலீடு அந்த மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் பரவுவதைக் காண்கிறோம்.

ஹம்பாந்தோட்டை நகரிலிருந்து 43 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மாத்தல என்னுமிடத்தில் 26 பில்லியன் ரூபா கடனில் சர்வதேச விமான நிலையமொன்று கட்டப்பட்டுள்ளது. 2000 ஹெக்டர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்ட மாத்தல ராஜபக்ச சர்வதேச நிலையம் முதலீட்டிற்கேற்ற வருவாயை இதுவரை தரவில்லை.

இங்கு பயணங்களை மேற்கொண்ட ஒரே ஒரு விமானிகள் பயண சேவை நிறுவனமான எயார் அரேபியாவும் தனது சேவையை நிறுத்தப்போவதாக அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. அதேவேளை, அங்கு விமானங்கள் வந்துபோவது போல் காண்பிப்பதற்காக தினமும் கட்டுநாயக்காவிலிருந்து மாத்தல வரை உள்ளூர் விமானப் பயணங்களை அரசு மேற்கொள்கிறது.

பிழையான நேரத்தில் தவறான இடத்தில் இவ்விமான நிலையம் கட்டப்பட்டுள்ளது என்கிற விமர்சனம் பரவலாக இருக்கிறது. முதற்கட்டமாக வருடமொன்றிக்கு ஒரு மில்லியன் பயணிகளை, 45,000 மெற்றிக் தொன் சரக்குகளை ஏற்றி இறக்கக்கூடிய வகையில் வர்த்தக வியூகங்கள் வகுக்கப்படுமென பெரிதாகப் பேசினாலும் நடைமுறையில் அவை சாத்தியப்படாத விடயமாகவே தென்படுகிறது. வந்திறங்கும் விமானங்களிற்கான தரிப்பிடங்களை 10 இலிருந்து 25 ஆக அதிகரிக்கப் போவதாகவும் அதன் நிர்வாகத்தினர் கூறுகின்றார்கள்.

இவைதவிர, 15 பில்லியன் ரூபா செலவில் ஹம்பாந்தோட்டை விளையாட்டுவலயம் மற்றும் சூரியவேவாவில் 700 மில்லியன் ரூபா சீனக்கடனில் மஹிந்த ராஜபக்ச சர்வதேச கிரிக்கட் மைதானம் ஆகியவை நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

47 ஏக்கரில் உருவாக்கப்பட்ட 32,000 இருக்கைகள் கொண்ட இந்த கிரிக்கட் மைதானத்தில் இதுவரை இரண்டு சர்வதேச கிண்ணத்திற்கான போட்டிகள் மட்டுமே நடைபெற்றுள்ளது.

ஹம்பாந்தோட்டை விளையாட்டு வலயத்தின் நிர்மாணப்பணிகள் 2016 இல் முடிவடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு 2018 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கு அரசு உத்தேசித்துள்ளது. அதுவரை வாங்கிய கடனிற்கு வட்டிகட்ட வேண்டும்.

கதிர்காமம் மலைத் தொடர்கள் யால தேசிய பூங்கா, கிரிந்த கடற்கரை மற்றும் வணப்புமிக்க நீர்வீழ்ச்சிகள் நாற்புறமும் சூழ 235 ஏக்கரில் டெ- சினிமா பூங்கா ஒன்று 2 பில்லியன் ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

2010 மார்ச் இல் திறக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ச தேசி டெலி- சினிமா பூங்காவில் இதுவரை எந்தப் படப்பிடிப்புகளும் நிகழ்த்தப்படவில்லை. வெளிநாட்டு திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நாடகங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற வரிகளே இங்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இவைதவிர பாரிய நட்டத்தில் இயங்கும் இன்னுமொரு வெள்ளையானை குறித்து சொல்லியாக வேண்டும். வடக்கிலும் இந்த யானை குட்டிபோடப் போவதாக அண்மைய சீனப் பயணங்கள் உணர்த்துகின்றன. 776 மில்லியன் ரூபா சீனக்கடனில் அமைக்கப்பட்ட, கொட்டவையிலிருந்து காலிவரையான 95 கிலோ மீட்டர் தூர அதிவேக நெடுஞ்சாலை ஆண்டொன்றிற்கு தரும் வருவாய் 1 பில்லியன் ரூபாய். நெடுஞ்சாலையைப் பயன்படுத்தும் வாகன உரிமையாளர்களிடமிருந்தே இது வசூலிக்கப்படுகிறது. இதன், கடன் மற்றும் நிர்வாகச் செலவு ஏறத்தாழ 6.5 பில்லியன் ரூபாய் நிகர நட்டம் 5.5 பில்லியன். வடக்கில் சீனக்கடனில் நிர்மாணிக்கப் படப்போகும் நெடுஞ்சாலைக்கும் இந்தக் கதியே ஏற்படுமென்று நம்பலாம்.

ஆகவே, வருமானமற்ற முதலீடுகள் மக்கள் மேல் வரிச் சுமைகளையும் பன்னாட்டுக் கம்பனிகளுக்கு இலாபத்தையும் மட்டுமே கொடுக்கும் என்பதைப் புரிந்து கொள்வது சிரமமானதல்ல. இந்த வெள்ளையானைகளுக்கு தீனிபோட இயலாவிட்டால் மக்களின் நிலங்களும் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு தாரை வார்க்கப்படும். வட- கிழக்கில் தீவிரப்படுத்தப்படும் நில அபகரிப்பு இதனைப் புரிய வைக்கிறது. இவ்வாறான கையறுநிலை ஏற்படும்போது சிறுபான்மைத் தேசிய இனங்களின் நிலங்களின் மீதுதான் ஆட்சியில் இருக்கும் பெருந்தேசிவாதம் கை வைக்கும்.

-இதயச்சந்திரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கம், இரத்தினம் கொள்ளை

(கொழும்பு)

வீடொன்றுக்குள் நுழைந்த ஐந்து பேரைக் கொண்ட கோஷ்டியொன்று ஒரு கோடி ரூபா பெறுமதியான தங்கம் மற்றும் மாணிக்கக்கற்களை கொள்ளையிட்டதுடன் 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் பறித்துச் சென்றுள்ளதாக லக்கலை பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் மொறவத்தென்ன எனும் இடத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

ஐந்து பேரைக் கொண்ட இனந்தெரியாத கும்பல் வெள்ளை வானில் வந்து வீட்டைப் பரிசோதனை செய்ய வேண்டும் என வீட்டாரை அச்சுறுத்தியுள்ளனர். இதையடுத்து தங்கள் கைவரிசையைக் காட்ட முயன்ற கொள்ளையர் குழு வீட்டிலிருந்த தங்கம், மாணிக்கம் மற்றும் ரொக்கப் பணங்களையும் கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் குறித்த பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இவர்களைக் கைது செய்யும் பொருட்டு பிரதேச பொலிஸார் தீவிர சோதனைகளில் ஈடுபட்டுள்ளனர். (2)

# சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைப்பது அவசியமானது

## ரணில் தெரிவிப்பு

அரசாங்கத்தை கவிழ்ப்பதை விடவும் 17 ஆம் திருத்தச் சட்ட அமுலாக்கம் முக்கியமானது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜயவர்த்தன கேந்திர மையத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

சுயாதீன ஆணைக்குழுக்களை அமைப்பது மிகவும் அவசியமானது. நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலைமைகள் பாரியளவில் சீர்குலைந்துள்ளன.

ஜனநாயகம், நல்லாட்சி என்பனவற்றுக்கு குந்தகம் ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தைக் கவிழ்ப்பதை விடவும் சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைத்தல் மிகவும் அவசியமானது.

பொதுத்துறை, நீதித்துறை, பொலிஸ், இலஞ்ச ஊழல் ஒழிப்பு போன்றவற்றுக்கு சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# 36 தங்க உருண்டைகளை விழுங்கிய நபர் கைது

(கொழும்பு)

முப்பத்தாறு தங்க உருண்டைகளை விழுங்கி இந்தியாவுக்குப் பயணமாகவிருந்த நபர் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

வத்தளைப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு தங்கக்கட்டிகளை விழுங்கி வயிற்றுக்குள் ஒளித்து அதனை தமிழ் நாட்டுக்கு எடுத்துச்செல்ல முயன்றதாக சுங்கப் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் சம்பந்தப்பட்ட நபரை ஸ்கான் பரிசோதனைக்கு உட்படுத்தியபோதே இந்த தங்கக் கட்டிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்க அதிகாரி பராகிரம பஸ் நாயக்க தெரிவித்துள்ளார். (2)

# இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை மத்திய அரசு காப்பாற்ற வேண்டும்

## புதுடில்லி மாநாட்டில் தீர்மானம்

(கொழும்பு)

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை மீறும் இலங்கை அரசை வேடிக்கை பார்க்காது அவ் ஒப்பந்தத்தைக் காப்பாற்ற இந்திய மத்திய அரசு உடனடியாகத் தலையிட வேண்டும் என்று புதுடில்லியில் நடைபெற்ற மாநாட்டில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன் நாச்சியப்பனின் ஏற்பாட்டில் இலங்கை தமிழ் தலைவர்கள் மாநாடு-2013 என்ற பெயரில் புதுடில்லியில் கடந்த இரு தினங்கள் நடைபெற்றது.

இம்மாநாட்டின் முடிவில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு,

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை முழுமையாக இணைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் பின்னரே அங்கு தேர்தல்களை நடத்த வேண்டும்.

காணி, பொலிஸ், கல்வி ஆகிய உரிமைகளில் தமிழர்களுக்கு முழு அதிகாரம் வழங்கப்பட வேண்டும். இந்த அதிகாரங்கள் அனைத்தும் மாகாண அரசுக்கு உள்ளது என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

தமிழர்களின் காணிகளை சிங்களவர்கள் ஆக்கிரமித்துக் கொள்வதும் தமிழர்களின் வாழ்வாதாரங்களைப் பறித்துக் கொள்வதும் தீவிரமடைந்து வருகின்றது. இதை இலங்கை அரசு தடுத்து நிறுத்த வேண்டும்.

தமிழை ஆட்சி மொழி நிலையில் இருந்து நீக்கும் நடவடிக்கைகளையும் மாகாண சபையின் அதிகாரங்களைக் குறைக்கும் நடவடிக்கைகளையும் இலங்கை அரசு கைவிட வேண்டும்.

1987 இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின்படி கொண்டு வரப்பட்ட 13 ஆவது சட்டத் திருத்தத்தை இலங்கை அரசாங்கம் மதிக்காது நடந்து வருகின்றது.

இதை இந்தியா கண்டுகொள்ளாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கக்கூடாது. அந்த உடன்பாடு ஏற்பட இந்தியாவே காரணம். எனவே, இந்தியாவே தலையிட்டு இந்த ஒப்பந்தத்தைக் காப்பாற்ற முன்வர வேண்டும்.

இவ்வாறான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்தத் தீர்மானங்களின் பிரதிகளை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் ஆகியோருக்கு வழங்கவும் மாநாட்டில் முடிபு எடுக்கப்பட்டுள்ளது. (2)

# திருமஞ்சத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் திருமஞ்சத் திருவிழா விஞ்ஞாபனம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் முற்பகல் 7 மணிக்கு மூலமூர்த்தி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகமும் அதனை தொடர்ந்து கைலாசவாகனத்தில் அம்பாள் வீதியுலா வருகையும் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் இரவு விசேட மேள வாத்தியங்களுடன் சித்திரத் திருமஞ்சத்தில் விநாயகர் பெருமான், அம்பாள், வள்ளி, தேவசேனா சமேத முருகப் பெருமான் சகிதம் எழுந்தருளி திருவீதிவலம் வருதலும் நடைபெறவுள்ளது. (2-5)



வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர் உட்பட சிற்றூழியர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு அண்மையில் வவுனியா நகர சபைகலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் ரிசாட் பதியுதீன் பெண்ணொருவருக்கு நியமனம் வழங்குவதை படத்தில் காணலாம்.

# நவநீதம்பிள்ளை வருகைக்குமுன் ஆணை.வின் பரிந்துரைகளை செயற்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வருவதற்கு முன்னர் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் 53 பரிந்துரைகளை செயற்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இணக்கத்தை வெளியிட்டுள்ளார்.

மனிதவுரிமைகள் சம்பந்தமான செயற்பாடுகள், அதற்கு ஏதுவான சட்டதிட்டங்களை அமுல்படுத்தல், இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றல், வடக்கில் காணிகளை இழந்தவர்களுக்கு காணிகளைப் பெற்றுக் கொடுத்தல், சர்வதேச மனிதவுரிமை சட்டங்களுக்கு அமைவான நடவடிக்கைகளை நிறைவேற்றுதல், மாற்றுத்திறனாளிகளுக்கான செயற்பாடுகளை முன்னெடுத்தல் ஆகியன இதில் அடங்குகின்றன.

எனினும் தேசிய கீதத்தை தமிழிலும் சிங்களத்திலும் பாடவேண்டும் என்ற பரிந்துரை மற்றும் உயிரிழந்த புலிகளின் உறுப்பினர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்ற பரிந்துரை ஆகியன குறித்து அரசாங்கம் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்க வில்லை.

மனித உரிமை ஆணையாளர் இம்மாத இறுதியில் இலங்கைக்கு பயணிக்கவுள்ளார். (2)

# பொலிஸ், காணி அதிகாரங்கள் தேவையற்ற பிரச்சினையை உருவாக்கும்

## பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)



தனிப்பட்ட ரீதியில் பரிசீலித்துப் பார்க்கும் போது 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் அடங்கியுள்ள பொலிஸ், காணி அதிகாரங்கள் இக்காலகட்டத்தில் நாட்டுக்கு தேவையற்றதென பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

பிரதமரின் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்ட போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில்,

பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்குவதால் தேவையற்ற பிரச்சினைகள் உருவாகும். இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டில் இவை வீண் மோதல்கள் உருவாகுவதற்கு வழியேற்படுத்தலாம் என பிரதமர் தெரிவித்தார்.

இஸ்ரேலும், ஆப்கானிஸ்தானும் சிவில் யுத்தத்தை எதிர் கொண்டுள்ளன. மேற்குலக அழுத்தங்களால் இலங்கையில் மீண்டும் அரசியல் ஸ்திரமற்ற நிலைமையை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது தெரிகிறது.

நாட்டின் பொருளாதார வேகத்தைச் சீர்குலைப்பதே இக் குழுக்களின் நோக்கமாகும். மனிதர்கள் ஆன்மீக ரீதியில் கட்டி எழுப்பப்பட வேண்டும் என்பதே மதங்களின் அடிப்படை நோக்கமாகும்.

ஊடக சுதந்திரம் ஏற்படுவதை அரசு என்ற வகையில் நாம் ஏற்க வேண்டும். ஆனால், சில ஊடகங்கள் பொறுப்பின்றி செயற்படும் சந்தர்ப்பம் உள்ளன. ஊடகத்திலுள்ள சொற்ப குழுவினரே நாட்டில் பிரச்சினையை உருவாக்கப் பார்க்கின்றனர்.

பொதுவாக குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவே இவர்கள் செயற்படுகின்றனர்.

அநேக ஊடகங்கள் மத ஒழுங்குகளுக்கு இயல்பாகவே நடக்கின்றன. அது பாராட்டப்பட வேண்டும். ஊடக சுதந்திரத்தை புத்திசாதுரியத்துடன் பயன்படுத்தல் அவசியம்.

அரசியல்வாதிகளின் ஊழல் மோசடிகளை வெளிப்படுத்துவது ஊடகங்களின் பொறுப்பாகும். அறிவை மேம்படுத்தி மக்களை ஆட்கொள்ளச் செய்யும் பொறுப்பு ஊடகத்துக்கு உண்டு. இவ்வாறு பிரதமர் தெரிவித்தார். (2)

# ஓடக்கரை வீதி வடிகாலை புனரமைத்து தாருங்கள்

## மக்கள் கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறையின் நகரசபைக் குட்பட்ட ஓடக் கரை வீதியில் அமைந்துள்ள பழைமை வாய்ந்த வடிகாலை புனர்மைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ் வாய்க்காலை காலை வேளையில் சுத்திகரிப்பு செய்கின்ற போதிலும் நண்பகலுக்குப் பின்னர் கழிவு நீர் வழிந்தோட முடியாத நிலையில் தேங்கி காணப்படுவதால் அவ் விடத்தில் இருந்து துர்நாற்றம் வீசுகின்றது. இத்துடன் அப்பகுதியில் குடிமனைகள் நெருக்கமாக இருப்பதனால் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் அப்பகுதி வாழ் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே இவ் வடிகாலின் நிலைமையைக் கவனத்தில் கொண்டு உரியவர்கள் வடிகாலில் தேங்கி நிற்கும் நீர் வடிந்தோடக்கூடிய வகையில் மீளப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா இரட்டை வேடம்

## அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு

**இலங்கையின் இனப் பிரச் சினை தொடர்பாக தமிழ் மக் களிடமும் அரசாங்கத்திடமும் இந்தியா இரட்டைவேடத்தில் நடித்துக் கொண்டிருக்கிறது. இதுவே அவர்களின் வரலாற்று ரீதியான கொள்கையாகவும் காணப்பட்டு வருவதாக மட் டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாரா ளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவி த்துள்ளார்.**

மட்டக்களப்பு நகரில் அண்மையில் நடை பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்திய அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தையினால் வந்த வீட்டுத்திட்டம் பின்பு அரசியல்மயமாக்கப்பட்டது. இந்திய அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட வீட்டுத் திட்டத்தை நேரடியாக அமுல்படுத்த விடாமல் இலங்கை அரசாங்கம் அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இந்த வீட்டுத்திட்டமானது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நியமிக்கும் குழுவின் மேற்படி அமுல்படுத்துவோம் என இந்திய அரசாங்கம் சம்பந்தன் எம்.பி.யிடம் வாக்குறுதியளித்தது. வன்னியிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்காக கொண்டுவரப்பட்ட இந்தியன் வீட்டுத்திட்டம் பாதிக்கப்பட்ட மக்களையே சென்றடைய வேண்டும்.

இடம்பெயர்ந்த தமிழ்மக்களுக்கு என கொண்டுவந்த வீட்டுத் திட்டத்தை வேறொரு இடம்பெயராத மக்களுக்கு வழங்குவதை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஒருபோதும் அனுமதிக்காது.

சிங்களமக்கள் இங்குள்ள பௌத்த விகாரையைத் தரிசிப்பதற்காக மட்டக்களப்புக்கு வருகை தருவதில்லை. அவர்கள் இங்குள்ள சுற்றுலாத் தலங்களைப் பார்வையிடுவதற்காகவே வருகை தருகிறார்கள். அவர்கள் வழிபடுவதற்கு அவர்களின் சொந்த இடங்களில் விகாரைகள் உள்ளன. அவ்வாறாயின் தமிழர்கள், கிறிஸ்தவர்கள் சுற்றுலா செல்லுமிடங்களில் பிள்ளையார் சிலை அல்லது கிறிஸ்தவ வழிபாட்டு சிலைகளையும் வைக்க வேண்டும் என்றார். (2)

# 19 ஆவது திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

19ஆம் திருத்தச் சட்டமூலம் இவ் வாரத்துக்குள் அவசர சட்டமூலமாக பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படுமென அரச கட்சி பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

19 ஆவது திருத்தச் சட்ட மூலம் அரசியலமைப்புக்கு ஏற்றதானதா என்பது குறித்து உயர் நீதிமன்றத்தின் கருத்தை பெறுவதற்காக உயர் நீதிமன்றத்தில் அது இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

19 ஆவது திருத்தச் சட்டமூலம் ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்களை இணைப்பதற்கு 13 ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள சரத்தை நீக்குவதற்காக கொண்டுவரப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சட்ட மூலம் நாளை செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

இச்சட்டமூலத்தை நாடாளு மன்றுக்கு சமர்ப்பிப்பதை பிற்போடுவதற்கு அரசு தீர்மானிக்கவில்லை என்றும் உயர் நீதிமன்றத்தின் கருத்தை பெறுவதற்கு கால அவகாசம் தேவை என்பதால் அன்றைய் தினம் சமர்ப்பிக்க முடியாதிருப்பதாகவும் அவர் கூறினார். மேலும் உயர் நீதிமன்றத்தின் கருத்தை நாளைய தினம் பாராளுமன்றுக்கு அறிவிக்கப்பட்டால் நாளை மறுதினம் புதன்கிழமை சட்டமூலம் பாராளுமன் றத்தில் சமர்ப்பிக்கப்படுமென வும் அவர் தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாணசபை முறையை நாம் ஆரம்பத்திலி ருந்து எதிர்த்து வந்துள்ளோம். இந்த நிலையில் உத்தேச பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றுவதில் அர்த்தமில்லை என்பதே எமது நிலைப்பாடாகும்.

இருந்தும் ஏனைய மாகாண சபைகளுக்கும் தேர்தல் நடத்தி விட்டு வடமாகாணசபைத் தேர்தலை மாத்திரம் நடத்தாது இழுத்தடிப் பதானது அங்கு வாழும் மக்களின் அபிலாசைகளை மதிக்காதமையேயாகும் என்று அவர் தெரிவித்தார். (2)

# போலி மென்பொருள் விற்பனை கணனி நிலையம் முற்றுகை

(கொழும்பு)

கொழும்பு பம்பலப்பிட்டியவில் பிரசித்தமான கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள கணனி விற்பனை செய்யும் நிலைய மொன்றை முற்றுகையிட்ட கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினர் அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த போலி மென்பொருட்கள் அடங்கிய கணனிகள் பலவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

போலி மென்பொருள் அடங்கிய கணனி களை விற்பனை செய்பவர்களை கைது செய்வதற்கு பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்றிட்டத்துக்கு அமையவே இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கைப்பற்றப்பட்டகணனிகள் அனைத்தும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

போலி மென்பொருட்கள் அடங்கிய கணனிகளை விற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும். இது தொடர்பில் கடந்த காலங்களில் வர்த்தகர்களைத் தாங்கள் அறிவுறுத்தியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய தவறிழைப்பவர்களுக்கு எதிராக தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் ஐந்து இலட்சத்துக்கு மேற்படாத அபராதம் அல்லது ஆறு மாதத்துக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது இவ்விரண்டும் வழங்கப் படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (2)

# இணையத் தளங்கள் தொடர்பில் புதிய சட்டம்

இலங்கையிலிருந்து இயங்கி வரும் இணையத்தளங்கள் தொடர்பில் புதிய சட்டங்கள் அறிமுகம் செய்யப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் அச்சு ஊடகங்களுக்காக ஒழுக்க விதிகள் அறிமுகம் செய்யவுள்ளதாக அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

தற்போது இலங்கையிலிருந்து இயங்கி வரும் ஊடகங்களுக்காக புதிய சட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக ஊடக அமைச்சின் செயலாளர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 67 இணையத் தளங்கள் மட்டுமே பதிவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இந்த இணையத்தளங்களுக்கு எதிராகவோ அல்லது பதிவு செய்யப்படாத இணையத்தளங்களுக்கு எதிராகவோ சட்ட நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.

எனவே இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் புதிய சட்டமொன்று உருவாக்கப்படவுள்ளது.

சட்டத்தை உருவாக்கும் நோக்கில் பிரதிநிதிகள் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ (2)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்




## இன்று ஒன்பதாம் திருவிழா

### அன்னையாய் அரவணைப்பாய்

பிள்ளை படும் துயரத்தை கண்ணுற்று நிவர்த்தி செய்திடும்
அன்னையவள் போலவே உன் அடியவர்கள் துயர்துடைக்க
எழுந்தோடிவரும் அன்னையவள் வருக வருக
எத்தனை உள்ளங்கள் தானம்மா– இவ்வுலகில்
தாயே உந்தன் புகழ்பாட
பார் முழுவதிலும் வேற்றின மக்களெல்லாம்
உன் புகழ் அறிந்து உன்னையே தஞ்சமென்று
புகுந்தபோது அருள் பாலிக்கும் தாயவளே நாகம்மா
இவ்வையகம் செழிப்புறவும் உன் அடியவர்கள் துயர்
களையவும் விழாக் காணும் நாயகியே வருக வருக

திருமதி. ம.பிறேமலதர்,
இந்து சமயம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

### அருள் புரிவாய் அன்னையே!

நயினையில் வீற்றிருக்கும் நாகபூஷணி அன்னையே
நல்ல வரம் புரிந்திடுவாய் புதுமை மிகு அன்னையே
நாகத்தின் மீதிருக்கும் நாகதேவி அன்னையே
நன்மைகள் செய்திடுவாய் நம் வாழ்வில் அன்னையே
புதுமைகள் புரிந்திடும் அகிலாண்ட அன்னையே
உன் பாதம் அடி பணிந்தேன் அருள் புரிவாய் அன்னையே

செ. வர்மினி,
மந்துவில்.

### வரம் தருவாய் அம்மா

அலைகடலின் ஓரத்திலே
அமர்ந்திருக்கும் நாகம்மா
சீரற்ற சமூகத்தை சீர்படுத்த
சீக்கிரமே வந்திடம்மா
நல்லவர்களை காத்திட்ட
நாயகியே
உன் பாதம் சரணடைந்தோம்

க.செல்வமலர்,
சிறுவர் இல்லம், திருநெல்வேலி.

### தீராத துயர் தீர்ப்பாய் நாகம்மாளே!

தாயாய் நீயிருக்க நாகம்மாளே
தவிக்கின்றோம் கண்பாராய் தாயே அம்மா
ஓயாத அலையோசை நாகம்மாளே!
உன் பேரைச் சொல்லி நிற்கும் தாயே அம்மா
தீராத துயர் சுமந்தோம் நாகம்மாளே
தேடியுன்னைச் சரணடைந்தோம் தாயே அம்மா
ஓராயிரம் நேர்த்தியம்மா நாகம்மாளே
உன்னடியில் தந்து நின்றோம் தாயே அம்மா
பாராயோ விழி திறந்து நாகம்மாளே
பரந்த கடல் தாண்டி வந்தோம் தாயே அம்மா!

செ. பவானி,
வண்ணார்பண்ணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித் தெலுங்கானா மாநிலம் கோரி மீண்டும் முளைவிடும் போராட்டங்கள்

(சித்தூர்)

**தனித்தெலுங்கானா கோரி நேற்றுமுன்தினம் தெலுங்கானா மாவட்டங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தப் பட்டது. இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட எம்எல்ஏக்கள் உட்பட 100க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்ப ட்டனர். ஆந்திராவில் சிறிது காலம் ஓய்ந்திருந்த தெலுங்கானா தனி மாநில போராட்டம் மீண்டும் தீவிர மடைய தொடங்கியுள்ளது. உஸ்மானியா பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த 13ஆம் திகதி சட்டமன்றத்தை நோக்கி பேரணி நடத்த முயன்றனர்.**

அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். அதன்போது வன்முறை வெடித்தது. பொலிஸார் தடியடி நடத்தியும், றப்பர் குண்டுகளால் துப்பாக்கி சூடும் நடத்தினர். மேலும் கண்ணீர் புகை குண்டுகளையும் வீசினர். இதில் ஏராளமான மாணவர்கள் காயமடைந்தனர்.

இதைத் தொடர்ந்து ஐதராபாத் நகரம் முழுவதும் பொலஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. சுமார் 10 ஆயிரம் பொலிஸார், 2 ஆயிரம் ரிசர்வ் பொலிஸார் முக்கிய இடங்களில் குவிக்கப்பட்டனர்.

சட்டசபை நோக்கி செல்லும் வீதிகள் மற்றும் மேம்பாலங்களுக்கு சீல் வைக்கப்பட்டது. தடையை மீறி செல்ல முயன்றவர்கள் கைது செய்யப்பட்டனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 8 ஆயிரம பேரும்,



தடையை மீறி செல்ல முயன்ற ஆயிரத்து400 பேரும் கைது செய்யப்பட்டனர்.

பல இடங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மறியல் மற்றும் தர்ணா போராட்டங்களில் ஈடுபட்டனர். ஏராளமான ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் கைது செய்த னர். நக்சலைட்டுகள் இந்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருந்ததால் ஐதரா பாத் நகர் முழுவதும் கூடுதல் சோதனைச் சாவடிகள் அமைத்து தீவிர வாகன சோதனை நடத்தப்பட்டது.

பல இடங்களில் பொலிஸ் பாதுகாப்புடன் இயக்கப்பட்ட பேருந்துகள் மீது ஆர்ப்பாடடக்காரர்கள் கல்வீசி தாக்குதல் நடத்தினர். இதில் 20க்கும் மேற்பட்ட பேருந்துகளின் கண்ணாடிகள் சேதமடைந்தன.

அரசு பேருந்துகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் வழிமறித்து பயணிகளை இறக்கிவிட்டு, தீ வைத்து கொளுத்தினர். இதனால் அங்கு பெரும பரபரப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் தனி தெலுங்கானா கோரிக்கையை வலியுறுத்தி பொறியியல் கல்லூ மாணவர் பண்டாரு ஸ்ரீநி வாசா தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

ஐதராபாத்தில் உள்ள உஸ்மானியா பல்கலைக்கழக வளாகத்தில் அவர் தற்கொலை செய்து கொண்டார். அவர் தெலுங்கானா பகுதியைச் சேர்ந்த மெகபூப்நகர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். மாணவரின் தற்கொலையால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

தெலுங்கானா தவிர எதையும் ஏற்கமாட்டோம் - சந்திரசேகர ராவ்: தெலுங்கானா தனி மாநிலத் தைத் தவிர வேறு எதையும் ஏற்கமாட டோம் என்று தெலுங்கானா ராஷ்டிர சமிதி தலைவர் சந்திர சேகர ராவ் கூறியுள்ளார். (அ-2)



மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கு போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்த பின், தேர்தல் அலுவலர் ஏ.எம்.பி. ஜமாலுதீனிடம் உறுதிமொழி எடுத்துக் கொள்ளும் கனிமொழியைப் படத்தில் காணலாம்.

## குமரியில் பரவும் டெங்கு காய்ச்சல்

(நாகர்கோவில்)

குமரி மாவட்டத்தில் தற்போது தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. மழையுடன் குளிர்ந்த காற்றும் வீசி வருவதால் வைரஸ் காய்ச்சல் பாதிப்பு அதிகரித்துள்ளது.

இது குறித்து தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்கள் குறித்த விபரங்களும் சேகரிக்கபபடுகின்றன. இதுவரை நடந்த கணக் கெடுப்பில் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் 600 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். மாவட்டத்தில் இதுவரை 30 பேருக்கு டெங்கு பாதிப்பு இருப்பதும் உறுதி செய்யப்பட்டு இருப்பதாக சுகாதாரத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-2)

## நான் அடைக்கலம் கோரினேன்-அசாஞ்சே நீ அடைக்கலம் கோரவில்லை- இந்தியா

விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே தமக்கு அகதியாக அடைக்கலம் கொடுக்க வேண்டும் என்று இந்திய அரசிடம் கோரியதாகவும் ஆனால் தமது கோரிக்கை நிராகரிக்கப்பட்டு விட்டதாகவும் கூறியுள்ளார்.

கடந்த ஆண்டு மே 24ஆம் திகதியன்று லண்டனில் உள்ள இந்திய தூதரக அலுவலகத்தில் தாம் அகதியாக அடைக்கலம் கோரி கடிதம் கொடுத்ததாக அசாஞ்சே கூறியுள்ளார்.

அத்துடன் இந்திய தூதரக அதிகாரி தமது கடிதத்தைப் பெற்றுக் கொண்டதற்கான சான்றையும் அவர் வெளியிட்டிருக்கிறார். மேலும தமது கடிதம் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் இதை நிராகரித்திருக்கும் மத்திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் சையத் அக்பருதீன், அசாஞ்சே அகதியாக அடைக்கலம் கோரி பிரதமருக்கு என எந்த ஒரு கடிதமும் அனுப்பப்படவில்லை. அப்படியான எந்த ஒரு ஆவணமும் இல்லை என்றார். இது தொடர்பில் அதிருப்தி அடைந்திருக்கும் அசாஞ்சே, மனிதஉரிமைகள் பற்றி பேசுகிற இந்தியாவின் நிலைப்பாடு சரி அல்ல என்றுள்ளார். (அ-2)



## "சாத்தான் வேதம் ஓதுகிறது"

## கருணாநிதியை சாடுகிறார்-ஜெயா

(சென்னை)

தி.மு.க. தலைவர் கருணாநிதி செய்த, துரோகங்களால்தான், காவிரி நதிநீர் பிரச்சினை, இப்போதும் நீடித்து வருகிறது. என, முதல்வர ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கையில்,

காவிரி நடுவர் மன்றம், தனது இறுதி ஆணையை, வெளியிட்ட பின்னர், நான்கு ஆண்டுகள், மத்தியிலும், மாநிலத்திலும், ஆட்சி அதிகாரத்தில் இருந்தபோது, இறுதி ஆணையை, மத்திய அரசி தழில் வெளியிட, ஒரு துரும்பைக் கூட கிள்ளி போடாமல், ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவர், கருணாநிதி.

அவர், "இந்த ஆண்டு குறுவை சாகுபடி உண்டா?" என்ற தலைப்பில், 12ஆம் திகதி ஒரு குதர்க்கமான அறிக்கையை வெளியிட்டிருப்பது, சாத்தான் வேதம் ஓதுவதுபோல் உள்ளது.



*வக்காளத்து*

"இலங்கை இராணுவ வீரர்களுக்கு, வெலிங்டன் இராணுவ பயிற்சி மையத்தில், பயிற்சி அளிக்கக் கூடாது'' என, பிரதமருக்கு நான் எழுதிய கடிதத்திற்கு, பதில் அளிக்கும் வகையில், மத்திய அரசுக்கு வலிய சென்று, வக்காளத்து வாங்கும் வகையில், கருணாநிதி அறிக்கை வெளியிட்டிருந்தார். மத்திய அரசிலிருந்து, தி.மு.க. விலகிய நிலையில், மத்திய அரசை, கருணாநிதி ஏன் எதிர்க்கவில்லை என்றால், தன் மகள் கனிமொழியை, ராஜ்யசபா எம்.பியாக தேர்வு செய்ய, காங்கிரஸ் கட்சியின், ஐந்து எம். எல். ஏ.க்கள் ஆதரவு தேவை என்பதால்தான்." எதற் கெடுததாலும், உயர் நீதிமன்றத்தில் முறையிடு வதாலும், மத்திய அரசின் மீது பழி போட்டு, தப்பிக்க முயற்சிப்பதாலும், பல வகையில் பாதிக்கப்படு வது, தமிழக விவசாயிகள் என, கருணாநிதி அறி க்கை விட்டிருப்பது, உண்மைக்கு புறம்பானது.

உயர் நீதிமன்றில் முறை யிட்டதால் தான், காவிரியில் நமக்குள்ள உரிமை நிலை நாட்டப்பட்டுள்ளது என்பதை கருணாநிதிக்கு சுட்டிக் காட்டியிருக்கிறேன் என அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)




## கறுப்புப் பணத்தை மீட்க மத்தியரசு பிரயத்தனம்

(புதுடில்லி)

வெளிநாடுகளில் இந்தியர்களின கறுப்பு பணத்தை மீட்க ஆறு நாடுகளின் உதவியை மத்திய அரசு நாடியுள்ளது. அமெரிக்காவை தலைமையிடமாக கொண்ட ஐ.சி. ஐ.ஜெ.என்ற அமைப்பு உலகளவில் வெளிநாடுகளில் கறுப்பு பணத்தை பதுக்கி வைத்துள்ளவர்களின் பெயரகளைப் பட்டியலிட்டு வெளியிட்டுள்ளது.

இதில் 500இற்கும் மேற்பட்ட இந்தியர்களின் பெயரகளும் உள்ளன. வெளிநாடுகளில் கறுப்பு புணம் பதுக்கிய இந்தியர்களிடமிருந்து அவற்றை மீட்பது தொடர்பாக ஒரு சில நாடுகளுடன் இந்தியா வரி விதிப்பு தொடர்பான ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.

அதன் அடிப்படையில் ஐ.சி. ஐ.ஜெ, அமைப்பு வெளியிட்டுள்ள பெயர்களை வைத்து, வரி ஏய்ப்பு மூலம் வெளிநாடுகளில் முதலீடு செய்துள்ளதாக, இந்திய தொழிலதிபர்கள், நிறுவனங்கள் என 505 இந்தியர்களிடமிருந்து கறுப்பு பணத்தை மீட்க, சிங்கப்பூர், பிரிட்டன் வெர்ஜின் தீவுகள் உள்ளிட்ட ஆறு நாடுகளின் வரி விதிப்பு ஏஜென்சிகளின் உதவியை இந்தி யாவின் மத்திய நிதித்துறை அமைச்சகம் நாடியுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கிளாய் ஆற்றில் புல்மோட்டை மீனவர்களின் அத்துமீறல் தொடர்கின்றது

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கொக்கிளாய் ஆற்றில் புல்மோட்டை மீனவர்கள் மீன்பிடி தொழிலை மேற்கொள்வதாக கொக்கிளாய் கிராமமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

**நந்திக்கடலை விட 4 மடங்கு பெரிதான மேற்குறித்த ஆற்றிலேயே கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத் தொடுவாய் தெற்கு, கொக்குத் தொடுவாய் வடக்கு, கொக்குத் தொடுவாய் மத்தி ஆகிய கிராமங்களை சேர்ந்த 650இற்கு மேற்பட்ட மீனவ குடும்பங்கள் மீன்பிடியை மேற்கொண்டு வருகின்றனர்.**

இந்நிலையில் இவ் ஆற்றில் புல்மோட்டை மீனவர்கள் தடைசெய்யப்பட்ட இயந்திரப் படகைப் பயன்படுத்தி மீன்பிடிக்கின்றனர்.

இதனால் மேற்குறித்த கிராம மக்கள் பெரும் கஷ்ட நிலைக்கு உள்ளாக வேண்டியுள்ளது.

போரினால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குரிய இத் தொழிலை மேற்கொள்வதற்கும் முடியாத நிலை தோன்றியுள்ளது.

நந்திக்கடலில் தடைசெய்யப்பட்ட தொழிலை தமிழர்கள் செய்தால் சட்டத்தின் முன் நிறுத்தப்படுகின்றார்கள் ஆனால், மேற்குறித்த ஆற்றில்தடைசெய்யப்பட்டதொழிலை புல்மோட்டை மீனவர்கள் மேற்கொள்ளும் போது கண்டு கொள்ளாமல் இருப்பது ஏன் என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் குறித்த பகுதியில் சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபடும் இவர்களது படகு இயந்திரங்களின் எண்ணெய் கழிவுகள் ஆற்று நீருடன் சேருவதாலும் இவர்களால் கரையோர கண்டல் தாவரங்கள் அழிக்கப்படுவதாலும் மீன், இறால் போன்றவற்றின் இன விருத்தி பாதிப்படைவதாகவும் பிரதேச மக்கள் கவலை கொள்கின்றனர்.

இதனால் இவ் ஆற்றுப் பகுதியில் உள்ள மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்படுகின் றது.

எனவே, துறைசார்ந்த அதிகாரிகள் இந்நடவடிக்கையை கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மீனவர்கள் கோரிக்கைஒன்றைமுன்வைத்துள் ளனர். (அ-3-267)



## தொண்டராசிரியர்களுக்கு இன்று கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளின் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பான விசேட கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ச.கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் நாளை செவ்வாய்க்கிழமை கல்வி அமைச்சினால் நடத்தப்படும் நேர்முக தேர்விற்கான முன்னோடி ஆயத்தங்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-267)

## தென்னிலங்கையை பூர்வீகமாகக் கொண்ட தமிழர்களையும் அங்கு குடியமர்த்துக

(முல்லைத்தீவு)

அரசாங்கம் தற்போது வட பகுதியில் மீள்குடியேற்றம் என்ற பெயரில் முன்னர் இடம்பெயர்ந்த தமிழ் பேசும் முஸ்லிம் மக்களையும் வடபகுதியில் முன்னர் வாழ்ந்ததாகக் கூறப்படும் சிங்கள மக்களையும் குடியேற்றி வருகின்றது.

ஆனால் பூர்வீகமாக தென்னிலங்கையில் வாழ்ந்த 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த தமிழ் மக்களை ஏன் அங்கு மீள் குடியேற்றவில்லை என கேள்வி எழுப்பப்படுகின்றது.

இத் தமிழ் மக்கள் 1956 ஆம் ஆண்டு, 1983 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதி வரை தென்னிலங்கையில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் அங்கு ஏற்பட்ட கலவரங்களை அடுத்து தமது உயிர்களைக் காப்பாற்றும் பொருட்டு வடக்கு கிழக்கில் பரவலாக வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களின் பூர்வீக காணிகள் தென்னிலங்கையிலேயே உள்ளன.

எனவே, வடபகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதைப்போன்று 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் குடும்பங்களை யும் தென்னிலங்கையில் மீளக் குடியேற்ற வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-267)

# இளைஞர் சக்தியின் மூலமே அபிவிருத்தியை துரிதப்படுத்தலாம்

### *சீனாவின் பிரதித் தூதுவர்*

(கிளிநொச்சி)

இளைஞர்களின் ச்க்தியின் மூலம்தான் அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்த முடியும் என சீனாவின் பிரதித் தூதுவர் றொன்பான் சூக் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஏ-9 நெடுஞ்சாலையின் உத்தியோக பூர்வ திறப்பு விழாவில் கலந்து கொண்டு சீன அமைச்சின் செய்தியை தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சீன நிறுவனம் வீதிப் புனரமைப்பு பொறுப்பை ஏற்றிருந்தாலும் அதனை வெற்றிகரமாக செய்து முடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய இலங்கை அரசாங்கத்திற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ் ஏ-9 வீதிப் புனரமைப்பில் உதவியவர்கள் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் ஆகிய இனத்தவர்களாக இருந்த போதிலும் அவர்கள் எல்லோரும் ஒற்றுமையுடன் பணியாற்றினர்.

அந்த இளைஞர்களின் உத்வேகத்தினாலேயே ஒப்பந்த காலத்திற்கு முன்னதாகவே இவ்வீதி புனரமைப்பு பணியை நிறைவு செய்ய முடிந்துள்ளது.

நாட்டின் அபிவிருத்தியில் முன்னேற்றத்தைக் காண இந்த இளைஞர்களால் முடியும். இங்கு யுவதிகளும் மிகவும் ஆர்வமாக வேலை செய்கின்றனர்.

இத்தகைய ஒத்துழைப்பு தன்மையுடன் அனைவரும் ஒன்றுபடும் போது இலங்கை அபிவிருத்தியடைந்து வரும். அதில் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது.

இலங்கைக்கும் சீனாவுக்குமான நட்புறவு ஆழமானது. அது என்றும் நீடித்துச் செல்லும் என்றார்.

மேலும் சீன அரசாங்கத்தின் சார்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கௌரவ வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார். (அ-5-8-4)

## வன்னியில் பயன் தருமரங்கள் அழிக்கப்படுகின்றன-மக்கள் விசனம்

வன்னி மாவட்டத்தின் அபிவி ருத்தி நடவடிக்கைகளால் பயன்தரும் பெருந் தொகையான மரங்கள் துரித கதியில் அழிக்கப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில் வீதி அகலிப்பு பணிகளுக்காக வீதியோரங்களிலுள்ள மரங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் அழிக்கப்படுவதோடு மின்னிணைப்புக்களுக்காகவும் அவை அழிக்கப்படுகின்றன.

இவ்வாறாக அழிக்கப்படும் மரங்களில் மலைவேம்பு, தேக்கு, முதிரை, ஆலமரம், தென்னை, பனை போன்ற பயன்தரும் மரங்களும் அடங்குகின்றன.

எனவே, வெட்டப்படு கின்ற மரங்களுக்குப் பதிலாக வேறு மரங்களை நாட்டி சூழலைப் பாதுகாக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-267)

# புத்திசாதுரியத்தால் தடுக்கப்பட்டது மோசடி

யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் ஆசிரியை ஒருவர் மோசடி பேர் வழியிடம் இருந்து தப்பித்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

குறித்த ஆசிரியைக்கு கடந்த புதன்கிழமை தொலைபேசி அழைப்பு ஒன்று வந்துள்ளது. அழைப்பை எடுத்த நபர் தான் முன்னணி தொலைபேசி நிறுவனத்திலிருந்து பேசுவதாக கூறி ஆசிரியையின் பெயரையும் கணவரின் பெயரையும் கூறி அவற்றை சரி பார்க்குமாறு கேட்டுள்ளார்.

ஆசிரியை தனதும் கணவரதும் பெயர்களை தொலைபேசி நபரிடம் உறுதி செய்ததும் தொலைபேசியில் பேசியவர் "நீங்கள் பயன்படுத்திய தொலைபேசி பாவனைகளால் உங்களுக்கு 10 இலட்சம் ரூபா பரிசு கிடைத்துள்ளது. இதனை பெறுவதற்கு நீங்கள் 72 ஆயிரம் ரூபா பெறுமதியான முத்திரைக்கட்டணம் செலுத்த வேண்டும்'' எனக் கூறியுள்ளார்.

பின்னர் குறித்த ஒருவங்கிக் கணக்கு இலக்கத்தைக் கொடுத்து அதில் பணத்தை வரவு வைக்குமாறும் கூறியுள்ளார்.

ஆசிரியை பணத்தை செலுத்த உடன் சம்மதம் தெரிவித்து கணவருக்கு விடயத்தைக் கூறியுள்ளார்.

கணவர் தொலைபேசி நிறுவனத்தின் தலைமைக்காரியாலயத்துடன்தொடர்புகொண்டு அதுபற்றி விசாரித்த போது அவர்கள் பெயரில் பரிசுத் தொகை கிடைக்கவில்லை எனவும் அது விடயமாகதாம் அழைப்பை மேற்கொள்ளவில்லை எனவும் கூறியதுடன் தமது வாடிக்கையாளர்களுக்கு பரிசுத் தொகை கிடைக்கும் பட்சத்தில் தாம் குறுந்தகவலில் அறிவிப்போம் என்று கூறியுள்ளனர்.

இதன் பின் தொலைபேசி நபரைத் தொடர்பு கொண்ட போது தொலைபேசி துண்டிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் தற்பொழுது பல்வேறு விளம்பர நிறுவனங்கள் மற்றும் வெளி நாட்டவர்களின் உறவினர்களின் பெயர்களைக் கூறி மோசடியில் ஈடுபடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளமையால் பொதுமக்கள் விழிப்புடன் இருந்து இத்தகைய மோசடி விடயங்கள் சம்பந்தமாக பொலிஸ் நிலையத்தில் தகவலை வழங்குமாறும் பொலிஸ் நிலையம் அருகில் இல்ல தவர்கள் அவசர பொலிஸ் தொலைபேசி இலக்கமான 119 இற்கு தகவலை வழங்க முடியுமெனவும் பொலிஸார் ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார். (அ-15)

## கரைதுறைப்பற்று பிரதேச சபை கழிவகற்றுவதில் பாரபட்சம்

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேச சபைக் குட்பட்ட கிராமங்களில் கழிவகற்றல் சீராக இடம்பெறுவதில்லை என பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கரைதுறைப்பற்று பிர தேச சபையின் உப அலுவலகங்களான முள்ளி வாய்க்கால், முள்ளியவளை, செம்மலை, முல்லைத்தீவு ஆகி பிரதேசங்களின் நகரப் பகுதியில் மட்டுமே கழிவகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. ஏனைய பகுதிகளில் நடைபெறுவதில்லை. அத்துடன் வீட்டுக் கழிவுகளை எடுப்பதற்கு உழவு இயந்திரங்கள் எந்த நேரத்தில் வரும் எனத் தெரியாமையால் மக்கள் குப்பைகளை அகற்ற இடமின்றி அங்கலாய்க்கின்றனர்.

இப்பிரதேசங்களில் குப்பைத் தொட்டிகளை வீதி அபிவிருத்தியின் பின்னர் வைப்பதாகக் கூறியிருந்த போதும் அவையும் இன்னமும் வைக்கப்படவில்லை.

எனவே கரைதுறைப் பற்று பிரதேசசபை உடனடியாக இவற்றுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-267)

## தனித்தனியாக விடுதி அமைக்குக

கொக்கிளாய் அ.த.க. பாடசாலையில் கல்வி கற்பிக்கின்ற வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கு தனித்தனியான தங்குமிட விடுதிகளை அமைத்துத் தருமாறு கல்விப் பணிப்பாளரிடம் பல தடவைகள் கோரிக்கைவிடுத்திருந்தும்பயனில்லை என ஆசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பாடசாலை மீள் குடியேற்றத்தின் பின்னர் 2011 ஆம் ஆண்டிலிருந்து 86 மாணவர்களுடன் இயங்கி வருகின்றது. இங்கு வெளிமாவட்டத்திலிருந்து 4 பெண் ஆசிரியர்களும் 3 ஆண் ஆசிரியர்களும் கற்பிக்கின்றனர். இவர்களுக்கு ஒரு தங்குமிட விடுதியை இரண்டாக பிரித்துதனித்தனியாக வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆசிரியர்கள் தாம் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதால் தனியான தங்குமிடத்தை அமைத்து தருமாறு முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளரிடம் பலதடவைகள் கோரிக்கை முன்வைத்தனர். ஆயினும் இன்று வரை எவ்வித பயனுமில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இதற்கு உடனடியாக மாற்று நடவடிக்கை எடுத்து தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையான மனச்சாட்சி இடி முழக்கத்திலும் அச்சமின்றித் துயிலும். - முல்லர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இருக்கும் பதவியை விட நீதிக்காய் துறக்கும் பதவி மேல்

பாண்டவர்களை பழிவாங்குவதில் துரியோதனன் கொண்டிருந்த அசுரத்தனத்தை சுட்டிக் காட்டுவதில் பிதாமகராகிய வீஷ்மரோ, துரோணரோ முன்னெழவில்லை.

திரௌபதியை சபைக்கு அழைக்கும்போது துரியோதனா! நின் செயல் கொடுமையிலும் கொடுமை. நீ அழிவைத் தேடுகிறாய் என்று சபையில் எழுந்து வீஷ்மர் கோஷமிட்டிருந்தால், துரோணர் கத்தியிருந்தால், துரியோதனன் சிறிதளவேனும் சிந்தித்திருப்பான்.

ஆனால், திரௌபதியின் துகிலை மாடு நிகர்த்த துச்சாதனன் பற்றியிழுக்கும் போதும் பிதாமகர் பேசாதிருந்தமை பெரும் குற்றமே.

மன்னன் செய்வது மகா கொடுமைத்தனம் என்றுணர்ந்தும் பேசாதிருக்கின்ற பெருந்தவறை வீஷ்மர் மட்டுமன்றி பலரும் இழைத்துள்ளனர்.

அத்தகைய கோழைத்தனம் எங்கள் இலங்கைப் பாராளுமன்றத்திலும் இடம்பெறவே செய்கிறது.

பிழையைப் பிழையென்று சொல்கின்ற தற்துணிவு இல்லாதவர்கள் எம்.பிக்களாக - மக்களின் பிரதிநிதிகளாக இருந்தால் மக்கள் பாவம் என்றே சொல்லமுடியும்.

குற்றத்தைக் குற்றம் என்று கூறி பதவியை இழப்பதானது இழந்த பதவியைவிட உயர்வான தென்பதை மக்கள் பிரதிநிதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

சபையில் நாசகாரத் தீர்மானம் நடக்கின்றது. அதை எடுத்துரைத்தும் நீதி கிடைக்கவில்லை என்றால் அந்த எம்.பிப் பதவி எதற்கு? அதைத் தூக்கியெறிந்துவிட்டு இதோ! நாங்கள் வெளியேறுகின்றோம் என்று சொல்லும் திராணி இருக்க வேண்டும் அல்லவா?

துரியோதனனின் சபையில் இதைத்தான் விதுரன் செய்தான்.

துரியோதனனின் சூழ்ச்சியையும் கபடத்தனத்தையும் வெளிப்படையாகக் கண்டித்தவன் விதுரன்.

வில்லுக்கு விதுரன் என்பதே நிஜமாகியிருந்தது. ஆனால் அந்த விதுரன் கௌரவர் சபையில் எழுந்துநின்று துரியோதனா! நீ அழியப் போகிறாய்.

இது என் வில் மேல் ஆணை என்று கூறி தனது வில்லை முறித்துவிட்டு சபையில் இருந்து வெளியேறுகின்றான்.

வில்லுக்கு விதுரன் என்ற மகாபெருமையை அவன் இழந்து போனாலும் உரிய இடத்தில் உரிய நேரத்தில் தனது வில்லை உடைத்து தனது உச்சமான எதிர்ப்பை வெளிப்படுத்தினானே! அதனால்தான் இன்றுவரை விதுரன் என்ற பாத்திரம் உயிர்ப்போடு இருக்கிறது.

என்ன செய்வது? எங்களிடம் விதுரர்களுக்குப் பெரும் பஞ்சம். என் பதவியைத் துறந்தேனும் 13-வது திருத்தச் சட்டமூலத்தை காப்பாற்றுவேன் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறும் போது, அடுத்த குரலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எழுந்து, நாங்கள் அனைவரும் எங்கள் எம்.பிப் பதவியைத் தூக்கி எறிவோம் என்று கூறவேண்டும் அல்லவா?

ஆனால், அவர்கள் அப்படியேதும் சொல்லாமல் ராஜித சேனாரத்னவுக்காக கரகோஷம் செய்கிறார்கள்.

அட, நாசமறுப்பு. சும்மாதனிலும் பதவி விலகுவோம் என்று கூறினால் குறைந்தா போய் விடுவீர்கள். எல்லாம் பதவி ஆசை. அவ்வளவுதான்.

### ஆலயங்களின் மீதான தாக்குதலைக் கண்டித்து

# இந்து அமைப்பினரின் பேரணிக்கு பொலிஸார் தடை விதிப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்கள் தொடர்ந்து சேதமாக்கப்பட்டு வருவதைக் கண்டித்து இந்து ஆலயங்களைப் பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் இடம்பெறவிருந்த அமைதிப் பேரணிக்கு பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

இந்நிலையில் இப்பேரணியில் கலந்து கொள்ளச் சென்றவர்கள் மட்டக்களப்பு தேற்றாத்தீவு பிள்ளையார் ஆலயத்தில் அவசர கூட்டமொன்றை நடத்தினர். இக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரனும் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்; பொது பல சேனா அமைப்பு ஊர்வலங்கள், பேரணிகள் நடத்துவதாயின் எந்தவொரு பொலிஸ் அனுமதியும் பெறத்தேவையில்லை. ஆனால் தமிழர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் ஊர்வலங்கள், பேரணிகள் நடத்துவதாயின் பொலிஸாரிடம் அனுமதி பெற வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல இந்துக் கோவில்கள் உடைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று மட்டக்களப்பு காந்தி சிலை உட்பட பல இந்துப் பெரியார்களின் உருவச் சிலைகள் உடைக்கப்பட்டன. ஆனால் இதை செய்தவர்கள். இன்னும் கைது செய்யப்படவில்லை. இதனால் எங்களுக்கு பாரிய சந்தேகம் ஏற்படுகின்றது. இதில் சம்பந்தப்பட்டோரை கண்டுபிடிக்க படைத்தரப்பினர் ஆர்வம் காட்டவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் பல இந்துக் கோவில்கள் உடைக்கப்பட்டும் கோவில்களின் உடைமைகளுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டும் கோவில் சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டும் உள்ளன. இன்னும் இதில் சம்பந்தப்பட்டோர் கைது செய்யப்படவில்லை.

இதைக் கண்டித்து கவனயீர்ப்பு அமைதிப் பேரணியொன்றை நடத்த திட்டமிட்டிருந்தோம். ஆனால் அதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. பொலிஸார் அனுமதி தருவதற்கு மறுத்துள்ளனர். எனினும் பிறிதொரு தினத்தில் இந்த பேரணியை நடத்துவோம் எனத் தெரிவித்துள்ளார். (செ-1)

# நாடு முழுவதும் சுற்றிவளைப்பு ஒரு கோடிக்கு மேல் அபராதம்

இவ்வாண்டில் உணவு சட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கை மூலம் ஒரு கோடியே 72 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் அபராதம் அறவிடப்பட்டுள்ளதாக இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் இந்தக் காலப்பகுதியில் 16 ஆயிரத்து 233 வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டதாக சங்கத்தின் உபசெயலாளர் சி.எஸ்.முத்துகுட தெரிவித்துள்ளார்.

இதில் மூவாயிரத்து 386 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பாவனைக்கு உகந்ததல்லாத உணவு பொருட்களை விற்பனை செய்தல், காலாவதியான உணவு பொருட்களை விற்பனை செய்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-2)

# உறுதியான அரசியல் தீர்வுக்காகவே தமிழர்கள் இரத்தம் சிந்தினார்கள்

## தமிழ்த் தலைவர்கள் அதை உணர வேண்டும்-சண் மாஸ்ரர்

தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுத் தரமுடியாத 13-வது திருத்தச் சட்டத்தினுள் தமிழ் மக்களை முடக்கிவிட இந்திய அரசு முயன்று வருகின்றது. 13-வது திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு போதும் இறுதித் தீர்வாக அமையாது. இதனால் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை என மனித உரிமை ஆர்வலரும் எழுத்தாளருமான சண் மாஸ்ரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் 1987-ம் ஆண்டு நடைபெற்ற இந்திய -இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட 13-வது திருத்தச் சட்டம் மாகாண சபைகளுக்கான அதிகாரங்களையே கொண்டமைந்துள்ளது. அதிலும் மாகாண சபைகள் தீர்மானங்களை மாத்திரமே எடுக்க முடியும். இறுதி முடிவை மாகாண ஆளுநரே எடுப்பதாக அச்சட்டம் அமையப் பெற்றுள்ளது. அன்று ராஜீவுடன் ஜே. ஆர்.ஜெயவர்த்தன செய்து கொண்ட இவ் ஒப்பந்தம் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக பூதாகாரமாகக் காட்டப்பட்டுள்ளது.

இதனையே தற்போது இந்தியாவும் தமிழ் மக்கள் மீது திணித்துவிட முயற்சி செய்து வருகின்றது.

13-வது திருத்தச் சட்டத்தை தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக ஏற்றுக் கொண்டால் அதுவே அவர்கள் தமிழ் சமூகத்திற்குச் செய்யும் பாரிய வரலாற்றுத் துரோகமாக அமையும். 13-வது திருத்தச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள மாகாண சபையின் அதிகாரங்களுடன் தமிழ் மக்கள் முடக்கிவிடப்படக்கூடாது. இது அவர்களின் நீண்டகால அரசியல் அபிலாசைக்கு ஈடாக அமைந்துவிடாது. இதனை தமிழரின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வாக தமிழ்த் தலைவர்கள் ஏற்றுக் கொண்டால் கடந்த காலங்களில் தமிழர்கள் நடத்திய போராட்டங்கள் அனைத்துமே வீணற்றவையாகப் போய்விடும்.

இந்திய அரசாங்கம் 13-வது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலேயே தமிழ் மக்களுக்கு தீர்வினை வழங்குவதில் உறுதியாக இருந்து வருகின்றது.

விடுதலைதப்புலிகள் இருந்த காலத்தில் இந்த 13-வது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளுமாறு இந்தியா அப்போது அவர்களை நிர்ப்பந்தித்து வந்தது. அதனை விடுதலைப்புலிகள் ஏற்கவில்லை. பின்னர் யுத்தம் முடிவுக்கு வந்ததும் தமிழ் அரசியல் கட்சிகளை அழைத்து இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன் 13ஐ தீர்வாக ஏற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்தினார். இவரைப் போலவே 2011 -ல் இந்திய காங்கிரஸ் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப் பனும் 13 ஐ தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக காட்டிவிடுவதில் தீவிரம் காட்டி வந்தார்.

இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்து இந்த 13-வது திருத்தச் சட்டத்தை தமிழர்களின் தலையில் கட்டிவிடப் பார்க்கின்றது. ஏககாலத்தில் 13-வது திருத்தச் சட்டத்துக்கு எதிராக பேரினவாத சக்திகளால் முன்னெடுக்கப்படும் பிரசாரங்களும், புதுடில்லியின் நகர்வுகளும் தமிழர்களுக்கு தனிநாட்டையே கொடுத்து விட்டதாக தோரணையை காட்ட முனைவது வேடிக்கையாகவுள்ளது. இதற்கு நாம் உடன் பட்டு போகக் கூடாது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-8)

### வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## முயற்சி- பயிற்சி



தன் தகைமை, திறமை, தவறு, தேவை இவற்றைச் சரியானபடி கணித்துக்கொண்டு சிந்தனையோடு திட்டமிட்டு விடாமுயற்சியோடு வினையாற்றினால் வெற்றி நிச்சயம். அமைதியும் நிறைவும் மகிழ்ச்சியும் உண்டாம். இக்குண்டலினி யோக முறை இந்தத் துறையில் மனிதனை உயர்த்திச் சிறப்படையச் செய்கிறது.

உங்களுக்கு என்னவேண்டும்? என்ன முயற்சி எடுத்தீர்கள்? எங்கே எவ்வாறு ஏமாற்றமடைந்தீர்கள்? உங்களுக்காகவே சிந்தனையைத்தூண்டி ஆராயுங்கள். உங்கள் மனம் ஒரு பெரிய இயற்கைச் சுரங்கம். அதில் எல்லாச் செல்வங்களும் உள்ளன. முறையாக முயன்று பெறவேண்டும் அவ்வளவே.

இன்ப துன்பச் சுழலில் சிக்கித் தவித்துக்கொண்டிருப்பதே வாழ்க்கை . வாழ்வில் துன்பங்களும் சிக்கல்களும் பெருகும்போது அதிலிருந்து தன்னை மீட்டுக்கொள்ள மனிதன் விரும்புகிறான், முயல்கிறான் என்றாலும் முன்செய்த தவறுகளின் விளைவுகள், செயல்களின் பழக்கப் பதிவுகள் இரண்டும் கொண்ட முடிவுகள் இவையெல்லாம் அவன் விடுதலைக்குத் தடைகளாக இருக்கின்றன. [illegible] மாற்றி விளக்கம் பெற்று வாழும் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவுடன் பேச வடகொரியா விருப்பம்

(பியாங்யாங்)

**அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த வடகொரியா விருப்பம் தெரிவித்துள்ளது. தென்கொரியாவுடன் நடக்கவிருந்த பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்ட வடகொ ரியா, தற்பொழுது அமெரிக்காவுடன் பாதுகாப்பு மற்றும் அணுசக்தி குறித்த பேச்சுவார் த்தைகளில் ஈடுபட விருப்பம் தெரிவித்துள்ளது.**

வடகொரியாவில் நிலவும் இறுக்கமான சூழ்நிலை யைக் குறைக்கவும், இடைக் கால போர் ஒப்பந்தத்தை அமைதி ஒப்பந்தமாக மாற் றும் பொருட்டும் அணுசக்தி குறித்தும் நேர்மையான முறை யில் விவாதிக்க விரும்புவ தாக கொரியா தெரிவிக்கின்றது.

இப் பேச்சுவார்த்தைக் கென முன்நிபந்தனைகள் எதையும் அமெரிக்க அரசு விதிக்கக்கூடாது என்று கூறும் கொரியா, இந்தப் பேச்சுவார்த்தை எங்கு, எப் போது நடக்கும் என்பது குறி த்த விபரங்களைத் தெரி விக்கவில்லை.

அமெரிக்க அரசு இந்த வாய்ப்பை நழுவ விடாது, தங்களுடைய நல்லெண்



ணம் கொண்ட உறுதியான நடவடிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவ் அறிக்கை தெரிவிக் கின்றது.

கடந்த டிசம்பர் மாதம் வடகொரியா ஏவுகணை சோதனையில் ஈடுபட்ட போதும், பெப்ரவரி மாதம் அணுசக்தி சோதனையில் ஈடுபட்ட போதும் ஐக்கிய நாடுகள் சபை அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடை களை விதித்தது.

இதனால் கோபமடைந்த வடகொரியா, அமெரிக்கா வின் மீது பலமுறை சூடான அறிக்கைகளை வெளியிட்ட தோடு ஒவ்வொரு முறையும் வெளியுலகின் கவனத்தை ஈர்க்க பிரச்சினைகளைக் கிளப்பிய பின்பு பேச்சுவார்த் தைக்கு அழைப்பது கொரியா வின் இயல்பாகி விட்டது என்று ஆய்வாளர்கள் கருது கின்றனர்.

எனவே, தற்போது அமெ ரிக்காவைப் பேச்சுவார்த் தைக்கு அழைத்திருக்கும் நிலை யில் மேற்கொண்டு நடை பெறுவதை அறியகாத்திரு க்க வேண்டும் எனவும் அவர் கள் கூறுகின்றனர். (அ-2)

# துப்பாக்கி வைத்திருப்பவருக்கு 20 வருட சிறைத் தண்டனை

## வெனிசுலாவில் சட்டம்

வெனிசுலாவில் துப்பா க்கி கட்டுப்பாட்டு மசோதா நிறைவேறியது.

வெனிசுலாவில் புதிதாக ஜனாதிபதி பதவியேற்றுள்ள நிகோலஸ் மதுரோ, துப்பா க்கி கலாசாரத்தை கட்டுப்ப டுத்தும் புதிய மசோதாவில் கையெழுத்திட்டுள்ளார்.



29 மில்லியன் மக்கள் தொகை கொண்ட வெனிசு லாவில் 2009ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் 15 மில்லி யன் துப்பாக்கி போன்ற ஆயு தங்கள் இருப்பது தெரியவ ந்தது. இந்த ஆண்டின் முதல் காலாண்டில் மட்டும் 3 ஆயி ரத்து 400 பேர் துப்பாக்கிச் சூட்டில் பலியானார்கள்.

இதனைக் கட்டுப்படுத்த வெனிசுலா நாட்டின் புதிய அரசு துப்பாக்கி கட்டுப்பாட்டு மசோதாவை எதிர்க்கட்சிக ளின் முழு ஆதரவுடன் நிறை வேற்றியுள்ளது.

சட்டத்திற்கு புறம்பாக ஆயுதங்களை விற்பவர்கள் மற்றும் வைத்திருப்பவர்க ளுக்கு 20 வருடம் வரை சிறைத் தண்டனை வழங்க இந்த சட்டம் வழிவகை செய் கிறது. (அ-2)




# ஈரான் ஜனாதிபதியாக ஹசன்ருஹானி தெரிவு



ஈரான் ஜனாதிபதி தேர்தல் நிறைவடைந்த நிலையில், ஈரானின் மறுசீரமைப்பு கட்சி யின் வேட்பாளர் ஹசன்ரு ஹானி புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நடைபெற்று முடிந்த தேர் தலில் ஹசன்ருஹானி ஒரு கோடியே எண்பத்தைந்து இல ட்சம் வாக்குகளைப் பெற்றுள் ளதாக உள்துறை அமைச் சகம் அறிவித்துள்ளது.

வாக்குப் பதிவுகளில் 51 சதவீதத்துக்கும் சற்று கூடுத லானவாக்குகளை அவர்பெறு வதாகஇந்தஎண்ணிக்கைஅமை ந்துள்ளது. தற்போது புதிய ஜனாதிபதியாக தேர்ந் தெடு க்கப்பட்ட ஹசன்ருஹானிஒரு சமூக சீர்திருத்த வாதி ஆவார்.

பழைமைவாதிகள் நிறை ந்த ஈரானில் இவர் சில சமூக சீர்திருத்தங்களை கொண்டு வர பாடுபட்டு வருகிறார்.

அணு ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தையிலும் இவர் பங்கேற்றுள்ளார்.

இவரது ஆட்சிக் காலத் தில் அமெரிக்காவுடனான பிண க்கு நீங்கி எண்ணெய் வளம் மிக்க ஈரான் பொருளாதார ரீதியாகவும் முன்னேறும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதேவேளை ஈரான் ஜனா திபதியாக ஹசன்ருஹாணி தேர்வு செய்யப்பட்டதையடு த்து பா.ஜ.சார்பில் வாழ்த்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

பா.ஜ.தேசிய தலைவர் ராஜ் நாத்சிங் தனது டுவிட்டரில் வெளியிட்டுள்ள செய்தியில், ஈரானில் மிதவாத போக்கு வலுப்பெற்றுள்ளது. இதன் தலைவரான ஹசன்ரு ஹாணி புதிய ஜனாதிபதியா கத் தெரிவு செய்யப்பட்டதற்கு பா.ஜ. சார்பில் வாழ்த்துக்கள். இந்தியாவுடனான நல்லுற வும் வலுப்பெறும். இந்த நல் லுறவு வளைகுடா நாடுகள் முழுமைக்கும் உதவும் இவ்வாறு அந்த வாழ்த்து செய்தியில் கூறியுள்ளார். (அ-2)

# பாக். மகளிர் கல்லூரியில் தீவிரவாதிகள் தாக்குதல்

## 23 பேர் பலி; பலர் காயம்





(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் மகளிர் கல் லூரி பேருந்தை தீவிரவாதி கள் குண்டுவைத்து தகர்த் ததுடன் வைத்தியசாலையில் புகுந்து கண்மூடித்தனமாக சுட்டுமுள்ளனர். இந்த சம்ப வங்களில் 23 பேர் கொல்ல ப்பட்டனர். 22 இற்கும் மேற் பட்டோர் காயமடைந்தனர்.

பாகிஸ்தானின் குவெட்டா நக ரில் சர்தார் பகதூர் கான் பெண்கள் பல்கலைக்கழகம் உள் ளது. நேற்று முன்தினம் மாலை யில் ஏராளமான மாணவிக ளும் ஆசிரியர்களும் வீட்டு க்கு செல்ல கல்லூரி வளாகத் தில் இருந்த பேருந்தில் காத் திருந்தனர்.

அப்போது அதில் வைக்க ப்பட்டிருந்த குண்டு திடீரென வெடித்து தீப்பற்றி எரிந்தது. இச்சம்பவத்தில் ஏராளமான பெண்களுக்கு கடுமையான தீக்காயம் ஏற்பட்டது. 23 மாண விகள் இறந்தனர். 22 பேர் காயமடைந்தனர் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் அனை வரும் அருகில் உள்ளபோலன் வைத்தியசாலைக்கு அழை த்துச் செல்லப்பட்டனர். அப் போது வைத்தியசாலைக்கு ள்ளே சில தீவிரவாதிகள் புகு ந்து கண்மூடித்தனமாக துப் பாக்கிச் சூடு நடத்தினர். துப் பாக்கிச் சூடு நடந்த போது பலுசிஸ்தான் தலைமை செய லாளர் உள்ளிட்ட உயர் அதி காரிகள் அங்கு இருந்தனர். தீவிரவாதிகளின் சூட்டில் குவெட்டா துணை குழுவினர் அப்துல் மன்சூர் காகர் இறந் தார்.

மக்கள் அச்சத்தில் அங் கும் இங்கும் சிதறி ஓடினர். சில தீவிரவாதிகள் மருத்துவ மனையின் மாடியில் நின்று கொண்டு வைத்தியசாலை க்கு வருபவர்களை சுட்டு வீழ்த்தினர். குவெட்டாவில் அடுத்தடுத்து நடந்த தாக் குதல் சம்பவங்கள் மக்கள் இடையே பெரும் பதற்றத் தையும் பீதியையும் ஏற்படு த்தியது. இந்த இரு தாக்குத ல்களுக்கும் லஷ்கர் இ ஜாங்வி அமைப்பு பொறுப் பேற்றுள்ளது. (அ-2)

# மரண தண்டனையை தடைசெய்வது குறித்து விரைவில் உரிய நடவடிக்கை

(நியூயோர்க்)

மரண தண்டனையை முற்றிலுமாக தடை செய்வது குறித்து விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள் ளார்.

ஸ்பெயின் தலைநகர் மாட ரிட்டில் நடைபெற்ற மரண தண்டனைக்கு எதிரான ஐந் தாவது உலக மாநாட்டை யொட்டி அனுப்பிய செய்தி யில் அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் குறிப்பிட்டுள்ளவை வருமாறு,



மரண தண்டனைக்கு எதிராக சர்வதேச அளவில் எடுக்கப்பட்டு வரும் நடவடி க்கைகள் பாராட்டுக்குரி யவை. இருப்பினும் சட்டரீதி யான நடைமுறைகள், மதப் பின்னணி, குறிப்பிட்ட பகுதிக ளில் நிலவும் வாழ்வியல் சூழ்நிலை, கொடூரமான குற் றம் போன்றவற்றால் ஒரு சில நாடுகளில் இன்னும் மரண தண்டனை நிறைவேற்றப் பட்டு வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளில் 174 நாடுகள், மரண தண்ட னையை இரத்து செய்வதாக கடந்த ஆண்டு அறிவித்துள் ளன. குறைந்த எண்ணிக் கையிலான நாடுகளில் மரண தண்டனை அமுலில் இருந்தாலும் அது கவலை யளிப்பதாகவே உள்ளது என் றார். (அ-2)



லண்டன் மகாராணி எலிசபெத்தின் பிறந்தநாள் விழா பக்கிங்ஹாம் அரண்மனையில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இதையொட்டி நடைபெற்ற விமான சாகச கண்காட்சியை பார்க்கும் ராணி எலிசபெத் இளவரசி கேத் மிடில்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரையிறுதியில் இங்கிலாந்து



நியூசிலாந்துக்கு எதிரான சம்பியன்ஸ் தொடரின் 11-வது லீக் போட்டியில் இங்கிலாந்து அணி 10 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

இங்கிலாந்தில் 7-வதும் இறுதியுமான சம்பியன்ஸ் தொடர் நடைபெற்று வருகிறது.

இதன் நேற்றைய லீக் ஆட்டம் கார்டிவ்வில் நடைபெற்றது.

இவ்வாட்டத்தில் குழு ஏயைச் சேர்ந்த இங்கிலாந்து அணி, நியூசிலாந்து அணியைச் சந்தித்தது.

போட்டி மழை கார்ரணமாக ஆரம்பமாக தடைப்பட்டதினால் இவ்வாட்டம் தலா 24 ஓவர்களைக் கொண்ட போட்டியாக மாற்றப்பட்டது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, அணித் தலைவர் அலிஸ்ரயர் குக்கின் அபார ஆட்டத்தினால் 23.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 169 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய அணித்தலைவர் அலஸ்ரயர் குக் 47 பந்துகளில் 64 ஓட்டங் களை எடுத்தார்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக கைல் மில்ஸ் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

170 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணியால் 24 ஓவர்களின் நிறைவில் 8 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 159 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக சிறப்பாக ஆடிய கேன் வில்லியம்சன் 54 பந்துகளில் 67 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அண்டர்சன் 34 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இவ்வெற்றியின் மூலம் குழு ஏயிலிருந்து அரையிறுதிக்குத் தெரிவான முதலாவது அணியாக இங்கிலாநது அணி காணப்படுகிறது.

இன்று நடைபெறும் இலங்கை - அவுஸ்திரேலியாவுக்கு இடையில் நடைபெறும் ஆட்டம் குழு ஏயிலிருந்து அரையிறுதிக்கு நுழையும் மற்றைய அணியைத் தீர்மானிக்கும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.




# இங்கிலாந்து வீரர்கள் பந்தை சேதப்படுத்தியுள்ளனர்




இருவரும் புதிய பந்தை கொண்டுவரச் செய்து பயன்படுத்தினர்.

இது குறித்து போட்டி முடிவில் இங்கிலாந்து அணியின் அணித்தலைவர் அலைஸ்டர் குக் கூறுகையில், பந்தின் தன்மை இயற்கையாகவே மாறிவிட்டது.

இதை மாற்றுவது என்று நடுவர்கள் எடுக்கும் முடிவை ஏற்றுத்தான் ஆக வேண்டும் என்றும் ஆனால் சில நேரங்களில் சரியான முடிவை எடுப்பதில்லை என்று நினைக்கிறேன் எனவும் கூறினார்.

இலங்கைக்கெதிரான சாம்பியன்ஸ் கிண்ண லீக் போட்டியில், இங்கிலாந்து வீரர்கள் பந்தை சேதப்படுத்தினர் என்று முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் பாப்வில்லிஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

இங்கிலாந்து, இலங்கை அணிகள் மோதிய சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் லீக் போட்டி கார்டிப்பில் நடந்தது.

இங்கிலாந்தின் இலக்கை (293/7) துரத்திய இலங்கை அணி 119/2 ஓட்டங்கள் எடுத்த போது பந்தின் தன்மை மாறியுள்ளதாக சங்கக்காரா, நடுவரிடம் புகார் செய்தார்.

இதையடுத்து, நடுவர்கள் அலீம் தர் (பாகிஸ்தான்), பில்லி பவுடன் (நியூசிலாந்து)

இது குறித்து பாப் வில்லிஸ் கூறுகையில், பந்தின் தன்மை மாறியுள்ளது என்று துடுப்பெடுத்தாடும் அணி அல்லது நடுவர்கள் எங்காவது புகார் கொடுத்ததாக கேள்விப்பட்டு உள்ளீர்களா?

யாரோ பந்தை சேதப்படுத்தியுள்ளனர் என நடுவருக்கு தெரியும் என்றும் இது யார் என்று நான் சொல்ல மாட்டேன் எனவும் கூறினார்.

# சாதனையை முறியடித்தார் லியோனல் மெஸ்சி




ஆர்ஜென்டினாவின் முன்னணி கால் பந்து வீரர் லியோனல் மெஸ்சி, முன்னாள் நட்சத்திர வீரர் மரடோனாவின் கோல் சாதனையை முறியடித்துள்ளார்.

ஆர்ஜென்டினா தேசிய அணிக்காக 91 சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ள மரடோனா 34 கோல்கள் அடித்திருந்தார்.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற போட்டியில் கவுதமாலா அணியை ஆர்ஜென்டினா அணி 4-0 என்ற கோல்கணக்கில் தோற்கடித்தது. இப்போட்டியில் மெஸ்சி ஹாட்ரிக் கோல்கள் அடித்து, தனது கோல்கள் எண்ணிக்கையை 35 ஆக அதிகரித்ததன் மூலம் மரடோனாவின் சாதனையை முறியடித்துள்ளார்.

மேலும் ஹெர்மன் கிரெஸ்போவின் கோல் சாதனையை சமன் செய்துள்ள மெஸ்சி, முன்னாள் வீரர் கேபிரியேல் பாட்டிஸ்டுடாவை விட 21 கோல்கள் பின் தங்கியுள்ளார்.

மரடோனாவைவிட மெஸ்சி சிறந்த வீரர் என்று ரசிகர்கள் பெரும்பாலும் கூறி வருகின்றனர். அதனை நிரூபித்துள்ள மெஸ்சி, அதிக கோல்கள் அடித்த ஆர்ஜென்டினா வீரர்களில் இப்போது 3-வது இடத்தில் இருக்கிறார்.

தற்போதைய வீரர்களில் அவருக்கு போட்டியாக கோல் அடிக்க ஒருவரும் இல்லை. மெஸ்சிக்கு இப்போது 25 வயதுதான் ஆகிறது. எனவே, தனது நாட்டின் அதிக கோல் அடித்த வீரர் என்ற நிலையை அவர் எட்டுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கிரிக்கெட் சுற்றுப் போட்டி கிறாஸ்கோப்பர் காலிறுதியில்

இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட அணிகளுக கிடையில் நடைபெற்று வரும் 50 பந்து பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் கிறாஸ்கோப்பர் அணி காலிறுதிக் குத் தகுதிபெற்றுள்ளது.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற, காலிறுதித் தெரிவிற்கான போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய (கே.சி.சி.சி) அணியினை எதிர்த்து கிறாஸ்கோப்பர் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி, 32 பந்துபரிமாற்றங்களில் அனைத்து இலக்கு களையும் இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது.

வல்லவக்குமரன் 77 ஓட்டங்களையும் இராகுலன் 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கிறாஸ்கோப்பர் அணி சார்பாக சரண்ராஜ் 5 இலக்குகளை வீழ்த்தினார்.

181 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கிறாஸ்கோப்பர் அணிக்கு, முதல் விக்கெட் இணைப்பாட்டமாக டிலோசன் - காந்தசீலன் 177 ஓட்டங்களைப் பகிர்ந்து வெற்றியினை இலகுபடுத்தினர்.

கிறாஸ்கோப்புர் அணி 36 பந்துபரி மாற்றங்களில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் டிலோசன் 86, காந்தசீலன் 74 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

## சம்பியன் கிண்ணம்

## இன்றைய ஆட்டம்

இலங்கை

VS

அவுஸ்ரேலியா

# உப பொலிஸாருக்கான பயிற்சி முடிவடைவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 60 தமிழ் உப பொலிஸ் உத்தியோகத்தர்கள் இன்று பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறுகின்றனர்.

களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரியில் கடந்த ஒன்றரை வருடங்களாக இவர்கள் பயிற்சி பெற்று வந்தனர் .இவர்களுடன் சுமார் 300 உப பொலிஸ் உத்தியோகத்தர்கள் இன்று பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறுகின்றனர். (செ-6)

# மகிந்தன் வெற்றிக்கிண்ண கால் பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் அங்கத்துவக் கழகங்களின் கால் பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்று வந்த கால்பந்தாட்டப் போட்டிகளின் அரையிறுதிப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியினை எதிர்த்து பாடும்மீன் நீல அணியும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியினை எதிர்த்து குருநகர் பாடும்மீன் மஞ்சள் அணியும் மோதவுள்ளன.

# ஆமை இறைச்சியுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

ஆமை இறைச்சியுடன் குருநகர் பகுதியைச்சேர்ந்த இருவரை யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்றுக்காலை 7மணியளவில் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரும் இன்று யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தபடவுள்ளனர்.

சுமார் 20 கிலோக்கிராம் ஆமை இறைச்சி இவர்களிடமிருந்து மீட்கப் பட்டுள்ளது என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (செ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேடிக்கை...

முடிவில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை முழுமையாக இணைக்க, நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் பின்னரே, அங்கு தேர்தல்களை நடத்த வேண்டும்.

காணி, பொலிஸ், கல்வி போன்ற உரிமைகளில் தமிழர்களுக்கு முழு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

இந்த அதிகாரங்கள் அனைத்தும் மாகாண அரசுக்கு உள்ளது என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

தமிழர்களின் காணிகளை சிங்களவர்கள் ஆக்கிரமித்துக் கொள்வதும், தமிழர்களின் வாழ்வாதாரங்களை பறித்துக் கொள்வதும் தீவிரமடைந்து வருகிறது.

இதை, இலங்கை அரசு தடுத்து நிறுத்த வேண்டும்.

தமிழை ஆட்சி மொழி நிலையில் இருந்து நீக்கும் நடவடிக்கைகளையும், மாகாண சபையின் அதிகாரங்களை குறைக்கும் நடவடிக்கைகளையும் இலங்கை அரசாங்கம் கைவிட வேண்டும்.

1987-ல் கையெழுத்திடப்பட்ட இந்திய - இலங்கை உடன்பாட்டின்படி, கொண்டு வரப்பட்ட 13-வது சட்டத்திருத்தத்தை இலங்கை அரசாங்கம் மதிக்காமல் நடந்து வருகிறது.

இதை, இந்தியா கண்டு கொள்ளாமல் இருக்கக் கூடாது. அந்த உடன்பாடு ஏற்பட இந்தியாவே காரணம்.

எனவே, இந்தியாவே தலையிட்டு, அந்த உடன்பாட்டைக் காப்பாற்ற முன்வர வேண்டும். இவ்வாறு தீர்மானங்களில் கூறப்பட்டுள்ளது.

இந்த தீர்மானங்களின் பிரதிகளை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் ஆகியோருக்கு வழங்கவும் மாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.(செ-11)

# யுத்தத்தில் வென்ற அரசுக்கு மதவாதம் சவாலானது எப்படி?

## பாஸ்கரா கேள்வி

இலங்கை அரசானது இலங்கையில் நடைபெறும் மதவாத செயற்பாட்டிற்கும் தனக்கும் தொடர்பில்லை எனின் அதை தடுத்து நிறுத்தவதற்கும் இல்லாதொழிப்பதற்கான அர்த்தம் புஷ்டியான கைங்கரியங்களை செய்து சிறுபான்மை இன மக்களுக்கும் உலகிற்கு நான் மதவாதி இல்லை எனக் காட்ட வேண்டிய இறுதி காலம் இது என ஜனநாயக மக்கள் முன்னணி ஊடகச் செயலாளரும் கொழும்பு மாநகரசபை உறுப்பினரும் வீடமைப்பு நிலையியற்குழு தலைவருமான சி.பாஸ்கரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் கடந்த 3 தசாப்த கால யுத்தத்தை வெற்றி பெற்றதாக பறைசாற்றி 3 வருடங்களுக்கு மேலாக தமது மக்களை வெற்றி நாளை கொண்டாடும் அரசு மதவாதத்தை வெல்ல முடியாததுக்கு காரணம் என்ன என வினவ வேண்டியுள்ளது..?

வெள்ளை வான் கடத்தல், கறுப்பு மனிதன், கிறிஸ் மனிதன், ஒயில் வீசும் மனிதன் என்று இப்போது கோயில், பள்ளிவாசல், தேவாலயம், பள்ளிகூடம் உடைக்கும் மனிதன் எனக் காலத்திற்கு காலம் தானாக தோன்றி தாக்குதல் நடத்தியவர்கள் இராணுவ முகாமுக்குச் சென்று மறைந்தது கடந்த கால வரலாறு. இதேபோல் விக்கிரகங்களை தாக்குதல்; உடைத்தல், கோவில் களவுகளுக்கும் அரசுக்கும் தொடர்பில்லை என்பதை நிரூபிக்க, அரசு குற்றவாளிகளை உடன் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி குற்றத்தை நிரூபித்து தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும். இல்லையேல் பழைய கறுப்பு, கிறிஸ், ஒயில் மனிதர்கள் தப்பித்த கதையாக மதவாத தாக்குதல் மனிதரும் இருப்பின் அரசு தொடர்பு என்ற சிந்தனை தவிர்க்க முடியாததாக போய்விடும்.

மேலும் அரசு; பொது பல சேனா, இராவணா சக்தி, சிங்கள ராவய, சிங்கள ஹெல உறுமய, தேசிய சங்க சமேளன கட்சிகளின் தான்தோன்றித்தனமான மதவாத கருத்துக்களையும் செயற்பாடுகளையும் அரசு தடுக்காமல் நாட்டின் ஜனாதிபதி வாய் மூலம் மதவாத கருத்துக்களை எதிர்ப்பதாக கூறுவது சிறுபான்மை மக்களையும் உலகையும் ஏமாற்றும் செயலாகும்.

மேலும் மதவாத சக்தியான பொது பல சேனா காரியாலயத்தை பாதுகாப்பு செயலாளர் திறந்து வைத்தது மதவாத செயற்பாடுகளுக்கு அரசின் ஆதரவு உண்டு என்ற மாயையும் உண்டுபண்ணும்.

நிஜமாக ஜனாதிபதியின் கூற்றான மதவாத செயற்பாடுகளுக்கு அரசின் ஆதரவு இல்லை என்பது உண்மையாயின் புலியை வென்றேன் என்று கூறும் பாதுகாப்பு செயலாளர் உண்மையான மதவாத செயற்பாட்டாளர்களை அடக்கும் அர்த்த புஷ்டியான நடவடிக்கையை எடுத்து உறுதிப்படுத்த வேண்டும் என்றார்.(செ-11)

## மோடியின் முன்னிலையால்

# பா.ஜ.க-ஐ.ஜ.த உறவு முறிந்தது

(புதுடில்லி)

பாரதிய ஜனதா கட்சி நரேந்திர மோடியை பாராளுமன்ற தேர்தலில் முன்னிலைப் படுத்துவதற்கு கூட்டணி கட்சியான ஐக்கிய ஜனதா தலைவர்கள் சந்தித்து சமரச முயற்சியில் ஈடுபட்டனர். இதில் பயன்கிடைக்கவில்லை.

இதனால் பாரதிய ஜனதா - ஐக்கிய ஜனதா தளம் கூட்டணி உடைவது உறுதியானது. இந்நிலையில் நேற்று பீகார் மாநில மந்திரி சபை நிதிஷ்குமார் தலைமையில் கூடியது. இதை பாரதிய ஜனதா மந்திரிகள் புறக்கணித்தனர். அவர்கள் சுஷில் குமார் மோடி தலைமையில் தனியாக கூடி ஆலோசனை நடத்தினார்கள்.

பிகாரின் மந்திரி சபை கூட்டம் முடிந்த பின் நிதிஸ்குமார் மாநில ஆளுநர் படேலை சந்தித்து பாரதிய ஜனதாவுடனான உறவை முறித்துக் கொள்வதாகக் கடிதம் கொடுத்தார்.

அத்துடன் தனக்கு ஆதரவு அளிக்க தயாராக இருக்கும் சுயேட்சை எம்.எல்.ஏ பட்டியலையும் கொடுத்தார். இதனால் 17 வருட ஐக்கிய ஜனதா தளம் - பாரதிய ஜனதா கூட்டணி உடைந்தது.

ஆளுநர் சந்திப்புக்குப் பின் நிதிஸ்குமார் செய்தியாளரிடம் கூறியதாவது,

ஆளுநரைச் சந்தித்து பாரதிய ஜனதா உடனான உறவை முறிந்துக்கொள்கிறேன். அத்தடன் தனக்கு ஆதரவு தரும் சுயேட்சை எம்.எல்.ஏக்களின் பட்டியலையும் அளித்தேன். சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிக்க தயாராக இருக்கிறேன் என்று கூறினார்.

இதற்கிடையே ஐக்கிய ஜனதா தளம் தலைவர் சரத் யாதவ் தேசிய ஜனநாயக கூட்டணியின் ஒருங்கிணைப்பாளர் பதவியை இராஜினாமா செய்துள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. இதனால் ஐக்கிய ஜனதா தளம் பா.ஜனதா கூட்டணியில் இருந்து விரைவில் விலகும் அறிவிப்பை வெளியிடும் என்று தெரிகிறது. (செ-11)

## ஈழ அகதிகள்...

வருகின்றனர்.

இம்மாதம் முதலாம் திகதி குறித்த பிரதேசத்தில் ஈழ அகதி களின் வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்களின் வெறியாட்டத்தில் நான்கு பேர் கத்திவெட்டுக்குக் இலக்காகினர் என்பது குறிப்பிடத்தக்கது.(செ-11)

## குடும்பஸ்தர் மீது...

தியசாலையில் சிகிச்சைக்காக
அனுமதிக்கப்பட்டு பின் நேற்று காலை
யாழ்ப்பாணம் போதனா
வைத்தியசாலையில் சிகிச்சைக்காக
அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (செ-6)

## மட்டக்களப்பில்...

காகியுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார், சந்தேகத்தின் பேரில் இருவரைத் தடுத்து வைத்துள்ளனர். (செ-11)

## வாஸ் குணவர்த்...

கொலை சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்கள். அவர்களது வேலையிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்தன தெரிவித்தார். (செ-11)

## சிறப்பு தூதுவரை...

வரை நியமிக்க இந்தியாவும் திட்டமிடுகிறது.

இதற்காக இலங்கைக்கான சிறப்புத் தூதுவராக அண்மையில் ஓய்வுபெற்ற இராஜதந்திரியான ஹர்தீப்சிங் பூரி நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவர் அண்மையிலேயே இந்தியாவுக்கான ஐ.நாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பதவியில் இருந்து ஓய்வுபெற்றவர்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில், பூரி அரசியல் அதிகாரியாகப் பணியாற்றியவர்.

இந்திய - இலங்கை உடன்பாட்டுக்கான முன்னாயத்த நடவடிக்கைகளில் பங்கேற்றவர் என்பதுடன் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் பூரி நெருக்கமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## நல்லைக்குமரன் மலர் - (21) - 2013

நல்லூர்க் கந்தப் பெருமானின் மகோற்சவத்தை முன்னிட்டு யாழ்.மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழுவால் வருடந்தோறும் வெளியிடப்படும் நல்லைக் குமரன் மலருக்கு (21) பொருத்தமான ஆக்கங்களை வேண்டி நிற்கின்றோம்.

**ஆக்கங்கள்**

- ஏற்கெனவே வெளிவந்த நல்லைக் குமரன் மலர்கள் அல்லது வேறு மலர்களில் வெளிவராததாக இருத்தல் வேண்டும்.
- சைவசமய ஆய்வுகளாகவும், சைவ சமயதத்துவ விளக்கங்களாகவும் நல்லைக் கந்தனின் பெருமைகளை இயம்புவனவாகவும் இருத்தல் அவசியம்.
- கணனி மூலம் பாமினி எழுத்தில் (Font Size 12) பதிப்புச்செய்து அச்சுப் பிரதியாகவும் இறுவெட்டிலும் (ஆகக் கூடியது 5 பக்கம்) தருதல் வேண்டும்.

**ஆக்கங்கள் யாவும்**

**பதிப்பாசிரியர்**
**இல 21/3 A, இந்து மகளிர் ஒழுங்கை,**
**கந்தர்மடம்.**

**என்னும் முகவரிக்கு 30.06.2013 திகதிக்கு முன்னதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.**

**செ.பிரணவநாதன்**
**தலைவர் / ஆணையாளர்**
**சைவசமய விவகாரக் குழு**
**யாழ்.மாநகரசபை.**

(இ)

**காணி விற்பனைக்கு**

உதயசூரியன் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தில் 12 அடி பாதையுடன் கூடிய பரப்பு 2 குளி 2 காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:**
**0779524393**

(3050)

**"நீங்களும் சிறந்த முதலீட்டாளராகலாம்"**

பங்குச்சந்தை முதலீட்டாளர்களுக்கான
**2ம் நிலைப் பயிற்சிப் பட்டறை**
**(நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வு FSA)**
எதிர்வரும் 22.06.2013 சனிக்கிழமை முதல் வார இறுதி நாட்களில்
(மாலை 3.00 – 6.00)

இடம்:
பதிவுகளுக்கு: 0777822014

(C-3645)

**மின்னிணைப்பாளராவதற்கான ...**

**தொழிற் பயிற்சி கற்கை நெறி**



**வீடு மற்றும் நிறுவன மின் இணைப்புத் துறையில் பெறுமதியான சான்றிதழ் தகைமைக்கு இட்டுச் செல்லும் பாடநெறி.**

**3 phase & 1 phase and many more...**

**Diploma in Electrical Wiring**

நவீன மின்னிணைப்பு நுணுக்கங்களுடன் முறையான பாடநெறி மூலம் தெளிவான விளக்கங்களுடன் தனித்தோ, நிறுவனங்களிலோ 100% தொழில் புரிவதற்கான உத்தரவாதம்.

உங்களுக்கு வசதியான நேரங்களில் குறுகிய காலத்தில் நிறைவு செய்ய முடியும்.

கட்டணம் 14 500/=
முதல் 10 பேருக்கு
ரூபா 3000 விசேட கழிவு
077 444 225

வயது வேறுபாடின்றி தொழில் புரிவோரும் பகுதிநேரமாக அதிகவருவாயைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தொழிற்துறை

**IiSEEES NALLUR CAMPUS**
762, பருத்தித்துறை வீதி, நல்லூர். 021 222 4728

(C-3662)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.